விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தகவல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S. ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 20 ஞாயிற்றுக்கிழமை (03.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

# இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்களின் தகவல் அனைத்தும் வெளியிடத் தயார்!

## காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவிப்பு



(முல்லைத்தீவு) இறுதிக்கட்ட யுத்தத்தில் படையினரிடம் சரணடைந்தோரின் விபரங்களை எழுத்துமூலம் வழங்குமாறு தம்மிடம் கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில், அவற்றை வெளியிட தாம் தயாராகவுள்ளதாக காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(15-ம் பக்கம் பார்க்க...)

## வயோதிப தம்பதியரை தாக்கி 8 பவுண் நகை கொள்ளை

### மானிப்பாயில் நேற்று அதிகாலை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை புகுந்த கொள்ளைக் கும்பல், அங்கு வாழ்ந்த வயோதிபத் தம்பதியரைத் தாக்கிவிட்டு 8 பவுண் தங்க நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களை கொள்ளையி 16

## இந்த அரசு நீடித்தால் ஊடகவியலாளர் மட்டுமல்ல; மக்களும் தொங்க வேண்டும்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் இன்னும் சில காலம் நீடித்தால் ஊடகவியலாளர்கள் மட்டுமல்ல, முழுநாட்டு மக்களும் கழுத்தில் 15



## பொன்சேகாவின் அலுவலகத்தின் வாடகை 11.7 மில்லியன் ரூபாய்

(கொழும்பு)

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் பிரதேச அபிவிருத்தி மற்றும் வனவிலங்குகள் அமைச்சின் ராஜகிரிய அலுவலகக் கட்டடம் மாதம் 11.7 மில்லியன் ரூபாய் வீதம் 5 ஆண்டுகள் குத்தகையாக 702 மில்லியன் ரூபாய் செலுத்தும் உடன்படிக்கைக்கு பெறப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த தகவலை சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டு 15

## தென்னிலங்கை மீனவர்கள் வடமராட்சி கடல் பகுதியில் கடலட்டை பிடிக்கக் கூடாது

### உள்ளூர் மீனவர்கள் தீர்மானம் நிறைவேற்றம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் தென்னிலங்கை மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் கடலட்டை பிடிக்கும் தொழிலை உடன் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளூர் மீனவர்களால் நேற்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதிகளில் தொடர்ச்சியாக வெளிமாவட்ட மீனவர்கள் மேற்கொண்டுவரும் கடலட்டை 15

### பிரபாகரனுக்கு இருந்த பெருந்தன்மை

## எந்தவொரு தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் கிடையாது

### கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இருந்த பெருந்தன்மை எந்தவொரு தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் இன்றைக்கு கிடையாது என தெரிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புலிகள் உயிர் சிந்தி பிடித்த ஆனையிறவை இராணுவத்தினரிடம் கொடுக்குமாறு நான் எப்போதும் கூறவில்லை என பல ஆண்டுகளாக அவர்மீது சுமத்தப்பட்டு வந்த குற்றச்சா 16

## பயங்கரவாத தடுப்பு சட்டத்தை உடன் நீக்க வேண்டும்

### இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை உடன் நீக்கவேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அந்த ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம இதனை தெரிவித் 15

## துபாய் அதிகாரிகள் இன்று தொடக்கம் பணிப்பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

பல்வேறு குறைபாடுகளை முன்வைத்து இன்று நள்ளிரவு தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் 15

### காணாமல் போனோருக்கான அலுவலகம்

## காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - மனோ



(கொழும்பு)

காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் ஊடாக காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற 15

## எம்முடன் இருப்பதே மைத்திரியின் அரசியலுக்கு பாதுகாப்பானது

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பாடுகள் மீண்டும் தீவிரமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் ஊடகவியலாளர்க 15



### வவுனியாவில் கடத்தப்பட்ட

## எட்டு மாத குழந்தை பொலிஸாரால் மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கடத்தப்பட்ட எட்டு மாத குழந்தை, புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் 15

### நினைவுத்தூபி மீது

## வவுனியாவில் கல்வீச்சு தாக்குதல்

(வவுனியா)

வவுனியா தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட பொறுப்பாளர் கிறிஸ்டி குகராஜாவின் நினைவுத்தூபி மீது கல்வீச்சு 15

## காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு சர்வதேசம் எந்த தீர்வையும் பெற்றுத் தராது

### காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக தலைவர்

(முல்லைத்தீவு)

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பிரச்சினைக்கான தீர்வு சர்வதேச பொறிமுறையூடான விசாரணை மூலம் தீர்க்க வேண்டும் என்பது சாத்தியமில்லாதது. அத்துடன் அந்தப் பொறிமுறை தீர்வைப் பெற்றுத்தராது என காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்ற காணாமல் போனோர் அலுவலகத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடுகளின் போது மக்களின் புறக்கணிப்புடன் தொடர்ந்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

அத்துடன் உள்நாட்டுப் பொறிமுறை ஊடாகவே இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்புத் 15

## ஒரே இடத்தில் ஆறு மணிநேரம் அமர்ந்தால் மரணம்

### மருத்துவ ஆய்வில் தகவல்

(கொழும்பு)

ஒரே இடத்தில் ஆறு மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர்ந்தும் அமர்ந்திருப்பது மரணத்தைத் துரிதப்படுத்தும் ஆபத்தான செயலாக மருத்துவ ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளதாக கொழும்பு மருத்துவ பீட சிறுநீர் நோய் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## கந்தன் நாகமுத்து
### (சமாதான நீதவான்)

கரவெட்டி தெற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **கந்தன் நாகமுத்து** அவர்கள் (சமாதான நீதவான்) கடந்த 28.05.2018 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-சிவகி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயா-அரியகுட்டி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்புக்கணவரும், நாளாயினி, நர்த்தனா(இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரகாசம் (இந்தியா) அவர்களின் அன்பு மாமனாரும் அனாமித்திரா, ஆரியா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி

(சி-2803)

# அமரர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் 1ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வும், நினைவுப் பேருரையும் நேற்று சனிக்கிழமை மாலை தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஏற்புரையினை சட்டத்தரணி கு.புரந்தரனும் அஞ்சலி உரை களை தமிழீழ விடுதலை இயக்க செயலாளர் நாயகம் ந.சிறீகாந்தா,வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் ஆற்றியிருந்தனர் . (ம-4)

## மணமகள் தேவை

1978ஆம் ஆண்டு பிறந்த பூராட நட்சத்திரத்தை உடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனிற்கு பொருத்தமான மணப்பெண்ணைத் தேடுகிறோம்.

தொடர்பு:
0212231460,0773834296

(4251)


ஐரோப்பிய நாடுகளுக்கான
செங்கன் விசா
ஏற்பாட்டுடன் ஹொட்டேல் வேலைவாய்ப்பு
சம்பளம் ரூ.126,000/-
Waiters உணவு விநியோகஸ்தர் | 100 பேர் | Commis சமையல் உதவியாளர்
நட்சத்திர தர ஹொட்டேல் அல்லது உயர்தர உணவகங்களில் பணியாற்றிய அனுபவம், ஆங்கில தொடர்பாடல்திறன் அவசியம்
அனுபவம் இல்லாதவர்களுக்கு 3 - 4 மாத விசேட
ஹொட்டேல் பயிற்சி
& ஆங்கில தொடர்பாடல் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு, விசா ஏற்பாடு
(C-2793)
0777 324 004
077 30 18 798
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
221 - 1/1, மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்
021 - 222 00 11
www.sikaram.lk
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
077 00 38 215
077 55 46 956
021 221 9 221



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



பதவிவெற்றிடம்
பயிற்சி ஆசிரியர் (விரிவுரையாளர்)
# Cake Making & Decorating
# Food Preparation & Cooking
# English
# Sinhala
# Deutsch
# French
# Marketing Management
போன்ற கற்கை நெறிகளுக்கான, விரிவுரையாளர்களுக்கான பதவி வெற்றிடம்.
மேற்படி துறைகளுக்கு தகுதி உடையவர்கள் நேரில் வருகை தரவும்.
மேற்படி துறைகளுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், போன்ற இடங்களில் இருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.
YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILL DEVELOPMENT
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
(கன்னாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)
0772288243
(சி-2802)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
24 - 08 - 1941

மறைவு
31 - 05 - 2018



## அமரர்
## க.மு.தர்மராசா
### (பிரசித்திபெற்ற நொத்தாரிசு, சட்ட உதவியாளர்)

நேற்று வரை எம்மோடு இருந்தாய்
எங்களில் ஒருத்தராய் அன்போடு வாழ்ந்தாய்
காலமெல்லாம் எமைக் காத்திருப்பாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு நீர் போனீர்
ஆற்றொண்ணாத் துயரமது ஊற்றாகி ஓடுதையா!
உன் ஆத்மா சாந்தியுற
உள்ளமதால் வேண்டுகிறோம்
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

பிரிவால் துயருறும்
முருகேசு குணரட்ணம்
மற்றும் பணியாளர்கள்

S.V.M (PVT) LTD
122, Dam Street,
Colombo-12

S.V முருகேசு
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
160, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

S.V முருகேசு
கிளிநொச்சி

# 100 பேரை வெளிக்கொண்டு வாருங்கள்/ ராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடுங்கள்

## காணாமல் போனோர் அலுவலகத்திடம் உறவினர்கள் வலியுறுத்து

(பனிக்கன்குளம்)

100 பேரை வெளிக்கொண்டு வாருங்கள் அல்லது இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடுங்கள். உங்கள் அலுவலகத்தை நம்புகிறோம் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் நேரில் தெரிவித்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனோர் அலுவலகத்தின் அமர்வு நேற்றுக் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இடம் பெற்றது.

இந்நிலையில் இந்த அலுவலகம் எமக்கு தேவையில்லை எனவும் இந்த அலுவலகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். இவர்களின் போராட்டத்தை பார்வையிட்டவாறு மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்த காணாமல் போனோர் அலுவலக தலைவர் உள்ளிட்ட அணியினர் மீண்டும் அங்கு வந்து குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த மக்களுடன் கலந்துரையாடிய காணாமல் போனோர் அலுவலக தலைவர் உள்ளிட்ட அணியினர் அவர்களது கருத்துகளை தெரிவிக்குமாறு கூறிய போது உறவுகள் அதற்கு மறுப்பு தெரிவித்த நிலையில் தாங்கள் தமது கலந்துரையாடலை நிறைவு செய்து மீண்டும் தாங்கள் போராட்டம் நடத்தும் இடத்தில் வந்து தங்களுடன் கலந்துரையாடுவதாக தெரிவித்து சென்றனர். இதனைத் தொடர்ந்து போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை மாவட்ட செயலகத்துக்குள் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் மற்றும் நிமல்கா பெர்னாண்டோ, ஜெயதீபா புண்ணியமூர்த்தி, கணபதிப்பிள்ளை வேந்தன் எஸ்லியனகே மிராக் ரகீம் மொகென்றி பீரிஸ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு உறவுகளின் கருத்துக்களை கேட்டறிந்தனர். குறித்த சந்திப்பில் சுமார் 50 பேர் வரை கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர்.

இதனைத்தொடர்ந்து காணாமல் போனோர் அலு வலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் உள்ளிட்ட அணியினர் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சென்று சந்தித்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நாங்கள் சுமார் பத்து வருடங்களாக வீதிகளில் போராடிவருகிறோம். பல்வேறு ஆணைக் குழுக்களுக்கள் முன் சாட்சியமளித்தோம் எல்லாமே எமக்கு கண்துடைப்பாகவே இடம் பெறுகிறது. எனவே இந்த அலுவலகத்தையும் நாம் நம்ப தயாராக இல்லை என தெரிவித்தனர்.

இந்த அலுவலகம் தொடர்பான பூரண விளக்கங்களை காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் வழங்கியபோது மக்கள் அந்த அலுவலகம் மீது நம்பிக்கை அற்றவர்களாக அலுவலகத்தை தாம் நம்புவதாக இருப்பின் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் 100 பேரை வெளிக்கொண்டு வந்து எமக்கு காட்டுங்கள் அல்லது இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது பெயர்ப் பட்டியலை வெளியிடுங்கள். அதன் பின்னர் உங்கள் அலுவலகத்தை நம்புகிறோம் என தெரிவித்தனர். மக்கள் கூறிய விடயங்களை கருத்திலெடுப்பதாக தெரிவித்து அவர் களுடன் கலந்துரையாடி சென்றதை அடுத்து போராட்டக்காரர்களும் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர். (இ-2-281)

## 69 இலட்சம் பெறுமதியான தங்க பிஸ்கட்டுக்களுடன் வியாபாரி ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்க பிஸ்கட்டுக்களை எடுத்து வந்த வியாபாரி ஒருவரை நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் கொழும்பு பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய வியாபாரி என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 4.50 மணியளவில் டுபாய் நாட்டிலிருந்து வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான UL 226 விமானத்தில் குறித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நபரின் வயிற்றுப்பகுதியில் மறைத்து கொண்டுவரப்பட்ட தங்க பிஸ்கட்டுக்களே இவ்வாறு சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபரிடமிருந்து ஒரு கிலோ 160 கிராம் நிறை கொண்ட 10 தங்க பிஸ்கட்டுக்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுக்கள் 69 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியுடையவை என சுங்க ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## நுண்கடன்களை இரத்துச் செய்ய அரசு நடவடிக்கை-மங்கள தகவல்

(கொழும்பு)



வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களிடமிருந்து ஏழை மக்கள் பெற்றுக்கொண்ட கடன்களை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருவதாக நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமுர்த்தி வங்கி "ஹரசர" கடன் வழங்கும் திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இந்த நடவடிக்கை மூலம் ஏற்படும் வெற்றிடம் சமுர்த்தி வங்கிகளால் நிரப்பப்படும். சமுர்த்தி வங்கி குறித்த சுயாதீன கணக்காய்வு கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. சமுர்த்தி வங்கியைக் கண்காணிப்பதற்கான வேலைத் திட்டமொன்றை முறைப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சமுர்த்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையிலும் கூட அதன் நோக்கம் இன்னமும் அடையப்படாமலேயே உள்ளது. எவ்வாறாயினும் தெற்காசியப் பிராந்தியத்தில் மிகக் குறைந்த வறுமை வீதத்தைக்கொண்டிருப்பதில் இலங்கை பெருமையடைகின்றது. கடந்த 2012, இல் 7 சதவீதமாகக் காணப்பட்ட வறுமை வீதம் இந்த வருடம் 4.1 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. இத்தகைய அடைவுகளுக்கும் சமுர்த்தி வேலைத்திட்டம் பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் உடன்படிக்கைகளுக்கு இணங்கும் வகையில் அரசாங்கம் வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சமூக வலுவூட்டல் அமைச்சர் பீ.ஹரிசன், சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் மேற்படி அமைச்சின் செயலாளர் ஷிராணி வீரக்கோன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ-7)

## உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு ஆன்மீக அபிவிருத்தி செயலமர்வு

### ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை

(கொழும்பு)



நாட்டில் சிறந்த உள்ளூராட்சி கட்டமைப்பை தாபிப்பதற்கு நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் ஆன்மீக அபிவிருத்திச் செயலமர்வு தொடரொன்றை மாகாண மட்டத்தில் நடத்துவதற்கு தான் ஆலோசனை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதுவரையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் பௌதீக வள அபிவிருத்திக்காக மட்டுமே செயற்பட்டு வந்த போதும், மக்களின் பண்பாடுகளை அபிவிருத்தி செய்து சிறந்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பை வழங்கும் மத்திய நிலையமாக உள்ளூராட்சி நிறுவனங்கள் மாற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பொலநறுவை மாவட்டத்தில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்காக நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் கிராமம் மற்றும் தேர்தல் தொகுதியில் ஒழுக்கப் பண்பாடான சமூகத்தையும் சிறந்த பிரஜைகளையும் உருவாக்குவதற்காக தான் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் குறித்து உரிய தெளிவுடன் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். இதன்போது போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் பல்வேறு சமூக சவால்களை விளங்கிக்கொண்டு அவற்றிற்கு தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

உள்ளூராட்சி நிறுவன செயற்பாடுகளில் மிகவும் முக்கியமானது அப்பிரதிநிதிகளின் நடத்தையாகும். பிரதேச அபவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அரசாங்க அதிகாரிகளின் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கும் உள்ளூராட்சி நிறுவனங்களை மக்கள் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களாக மாற்றுவதற்கும் இதன் மூலமே சாத்தியமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியல் கட்சி ஒன்றிடம் இருக்க வேண்டிய ஒழுக்கத்துடன் அரசியல்வாதிகளிடம் இருக்க வேண்டிய ஒழுக்கம், ஆளுமை, செவிமடுக்கின்ற பண்பு மற்றும் ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் தேவையையும் புதிய உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு விளக்கிய ஜனாதிபதி, குறிப்பாக மக்களிடம் சென்று அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து நிறுவன ரீதியாக நிறை வேற்ற வேண்டிய பணிகளை குறைவின்றி நிறைவேற்ற வேண்டிய தன் பொறுப்பு குறித்து தனது கடந்த கால அரசியல் அனுபவங்களை நினைவுபடுத்தி விளக்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க கொலொன்னே, பொலநறுவை மாவட்ட அரச அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை பொலநறுவை மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் போக்குவரத்து தேவைகள் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் "எழுச்சி பெறும் பொலநறுவை" அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் ஆட்டோக்களும் வழங்கப்பட்டன. (இ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி இரு பெண்கள் படுகொலை!

(கொழும்பு)

கொஸ்கம, வெரெல்ல மண்டிய பகுதியிலுள்ள வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கி இரு பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

34 மற்றும் 78 வயது பெண்கள் இருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கொஸ்கம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## 20 ஆவது திருத்தச் சட்டம் அராஜகத்தை ஏற்படுத்தும்

### அமைச்சர் விஜயதாஸ சாடல்



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்பட்ட 20 ஆவது திருத்தச் சட்டம் நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகும் என உயர்கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதேவேளை ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இவ்வாண்டு நவம்பர் மாதம் கருத்து வெளியிடுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# 4ஆம் சுற்றில் ஷரபோவா

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு 4வது சுற்றுக்கு ரபெல் நடால், ரஷ்யாவின் மரியா ஷரபோவா முன்னேறினர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் ரஷ்யாவின்மரியா ஷரபோவா, செக்குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா மோதினர்.

மொத்தம் 59 நிமிடம் நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய ஷரபோவா, 6-2, 6-1 என்றநேர்செட்கணக்கில்மிகச சுலபமாக வெற்றி பெற்றார்.

இதன்மூலம் இவர், 4ஆவது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் அல்லது ஜேர்மனியின் ஜூலியாவை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மற்றொரு 3வது சுற்றில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஷா, 6-0, 6-2 என்ற நேர் செட் கணக்கில் அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரை தோற்கடித்தார்.

**நடால் வெற்றி**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3வது சுற்றில் உலகின் 'நம்பர் 1' ஸ்பெயினின் ரபெல் நடால், பிரான்சின் ரிச்சர்ட் காஸ்குயட் மோதினர். அபாரமாக ஆடிய 'நடப்பு சம்பியன்' நடால், 6-3, 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.



# ஒரு கோல்: 10 ஆயிரம் சாப்பாடு

கால்பந்து களத்தில் மெஸ்சி, நெய்மர் அடிக்கும் கோல்கள் முதன்முறையாக பள்ளிச்சிறுவர்களின் பசியை தீர்க்க உள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த மாஸ்டர்கார்ட் நிறுவனம் முதன்முறையாக இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி வரும் உலக கிண்ண தொடர் மற்றும் 2020 வரையில் நடக்கும் சர்வதேச கால்பந்து தொடர்களில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி அல்லது பிரேசிலின் நெய்மர் அடிக்கும் ஒவ்வொரு கோலுக்கும் தலா 10,000 பள்ளிச் சிறுவர்கள் உணவருந்த தேவையான நிதியை அமெரிக்க உலக உணவு பிரிவுக்கு மாஸ்டர்கார்ட் நிறுவனம் வழங்க உள்ளது.

மெஸ்சி கூறுகையில், "ஆயிரக்கணக்கான சிறுவர்களின் வாழ்க்கையில் மாற்றம் கொண்டு வரும் இந் நிகழ்ச்சியில் பங்கேற்பதில் பெருமைப்படுகிறேன்," என்றார்.

நெய்மர் கூறுகையில், "சிறுவர்களுக்கு உதவும் நிகழ்ச்சியில் இணைவது மகிழ்ச்சி," என்றார்.

'ஃபிபா' கால்பந்து கவுண்ட் டவுண் 11

# ஸிடேன் மஜிக்: பிரான்ஸ் சம்பியன்

பதினாறாவது உலக கிண்ண கால்பந்து (1998) தொடர் பிரான்ஸில் நடந்தது. மொத்தம் 32 அணிகள் பங்கேற்றன.

லீக் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன. கூடுதல் நேரத்தில், முதலில் கோல் அடிக்கும் அணி வெற்றி பெறும் என்ற 'கோல்டன் கோல்' விதிமுறை அறிமுகமானது. காலிறுதியில் பிரான்ஸ் அணி, இத்தாலியை 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் 4-3 என வீழ்த்தி, அரையிறுதிக்குள் நுழைந்தது.

மற்றொரு காலிறுதியில் குரோஷியாவிடம் தோற்ற ஜேர்மனி பெரும் அதிர்ச்சி அளித்தது.

**ஜிடேன் அசத்தல்**

இறுதியில் 'நடப்பு சம்பியன்' பிரேசில், பிரான்ஸ் அணிகள் மோதின.

இதில் பிரேசில் அணி சுலபமாக வென்று, ஐந்தாவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால், ஸினடின் ஸிடேனின் மந்திர ஆட்டம் பிரான்ஸ் அணிக்கு கைகொடுத்தது. இவர், தலையால் முட்டி இரு கோல்கள் அடிக்க, பிரான்ஸ் அணி 3-0 என வென்றது.


இதன்மூலம் சொந்த மண்ணில் கிண்ணம் வென்று, புதிய வரலாறு படைத்தது.

இத்தொடரில் குரோஷியாவின் டேவர் சூகர் (6 கோல்) 'தங்கக் காலணி' விருது பெற்றார்.

**'பிரீ கிக்'**

ஸ்கொட்லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் (1986) உருகுவே வீரர் ஜோஸ் பப்டிஸ்டா, போட்டி தொடங்கிய 56 வினாடியில் 'ரெட் கார்ட்' பெற்றார். உலக கிண்ண கால்பந்து போட்டிகளில், மிக வேகமாக 'ரெட் கார்ட' பெற்ற வீரர் இவர் தான்.

# சச்சின் ரசிகருக்கு தோனி விருந்து



இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சினின் தீவிர ரசிகர் சுதிர் கௌதம்.

இவர், இந்திய அணி விளையாடும் மைதானத்திற்குச் சென்று உடல்முழுவதும் இந்திய தேசியக் கொடியின் வண்ணத்தை பூசிக்கொண்டு சச்சின் பெயரை உடலில் எழுதிக் கொண்டு அவரை உற்சாக மூட்டுவார்.

இந்நிலையில், சுதிருக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர் தோனி விருந்து வைத்துள்ளார்.

சமீபத்திய, ஐ.பி.எல்., தொடரில் சென்னையை வழிநடத்தி மூன்றாவது கிண்ணம் வாங்கிய உற்சாகத்தில் தற்போது ஓய்வில் உள்ள தோனி, ராஞ்சியில் உள்ள பண்ணை வீட்டில் சுதிருக்கு விருந்து அளித்து மகிழ்ந்துள்ளார்.

இது குறித்து சுதிர் 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தியில்,' 'கூல்' கப்டன் தோனியின் பண்ணை வீட்டில் அளித்த விருந்து சிறப்பாக இருந்தது. இந்த தருணத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை,' என தெரிவித்துள்ளார்.

இத்துடன், தோனியுடன் உணவு சாப்பிட்ட புகைப் படத்தையும் சுதிர் இணைத்துள்ளார்.

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

யாழ். கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக்ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, சுவர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார், மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
10-06-2018 ஞாயிறு காலை 10.00மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
11-06-2018 திங்கள் காலை 10.00 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். (C-2801) -இயக்குநர்-

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் மயிலப்பா குருக்கள்
## (கண்ணா குருக்கள்)

யாழ்.வண்ணார்பண்ணை சிவன் கோயில் வடக்கு வீதி, தேவர்வளவை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி அக்கராயன் வைத்தியசாலை வீதியை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் மயிலப்பா குருக்கள் (கண்ணா குருக்கள்) அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் வைத்தீஸ்வரன் (தம்பர்), செல்வராசா, துயாதரன், கங்காதேவி, தயானந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா, இந்திரன், தசாயினி, கேதாஜினி ஆகியோரின் மாமனாரும் தர்சன், ஜான்சிகா, விதுசன், அனுருத், பவித்திரா, கௌசிகா, டிலோஜினி, சஞ்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அக்கராயன் வைத்தியசாலை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (03.06.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஸ்கந்தபுரம் பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-2804)

வைத்தியசாலை வீதி,
அக்கராயன், கிளிநொச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்




## பிள்ளைகளின் எதிர்காலம் அமைப்பதும் நீங்களே

தினமும் கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகளுடன் பல்லாயிரக் கணக்கான வெற்றியாளர்களைத் தோற்றுவிக்கும் தேசிய லொத்தர் மூலம் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரும் பங்களிப்பு வழங்கப்படுகின்றது என்பதை நீங்கள் அறியாமல் இருக்கலாம்.

தேசிய லொத்தர் மூலம் ஈட்டப்படும் நிதியானது, இந் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக மீண்டும் முதலிடப்படுகின்றது. எனவே உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்க நீங்கள் வாங்கும் தேசிய லொத்தர் சீட்டானது

எல்லா வகையிலும் உங்களுக்கும், நாட்டிற்கும் பெரும் சக்தியாகத் திகழ்கின்றது.

அதாவது இந் நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலம் வளமாவதும் உங்கள் மூலமாகவே.

# தேசிய லொத்தர் சபையின் இவ்வார லொத்தர் வெற்றி விபரங்கள்

### 2018.05.25

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3665: H 2 6 1 2 4 6
- 8 001: Q 32 63 70 78
- ගොවි සෙත 1770: I 10 22 69 71
- Mega Power 231 (சுப்பர் இலக்கம்): Z 20 48 50 56 57

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: 1,193,165
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: ரூபா.43,357,970

### 2018.05.26

வெற்றி இலக்கங்கள்

- ජාතික සම්පත 842: D 4 0 2 8 2 5
- 1328 (சுப்பர் இலக்கம்): 24 14 32 49 52 (முதல் இரண்டாவது போனஸ் இல): 28 47
- ගොවි සෙත 1771: T 02 07 65 75
- 086: S 04 07 32 68

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: 394,945
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: ரூபா. 14,472,440

### 2018.05.27

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3666: Y 5 7 2 0 0 4
- 8 002: W 27 38 40 57
- ගොවි සෙත 1772: Z 15 34 59 67
- 399: விருச்சிகம் 07 09 33 46 (போனஸ் இலக்கம்) 66

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: 415,953
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: ரூபா. 16,585,760

### 2018.05.28

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3667: W 6 9 3 6 1 0
- ගොවි සෙත 1773: N 34 46 61 71
- 1329 (சுப்பர் இலக்கம்): 15 16 28 34 55 (முதல் இரண்டாவது போனஸ் இல): 69 42
- Mega Power 232 (சுப்பர் இலக்கம்): F 07 49 64 66 70

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: 530,655
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: ரூபா. 17,340,730

### 2018.05.29

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3668: K 7 2 0 0 6 0
- 087: A 15 24 32 38
- 400: சிம்மம் 06 16 59 67 (போனஸ் இலக்கம்) 52
- ගොවි සෙත 1774: K 27 53 78 79

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: 267,992
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: ரூபா. 9,300,200

### 2018.05.30

வெற்றி இலக்கங்கள்

- ජාතික සම්පත 843: Z 2 3 6 2 5 4
- 8 003: S 18 61 74 82
- ගොවි සෙත 1775: U 07 13 22 64
- Mega Power 233 (சுப்பர் இலக்கம்): W 22 13 22 25 61

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: 524,482
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: ரூபா. 40,546,928

### 2018.05.31

வெற்றி இலக்கங்கள்

- මහජන සම්පත 3669: D 6 5 8 8 0 6
- වාසනා සම්පත 1494: BSA 17 28 61 73 (போனஸ் இலக்கம்) 68
- ගොවි සෙත 1776: N 19 29 37 39
- 401: விருச்சிகம் 08 10 37 65 (போனஸ் இலக்கம்) 32

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: 566,292
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: ரூபா. 24,060,970



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
234/2, ... 3

# சுகாதாரச் சீர்கேட்டுடன் உப்புக்கேணிக்குளம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கச்சாய் வீதி பெரியமாவடிப் பகுதியில் அமைந்துள்ள உப்புக் கேணி குளமானது பல வருடங்களாக எந்தவொரு புனரமைப்பும் இன்றி சுகாதார சீர் கேட்டுடன் காணப்படுகிறது.

சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் விவசாய தேவை கருதி வெட்டப்பட்ட இக் குளமானது தற்போது விவசாய நடவடிக்கைகளுக்கு பயன் படுத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இக் குளத்தினைச் சூழ 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் குளமானது மிகவும் அசுத்தமாக சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுகிறது.

இந்த குளத்தில் இருந்து நுளம்பு பெருக்கெடுத்து குடிமனைகளுக்குள் பரவுவதாகவும் இதன் காரணமாக சுற்றுச் சூழலில் உள்ள சிலருக்கு டெங்குத் தாக்கம் ஏற்பட்டு தற்போது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த குளத்தினை மூட முடியாது எனவும் மூடினால் குடிமனைகளுக்குள் வெள்ளம் தேங்கும் அபாயம் நிலவும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே இக்குளத்தினை துப்புரவு செய்து ஆழமாக்கி குளக்கட்டு அமைக்க வேண்டும் என பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். அத்துடன் மீன் வளர்ப்பினை மேற்கொள்வதன் மூலம் நுளம்பு பெருக்கத்தை தடுக்க முடியும் என தெரிவித்துள்ளனர்.

தற்போது குளத்து நீர் அசுத்தமடைந்திருப்பதால் மீன்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கது. குளத்திற்கு உள்ளும், அருகாமையிலும் விஷமிகள் குப்பைகள், பிளாஸ்டிக் போத்தல்களை வீசி வருவதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குளத்தினை புனரமைப்பது தொடர்பாக கடந்த கால நகரசபையினரின் பொதுக் கூட்டங்கள், அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள், அரசியல் கூட்டங்கள், மில்லியன் அபிவிருத்தித் திட்ட கூட்டம் போன்றவற்றில் பேசப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து குளச் சூழலில் உள்ள மக்களுக்கு எந்தவித தொற்றுக்களும் ஏற்படாதவாறு பாதுகாக்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

உப்புக்கேணி குளத்திற்கு சாவகச்சேரியின் பல பாகங்களில் இருந்தும் மாரி காலத்தில் வெள்ள நீர் ஓடிவந்து தேங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இறைச்சி அழிப்பு வழக்கு ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினால் இறைச்சிக் கடை மூடப்பட்ட பின் வெட்டப்பட்ட இறைச்சி நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் முன்னிலையில் அழிக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் மாட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்திருந்தவர் பிரதேச சபைக்குரிய குத்தகைப் பணத்தினை செலுத்தாததால் கடந்த வெள்ளிக்கிழமை உள்ளூராட்சி விதிமுறைகளுக்கமைய இறைச்சிக்கடை பிரதேச சபையினால் மீளப்பெறப்பட்டதோடு அதற்கான அறிவித்தலும் கடையில் ஒட்டப்பட்டிருந்தது.

இந்த விபரம் சாவகச்சேரி நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு தெரியப்படுத்தப்படவில்லை. இந் நிலையில் அதற்கு அடுத்த நாள் சனிக்கிழமை சாவகச்சேரி கொல்களத்தில் குறித்த குத்தகைதாரர் மாடு ஒன்றினை இறைச்சிக்காக வெட்டி சாவகச்சேரி நகரப் பகுதி உணவகங்களுக்கு சட்டவிரோதமாக விநியோகித்துள்ளார்.

இதையடுத்து நீதிமன்றத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து கைப்பற்றப்பட்ட இறைச்சி அழிக்கப்பட்டுள்ளது. வழக்கு ஜூலை மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-89)


# சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் விளையாட்டு விழாவும் இன்று

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்மேற்குமணிமேகன் முன்பள்ளி சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் மணிமேகன் முன்பள்ளி தலைவர் வ. ஸ்ரீகாந்தன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேசசபைதவிசாளர் அ.ஜெபநேசன், சிறப்பு விருந்தினராக ஜேர்மன், சுவிஸ்சர்லாந்து விசா விண்ணப்ப மைய செயற்பாட்டு அலுவலர் பழைய மாணவி செல்வி ஜனனி இளமுருகன், கௌரவ விருந்தினர்களாக சீரணி ஸ்ரீ அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு கு.சோமஸ்கந்தக் குருக்கள், வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் க.ஜெசிதன், சண்டிலிப்பாய்பிரதேசமுன்பள்ளி இணைப்பாளர் கேமநளினி யோகேந்திரன், சண்டிலிப்பாய் முன்பிள்ளைப்பருவ உத்தியோகத்தர் கயல்விழி கணேசராசா, சண்டிலிப்பாய் மேற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மல்லிகா சுபாஸ்கரன், சண்டிலிப்பாய் பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் இ.சோதீஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# "கலைஞர் சுவதம்" விருது வழங்கல்



(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்டத்தின் கலைத்துறை வளர்ச்சிக்காக ஆர்மோனிய வாத்திய இசை கலைஞராக 47 வருடங்களாக தன்னிகரில்லா சேவையாற்றிய தொல்புரத்தை சேர்ந்த பல்துறைக் கலைஞன் கலாபூஷணம் கந்தப்பு லோகேஸ்வரனின் கலைச் சேவையைப் பாராட்டி தொல்புரம்பத்தானைக்கேணி செந்தூரன் சோலையில் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் "கலைஞர் சுவதம்" விருது வழங்கப்பட்டது. (இ-7)

# ஆண்டு விழாவை முன்னிட்டு விசேட நடைபவனி இன்று


(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு விசேட நடைபவனி நிகழ்வு அதிபர் சி.திரிகரன் தலைமையில் இன்று காலை 6 மணிக்கு நடைபெறும். இந் நடைபவனி கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி பாடசாலை ஊட்டப் பிரதேசங்களின் ஊடாக சென்று மீண்டும் கல்லூரியை வந்தடையவுள்ளது. இந்நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொள்வர். (இ)

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

06.06.2018 புதன்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ)




# பாம்புக்கடிக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பாம்புக் கடிக்கு இலக்கான இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மிருசுவில் வடக்கு மிருசுவிலைச் சேர்ந்த இராசநாயகம் சிவமஞ்சுளா (வயது-50) சுருட்டைப் பாம்பு கடிக்கு இலக்கான நிலையிலும் மீசாலை வடக்கு மீசாலையைச் சேர்ந்த முருகையா ஐங்கரன் (வயது-20) சாரைப் பாம்பு கடிக்கு இலக்கான நிலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் கொடிகாமம் தவசிக்குளத்தைச் சேர்ந்த 72 வயதான கி.செல்லம்மா இனம்தெரியாத விஷக் கடிக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை 4ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 நாட்களுக்கு திருவிழா இடம்பெறும். இதில் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-7)

# பிரமோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்.வண்ணை கிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான திவ்ய பிரமோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

# இராசி பலன்

**03.06.2018**

வைகாசி 20, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 4.56 மணிவரை

உத்துராடம் முற்பகல் 10.49 மணிவரை

சுபநேரம் 8.52-10.22 மணிவரை

இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | சூரி, புத | சுக் | |
| | | | ராகு |
| கேது, சந், செவ் | | | |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்

திருவாதிரை, புநர்பூசம்

**மேடம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், வெளியூர் தொடர்புகள் விரிவடையும்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ரோக பயமுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும் நாள், திருடர் பயமுண்டு.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும்.

**கன்னி:** உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள்.

**துலாம்:** வீட்டை சிரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம் தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனைகள் கேட்பீர்கள், சிறிய வேலையொன்றிற்காக சற்று அலையும் நிலை ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**மீனம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்தகாரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

PEOPLE'S BANK

# தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.04.2017 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள்-23.06.2018 (சனிக்கிழமை), 24.06.2018 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | 22.06.2018 | 23.06.2018 (சனிக்கிழமை) 24.06.2018 (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | |
| காங்கேசன்துறை | மல்லாகம் | | |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | -- | | |
| நெல்லியடி | -- | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ் பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | -- | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல: 021 222 2601/021 222 8602
தொலைநகல்: 021 222 2602
ஈ-மெயில்: jafrho@peoplesbank.lk



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 23 உயரம்: 5'9"
தகைமை/தொழில்:MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/8602

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம் 3ஆம் பாதம்
கி.பா: 35 சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc பொறியியலாளர்
தொ.இ: B/8603

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அஸ்வினி 2ஆம் பாதம்
கி.பா: 32 உயரம்: 6'
தகைமை/தொழில்:BSc வங்கியாளர்
தொ.இ: B/8605

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1ம்பாதம்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: டிப்ளோமா பிரான்ஸ் NOT PR
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/8606

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4ஆம் பாதம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L NCET I.C.T அரசதொழில்
தொ.இ: G/8601

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 162cm
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8604

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1ஆம் பாதம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில் BBA அரச தொழில்
தொ.இ: G/8608

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2ஆம் பாதம்
கி.பா: 25 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/8611

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



ஓம் சக்தி



நயினாதீவு
# ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய
## 2018-விளம்பி வருட
# உயர் திருவிழா

| | | | | |
|---|---|---|---|---|
| 14.06.2018 | வியாழக்கிழமை | 01ஆம் திருவிழா | பகல் | கொடியேற்றம் 12.00 மணி |
| 18.06.2018 | திங்கட்கிழமை | 05ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பறம் |
| 20.06.2018 | புதன்கிழமை | 07 ஆம் திருவிழா | இரவு | கைலைக்காட்சி |
| 23.06.2018 | சனிக்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் | சிவபூசைக் கைலைக்காட்சி |
| | | 10 ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 24.06.2018 | ஞாயிற்றுக்கிழமை | 11ஆம் திருவிழா | பகல் | விசேட கருட சர்ப்ப பூஜை<br>வாயு பட்சணி நாகம் வீதியுலா<br>இரவு பூந்தண்டிகை |
| 26.06.2018 | செவ்வாய்க்கிழமை | 13ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி<br>இரவு சப்பறம் |
| 27.06.2018 | புதன்கிழமை | 14ஆம் திருவிழா | பகல் | இரதோற்சவம், பிற்பகல் அவரோகணம் |
| | | | இரவு | அம்பாள் தேரடிதரிசனம் |
| 28.06.2018 | வியாழக்கிழமை | 15ஆம் திருவிழா | காலை | காங்காதரணியில் தீர்த்தோற்சவம்<br>காலை 10.48 மணிக்கு முன்பாக நடைபெறும். |
| 29.06.2018 | வெள்ளிக்கிழமை | 16 ஆம் திருவிழா | | இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம்<br>இரவு தெப்போற்சவம் (பூங்காவனம்) |

விசேட குறிப்பு:
இவ்வாலயத்தின் பெயரால் அடியார்கள் எவரிடமிருந்தும் ஆலய அறங்காவலர் சபையினர் சார்பில் பணமோ,பொருளோ வசூலிக்கும் வழமை ஒருபோதும் இடம்பெறுவதில்லை. இருந்தபோதும், சில இடங்களில் இவ்வாலயத்தின் பெயரால் பணமும் பொருளும் அறவிடப்பட்டு வருவதாக அறிகின்றோம். எனவே இவ்வாலயத்திற்கு பணமோ, பொருளோ வழங்க விரும்புபவர்கள் நேரடியாகவும் வங்கியின் மூலமாகவும் வழங்கலாம். மேலதிக விபரம் தேவைப்படின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

(சி-2794)

தொ.இல: 021 321 3024, 021 320 7785, 021 321 3025
வங்கி கணக்கு இலக்கம்: இலங்கை வங்கி வேலணை - 0076187860
இலங்கை வர்த்தக வங்கி வேலணை- 106 0012330

அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக.
அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

# 11 தமிழர்கள் கடத்தல் வழக்கு விஜேயகுணரத்ன கைதாக வாய்ப்பு

(கொழும்பு)

கொழும்பில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் 11 தமிழ் இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய, குற்றவாளிக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில், இலங்கை உயர் மட்டப் படை அதிகாரி ஒருவர் அடுத்த சில நாட்களுக்குள் கைது செய்யப்படவுள்ளார்.

பொலிஸ் தலைமையக வட்டாரங்களை மேற்கோள் காட்டி, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த வழக்கில் முக்கிய சந்தேகநபரான, லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சியைக் கைது செய்வதற்கு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு உதவிய சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறு, கோட்டே நீதிவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டுள்ளார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த வியாழக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, லெப். கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு, முன்னாள் கடற்படைத் தளபதியும், தற்போதைய கூட்டுப் படைகளின் தளபதியுமான அட்மிரல் ரவீந்திர விஜேயகுணரத்ன உதவியாகவும், உடந்தையாகவும் இருந்தார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கைது செய்யப்படவுள்ள படை அதிகாரியின் பெயரை கொழும்பு ஊடகம் வெளியிடாத போதிலும், அட்மிரல் ரவீந்திர விஜேயகுணரத்னவாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (இ-7)

# மாகாண தேர்தலை எதிர்கொள்ள ஐ.தே.கட்சி எந்த நேரமும் தயார்

## அக்கட்சியின் செயலாளர் காரியவசம் தெரிவிப்பு

மாகாண சபை தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எந்த நேரத்திலும் தயாராகவே இருக்கிறது என கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறை தொடர்பாக சிக்கல்கள் பல இருப்பதாக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் உட்பட புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது. இதன் போது பழைய முறைப்படி மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பாக இங்கு விரிவாக ஆராயப்பட்டதென்றும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.



புதிய தேர்தல் முறையின் கீழ் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளும் எந்தவொரு கட்சிக்கும் சுயாதீனமான அதிகாரத்தை நிலை நாட்டுவது முடியாத ஒருநிலை உட்பட பல பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக தேவையான திருத்தங்கள் செய்யப்படும் வரை மாகாண சபை தேர்தல் பழைய முறைப்படியே நடத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை வந்த சீனப்படை அதிகாரிகள் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு



தியத்தலாவையிலுள்ள இலங்கை இராணுவப் பயிற்சி அகடமியில் சீனாவின் நிதியில் கட்டப்படவுள்ள அரங்க வளாகத்துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு சீனப்படை அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

சீன இராணுவத்தின் கேணல் சாங் ஹூஹூவா தலைமையிலான இந்தக்குழுவினர், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது, சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டம் தொடர்பாகவும், ஏனைய தொழில் நுட்ப உதவிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (இ)

# ஆற்றில் குளித்தவர் நீரில் மூழ்கிப் பலி

(வெலிகந்த)

வெலிகந்த, போஅத்த பகுதியில் நபரொருவர் நீரில் மூழ்கி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். போஅத்த எப்.சீ ஆற்றில் குளிக்கச் சென்ற நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, மெதவெல பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் வெலிகந்த வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 100 | 110 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 90 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 180 | 120 | 250 | 170 |
| தக்காளி | 160 | 160 | 160 | 130 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 100 | 140 | 120 | 70 | 120 | 120 |
| கரட் | 200 | 160-400 | 240 | 150 | 320 | 190 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 40 |
| புடோல் | 120 | 100 | 120 | 65 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 200 | 40 | 35 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 160 | 130 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 85 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 240 | 120 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 60 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | — | 100 | 60 |
| பயற்றங்காய் | 160 | 100 | 100 | 85 | 80 | 120 |
| லீக்ஸ் | 250 | 350 | 300 | 220 | 320 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 40 | 120 | 100 |
| குடமிளகாய் | 150 | 200 | 180 | 70 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 120 | 200 | 120 | 180 |
| போஞ்சி | 250 | 400 | — | — | 320 | 230 |
| கத்தரிப்புள்ளை | 100 | 80 | — | — | 120 | 90 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 40 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 160 | 140 | 200 | 200 | 300 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-70 | 75 | 25-70 | 50-75 | 80 |
| இராசவள்ளி | 200 | 200 | 160 | — | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 280 | — | 280 | — |
| முள்ளங்கி | 100 | 120 | 140 | 35 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 10 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 120 | — | — | 80 | 100 |


UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SCIENCE, TECHNOLOGY, RESEARCH, SKILLS DEVELOPMENT & VOCATIONAL TRAINING AND KANDYAN HERITAGE

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts on Temporary basis in University College of Jaffna.

**1. LECTURER (CONTRACT)/ VISITING LECTURER IN BUILDING SERVICES TECHNOLOGY, CONSTRUCTION TECHNOLOGY, PRODUCTION TECHNOLOGY, FARM MACHINERY TECHNOLOGY, MECHATRONICS TECHNOLOGY, HOSPITALITY MANAGEMENT, COSMETOLOGY (BEAUTICULTURE), FOOD TECHNOLOGY**

Qualifications:

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honors.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching / research / professional work in recognized mercantile establishment / postgraduate studies in a recognized University or Higher Education Institution;

OR

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

AND

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/ dissertation;

OR

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

AND

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

OR

5 (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) Eight (8) years professional and / or teaching experience after graduation or after securing professional qualification given in 5 (a)

**NOTE: Automobile Engineering field will be given priority in Farm Machinery Technology. National Vocational Qualification (NVQ) Level 5 will be also considered for the field of Cosmetology.**

**2. DEMONSTRATOR (CONTRACT) IN BUILDING SERVICES TECHNOLOGY (ELECTRICAL & MECHANICAL), FARM MACHINERY TECHNOLOGY, PRODUCTION TECHNOLOGY, CONSTRUCTION TECHNOLOGY, HOSPITALITY MANAGEMENT, COSMETOLOGY, FOOD TECHNOLOGY AND MECHATRONICS TECHNOLOGY**

Qualifications:
- Degree in the relevant field.
- NVQ Level 5 qualification in the relevant field will be considered for Cosmetology.

**3. INSTRUCTOR IN ENGLISH LANGUAGE & INFORMATION TECHNOLOGY (CONTRACT BASIS / VISITING)**

Qualifications:
- A Degree in the relevant field OR
- Not below NVQ 6 and five (05) year experience in the relevant field

**SALARY SCALE:**
- Lecturer (Contract) Rs. 43,051p.m (Fixed)
- Demonstrator(Contract) Rs.33,100 p.m (Fixed)
- Instructor (Contract) Rs. 33,100 (Fixed)
- Visiting Lecturer Rs. 1,500 / Lecture hour & Rs. 600 / Practical hour
- Visiting Instructors Rs. 600 / Hour

**NOTE :Lecturer, Demonstrator and Instructor who will be recruited on contract basis will be paid applicable allowances in addition to the above salary and they are entitled to EPF & ETF.**

- Specimen Application form and further details are available at www.ucj.ac.lk. Duly filled applications forms indicating academic and professional qualifications should be sent to **"Assistant Registrar; University College of Jaffna, No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before 18th June 2018.
- Desired post applied should be indicated clearly on the top left hand corner of the envelope.
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an advance copy to the address given above.

03.06.2018

Assistant Registrar
University College of Jaffna

# தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு ஐ.நா. சபையில் கடும் கண்டனம்

(ஜெனிவா)

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடிய மக்கள் மீது கடந்த மே மாதம் 22ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் பலியாகியிருந்ததுடன்.பலர் படுகாயமடைந்திருந்தனர்.

இதற்கு ஐ.நா.சபை மனித உரிமைகள் குழு நிபுணர்கள் கடும் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளனர்.குறித்த அறிக்கையில்

ஸ்டெர்லைட் இங்கிலாந்தில் இயங்கும் வேதாந்தா குழுமத்தின் வர்த்தக நிறுவனமாகும். மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக தூத்துக்குடியில் போராட்டம் நடத்த பேரணியாக சென்றவர்கள் மீது அளவுக்கு அதிகமான பொலிஸார் மற்றும் ஆயுதங்களை பயன்படுத்தி கொடூர தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து காலதாமதமின்றி சுதந்திரமான ஒளிவு மறைவற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்என இந்திய அரசை(மத்திய அரசை) வலியுறுத்தி இருக்கிறோம்.

வர்த்தக நிறுவனங்கள் மனித உரிமைகளுக்கு எதிராக செயற்படும் போது போராட்டம் நடத்தும் உரிமை மக்களுக்கு உண்டு. ஐ.நா.வின் வழி காட்டுதல் கொள்கைகளை அனைத்து தொழில் நிறுவனங்களும் பின்பற்ற வேண்டும். மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

அனைத்து தொழில் நிறுவனங்களும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் சட்ட விதிமுறைகளை கடைப்பிடிக்க இந்திய அரசு உரிய நடவடிக்கைகள்மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுடன் அர்த்தமுள்ள உரிய பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். இந்திய சுற்றுச்சூழல் விதிகளுக்குட்பட்டு நடப்பதாக முழு உத்தரவாதம் அளித்த பிறகே ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலையை மீண்டும் இயங்க அனுமதிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)


## வர்த்தக பாட மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு-2018A/L

வடமராட்சி முகாமைத்துவ மற்றும் வணிகபீட மாணவர்களால் நடாத்தப்படும் உயர்தர வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

காலம்:05.06.2018-வணிகக்கல்வி-ச.ரிஷிகேசன், பொருளியல்-வே.கருணாகரன்

06.06.2018-கணக்கீடு-S.தவா

இடம்: மூத்தவிநாயகர் கோவில் மண்டபம். (கரவெட்டி பிரதேசசெயலகம் அண்மையில்)

நேரம்: 8.00இலிருந்து ஆரம்பம்.

தொடர்பு: 077 307 3942, 077 724 8085

(4277)



## பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

# பதவி வெற்றிடம்

பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆளணியில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடமாகவுள்ள கீழ்வரும் விபரப்படியான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை **எதிர்வரும் 18.06.2018 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர்,பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், ஏ-32 வீதி, மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி** எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை தபாலுறையிலிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**பதவி 01- எழுதுநர்**
**சம்பள குறியீட்டு இலக்கம் - 302/14**
**சம்பள அளவுத் திட்டம்-13875-115X10-125X10-16275.00**
(13/2015 சுற்றுநிருபத்தின்படி)
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்).

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

கூட்டுறவு பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு (02) குறையாது அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியொன்றில் நான்கு வருடங்கள் (04) குறையாத அனுபவம்.

**அல்லது**

க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**பதவி 02-கிளை முகாமையாளர்**
**சம்பள குறியீட்டு இலக்கம் 208/14**
**சம்பள அளவுத் திட்டம்-13875-115X10-125X10-16275.00**
(13/2015 சுற்றுநிருபத்தின்படி)
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட. இதர படிகளும் வழங்கப்படும்).

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவி ஒன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவி ஒன்றில் நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரம் (சான்றிதழ்) அல்லது க.பொ.த (சாதாரண தரம் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

**பதவி-03 விற்பனை உதவியாளர்** (Sales Assistant)
**சம்பள குறியீட்டு இலக்கம் 308/15**
**சம்பள அளவுத் திட்டம்-13515-110X10-120X10-15815.00**
(13/2015 சுற்றுநிருபத்தின்படி)
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.**

கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்ட விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஐந்து(05) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரம்) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி.

**நிபந்தனைகள்**

01.சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02.வயதெல்லை 18-45 வரையானது.
(16.06.2018இன் திகதி 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
03.சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிப்பிடமாட்டாது.
04. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ,
ஏ-32 வீதி, மட்டுவில் நாடு மேற்கு,
பூநகரி.



## வாடகைக்கு

அம்மன் வீதி, திருநெல்வேலி, பத்திரகாளி கோவிலுக்கு முன்பாக வாகனத் தரிப்பிடத்துடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 783 0632

(4247)



## ஆலயக் குருக்கள் தேவை

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலின் நித்திய பூஜையை மேற்கொள்வதற்கு குருக்கள் தேவை. ஆலய வீட்டில் தங்கி இருந்து பணியாற்றக்கூடிய குருக்கள் விரும்பத்தக்கது.

குருக்கள் வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 659 1933, 077 844 5583, 077 614 5244

(சி-2799)



## வீடு, காணிகள் விற்பனைக்கு

■சாவகச்சேரி நகரப்பகுதியில் தபால் நிலையத்துக்கு அருகில் 4 அறைகள், 2 வரவேற்பறையுடன் கூடிய 4 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

■சாவகச்சேரி நகரில் புகையிரத நிலைய வீதியில் முருகன் கோவிலுக்கு அருகாமையில் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

■சாவகச்சேரி நகரில் சிவன்கோவிலடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

■சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்கு அண்மையில் 8 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
லதா -00447949997007(லண்டன்)
மூர்த்தி-077 467 2408
E-Mail-lathas77@aim.com

(4232)



PEOPLE'S BANK

## கேள்விப்பத்திர அறிவித்தல் மக்கள் வங்கி

## சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ். ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை, யாழ். பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ். பல்கலைக்கழகம், யாழ். கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும், யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/-ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவன் மூலம் 2018 ஆனி 14 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3.00 மணி வரை எந்தவொரு வார நாளிலும் மு.ப: 9.00 -பி.ப 4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப் பத்திர விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக் காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2018 ஆனி 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக் கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(சி-2784)

Fax:021 222 2602
E-mail: jafrho@peoplesbank.lk
T.No:
021 222 2601/021 222 8602

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
இல.82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஹெலிகொப்டரில் செல்ல மகிந்தவுக்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை

## ஜனாதிபதியின் கருத்துக்கு கம்மன்பில பதில்



(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவிற்கு ஹெலிகொப்டரொன்றை பெற்றுப் பயணம் செல்ல எவரின் அனுமதியும் பெறத் தேவையில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானது எனவும் பிவிதுரு ஹெல உறுமய கட்சித்தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி தங்கல்லவுக்கு செல்ல முன்னாள் ஜனாதிபதிக்கு யார் ஹெலிகொப்டர் வழங்கினார் என்பது தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்த கருத்து தொடர்பில் கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.


2016 ஏப்ரல் மாதத்தில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, தான் மகிந்த வீடு செல்வதற்கு ஹெலிகொப்டர் வழங்கியதாக கூறினார்.

தேர்தலில் தான் தோற்றிருந்தால் 6 அடி குழிக்குள் சென்றிருக்க நேர்ந்திருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் ஹெலிகொப்டர் வழங்கிய விவகாரம் தொடர்பில் அவர் தற்போது வேறு கதையொன்றை கூறியுள்ளார். ஜனாதிபதியின் இரு கருத்துக்களும் தவறானவை.

2015 ஜனவரி 9 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் நாட்டு ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ இருந்தார். நாட்டு ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன மாலை 6.30 மணிக்குத்தான் பதவி ஏற்றார். அரசாங்க ஹெலிகொப்டர் ஒன்றை பெற்றே மகிந்த வீடு சென்றார். நிறைவேற்று ஜனாதிபதியாக அவருக்கு இருக்கும் அதிகாரத்தின் படிதான் அவர் அதனை பெற்றார்.

நிறைவேற்று ஜனாதிபதிக்கு அரசாங்க ஹெலிகொப்டர் பெற யாரின் அனுமதியும் பெறத்தேவையில்லை. ஹெலிகொப்டரில் பயணம் செய்யும் ஜனாதிபதிக்கு இது கூட தெரியாமல் போனது கவலை தருகிறது என கம்மன்பில தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீட அதிகாரிகள் இலங்கையில் கள ஆய்வு



(கொழும்பு)

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த கப்டன் ஜெப்ரி பென்டன் தலைமையிலான நான்கு படை அதிகாரிகளைக் கொண்ட குழு, இலங்கையில் பயணம் மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சிவில்- இராணுவ ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகவே அமெரிக்க படை அதிகாரிகள் குழு கொழும்பு வந்துள்ளது.

தெற்காசியப் பிராந்திய சிவில் விவகார கருத்தரங்கிற்கு முன்னதாக இந்தக் குழு இலங்கை வந்துள்ளது.

அமெரிக்க படை அதிகாரிகளின் இந்தக் குழு, நேற்று முன்தினம் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இதன்போது, 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கு- கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட சிவில்- இராணுவ ஒத்துழைப்பு திட்டங்கள் தொடர்பாக இராணுவத் தளபதி விளக்கிக் கூறியுள்ளார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளராக பீரிஸ் மகிந்த ராஜபக்ஷ திடீர் முடிவு



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக, கட்சியின் தலைவராகவுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நிறுத்துவதற்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக ராஜபக்ஷ குடும்பத்துக்குள் ஏற்பட்டுள்ள பனிப்போரை அடுத்தே, மகிந்த ராஜபக்ஷ இந்த முடிவை எடுத்துள்ளார் என்று, அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு, ராஜபக்ஷ குடும்பத்துக்குள் கோத்தபாய, பசில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகியோர் தமது ஆதரவாளர்களின் மூலம் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. (இ-7)

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 252 மில்லியன் அமெ.டொலர் கடனுதவி

(கொழும்பு)

நான்காவது கட்டமாக இலங்கைக்கு 252 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவினால் நேற்று முன்தினம் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை வழங்குவதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாண்டு நீடிக்கப்பட்ட திட்டத்துக்கான அனுமதி 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி வழங்கப்பட்டது.

இதற்கமைய நாணய நிதியத்தினால் இலங்கைக்கு இதுவரை 1,014 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனஞ்சயவின் சகோதரனின் உயிருக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் வீரர் தனஞ்சய டி சில்வாவின் சகோதரரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ரத்மலானை பிரதேசத்தில் இயங்கி வரும் பாதாள உலகக்குழு ஒன்று தனஞ்சயவின் சகோதரரை படுகொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவிற்கு தகவல்கள் கிடைத்துள்ளது.

தனஞ்சயவின் தந்தை ரஞ்சன் டி சில்வா அண்மையில் பாதாள உலகக்குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்த படுகொலை பாதாள உலகக்குழுவின் தலைவர் அஞ்சு என்பவரினால் திட்டமிடப்பட்டது என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும், கடந்த 19ஆம் திகதி அங்குலான பிரதேசத்தில் பாதாள உலகக்குழு தலைவர் அஞ்சுவின் சகாக்கள் 7 பேரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்திருந்தனர்.

இந்த பாதாள உலகக்குழு உறுப்பினர்களின் மறைவிடம் பற்றிய தகவல்களை தனஞ்சயவின் சகோதரர் சசித்ரா சில்வா வழங்கியதாக கருதி, அவரை படுகொலை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சசித்ராவை பழி வாங்கும் நோக்கில் அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் தனஞ்சயவின் தந்தை கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த கொலை தொடர்பில் மூன்று பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# காலி கல்குவாரி மீண்டும் திறப்பு

## மக்கள் எதிர்ப்பால் உடன் மூடல்



(காலி)

காலி - வந்துரம்ப, கிம்பகிந்த பகுதியிலுள்ள கல்குவாரி மூடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நேற்று மீண்டும் மூடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அங்கு பாறைகளை உடைப்பதற்காக வைக்கப்பட்ட வெடியால் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், புதிய உரிமையாளரின் கீழ் குறித்த கல்குவாரி நேற்று மீண்டும் திறப்பதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த வேளை அதற்கு பிரதேசவாசிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

மேலும், சம்பவ இடத்திற்கு வந்த தென்மாகாண சபை உறுப்பினர் பத்தேகம சமித தேரருக்கும், புவியியல் ஆய்வு பணியகத்தின் அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கத்தை தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கை கைவிடப்பட்டது. (இ-7)

# நகைக்கடைகளைப் பதிவு செய்ய யாழில் விசேட நடமாடும் சேவை

## வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையைச் சேர்ந்த அதிகாரிகள் எதிர்வரும் 06.06.2018 புதன்கிழமை காலை 9 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழக பணிமனையில் தங்களது நடமாடும் சேவை நிலையமொன்றை நடத்தவுள்ளனர்.

எனவே யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நகைக்கடை வர்த்தகர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது நகைக்கடை வர்த்தக நிலையங்களுக்கு இதுவரை அனுமதி பெறாது விடின் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொள்கிறது.

ஏற்கனவே 2017 ஆம் ஆண்டுக்கான அனுமதியைப் பெற்றவர்கள் 2018ஆம் ஆண்டுக்காக தங்களது அனுமதியைப் புதுப்பிப்பதற்கு வசதியாக 2017ஆம் ஆண்டில் பெற்ற அனுமதிப்பத்திரத்தின் புகைப்பட பிரதியுடன் விண்ணப்பிக்கலாம்.

இந்த நடமாடும் சேவையைப் பயன்படுத்தி நகைக்கடை வர்த்தகர்கள் வர்ண அடையாள அட்டைக்கும் விண்ணப்பிக்க முடியும்.

புதிதாக நகைக்கடையை பதிவு செய்வோர் வியாபாரச் சான்றிதழ் மூலப் பிரதி, அடையாள அட்டை பிரதி, பதிவுக்கட்டணம் ரூபா 5,000/- (வரி நீங்கலாக) ஆகியவற்றுடன் சமுகமளிக்க வேண்டும். வர்ணப்புகைப்படத்திலான அடையாள அட்டையைப் பெற விரும்புவோர் மட்டும் மேலதிகமாக ரூபா 1173/- பணத்துடன், பாஸ்போட் அளவிலான வர்ணப்புகைப்படம் மற்றும் அடையாள அட்டையின் மூலப்பிரதி என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0212228593 இற்கு தொடர்பு கொள்ளலாம் என யாழ். வணிகர் கழகத்தின் செயலாளர் சி.சிவகுமரன் அறிவித்துள்ளார். (இ)

# இலங்கையுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சில் ஸ்தம்பிதமா?



(கொழும்பு)

இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளில் ஸ்தம்பிதம் ஏற்பட்டுள்ளமை குறித்து தமக்கும் தெரியாது என நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹூ ஹா சனியிங் (Hua Chunying) தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாக இலங்கை அதிகாரியால் வெளியிடப்பட்ட தகவல் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளரிடம் ஊடகவியலாளரினால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹூ ஹா சனியிங், குறித்த விடயம் தொடர்பில் தமக்கு தெரியாது என்றும், அதனை வர்த்தக அமைச்சின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார். (இ)

# மீள்பரிசீலனை மனு மீது சட்டமா அதிபர் விளக்கம்

(கொழும்பு)

தமக்குப் பிணை வழங்குமாறு கோரி பெர்பேச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் தாக்கல் செய்த மீள்பரிசீலனை மனு சம்பந்தமாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் விளக்கமளித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி ப்ரீதி பத்மன் சுரசேன மற்றும் நீதிபதி சிரான் குணரத்ன முன்னிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு வந்தது.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றம் ஆகியன அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோருக்கு பிணை மறுப்புத் தீர்ப்பு வழங்கியது.

சட்ட ரீதியாகவே என்று சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் யசந்த கோதா கொட மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி இந்த மனு மீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது.

இந்த மனு மூலம் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோர், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள தம்மை பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் பிணையில் விடுவிப்பதற்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் மறுப்புத் தெரிவித்ததாக நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

எனினும் விசாரணைகளின் படி இரகசியப் பொலிஸார் நீதிமன்றுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் எந்த தவறும் இனங்காணப்படவில்லை என்று மனுதாரர்கள் தெரிவித்தனர்.

இதன்காரணமாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை மறுப்புத் தீர்ப்பு சட்டத்துக்கு முரணானது என்று தீர்ப்பளித்து தம்மை பிணையில் விடுவிக்க உத்தரவிடுமாறு அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றில் கேட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 20 ஆவது திருத்தம் தோல்வியடையும்

## திஸ்ஸ விதாரண எதிர்வுகூறல்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற விடயத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி மக்கள் விடுதலை முன்னணியினர் சமர்ப்பித்துள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் பாரிய தோல்வியடையும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

20 ஆவது திருத்தத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யப்படவேண்டும் என்ற விடயம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே உள்ளது. இருப்பினும் மக்கள் விடுதலை முன்னணியினர் தேவையற்ற விடயங்களை 20 ஆவது திருத்தத்தின் ஊடாக நிறை வேற்றமுனைவது பொருத்தமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

மக்கள் விடுதலை முன்னணியினர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள 20 ஆவது திருத்தம் ஒரு போதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவினைப்பெறாது. ஏனென்றால் அது தற்போதைய அரசியல் தேவைகளை பூரணபடுத்துவதாக அமையாது. தேவையற்ற விடயங்களை மாத்திரமே மக்கள் விடுதலை முன்னணியினர் உள்ளடக்கியுள்ளனர்.

தற்போது 20 ஆவது திருத்தம் வாக்கெடுப்புக்கு வருவதற்கு முன்னரே பல தரப்பினர் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது பொதுஜன பெரமுனவின் 54 உறுப்பினர்களும், தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 உறுப்பினர்களும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். ஒரு போதும் மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கங்கள் நிறைவேறாது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை இரத்து செய்ய வேண்டும் என்ற விடயத்தினை ஆரம்பத்தில் லங்கா சமசமாஜ கட்சியினரே முன்வைத்தனர். இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்திடம் தொடர்ந்து அழுத்தங்களை பிரயோகித்து வந்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை மாத்திரம் இரத்து செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு யோசனைகளை முன்வைத்திருந்தால் ஆதரவு வழங்கியிருக்கலாம். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியினர் இவ்விடயத்தில் பல பொருத்தமற்ற விடயங்களை மறைமுகமாக நிறைவேற்ற சூழ்ச்சிகளை பிரயோகித்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியினர் எதிர்க்கட்சியினர் என்ற பதவியில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் பங்காளியாகவே செயற்படுகின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நோக்கங்களும் 20 ஆவது திருத்தத்தில் மறைக்கப்பட்டுள்ளன. ஆகவே மக்கள் விடுதலை முன்னணியினருக்கு ஒரு போதும் ஆதரவு வழங்க முடியாது என தெரிவித்தார். (இ)


# கண்ணீர் அஞ்சலி

## தமிழ்த்தேசியப் பற்றாளர் கந்தையா முருகேசு தர்மராஜா



மண்ணில்: 1941.08.24 விண்ணில்: 2018.05.31

பிரபல சட்ட ஆலோசகரும் பிரசித்த நொத்தாரிசும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொருளாளரும் மத்திய செயற்குழு உறுப்பினரும் இலங்கை வரலாற்றில் தமிழ் மக்களது உரிமைகளை அடைவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட முதலாவது தமிழ்க் கட்சியான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவுநர், சட்ட மாமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம் அருகிருந்து கட்சியினதும் தமிழ் மக்களினதும் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர். தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற உரிமைப் போராட்டத்தின் அரசியல் நியாயப்பாடுகளை சர்வதேச இராஜதந்திர மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களது பணிகளுக்கு உறுதுணையாக விளங்கியவர். 2009 இற்குப் பின்னர் தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்திற்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எனும் அரசியல் இயக்கத்தினால் முன்னெடுக்கப்படும் அரசியல் போராட்டத்திற்கு தன் இறுதி மூச்சுவரை உறுதுணையாக உழைத்தவர்.

அன்பும் பண்பும் நேர்மையும் துணிச்சலும் மிக்க தேசப்பற்றாளரின் மறைவு அவரது குடும்பத்தினருக்கும் தமிழ்த் தேசத்திற்கும் ஈடு செய்யப்பட முடியாத பேரிழப்பாகும். தேசப்பற்றாளரின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4276) அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# காணாமல் போனோர் அலுவலகம் தேவையில்லை; முல்லை.மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு







(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனோர் அலுவலகத்தின் அமர்வு நேற்றுக் காலை 9 மணிமுதல் இடம்பெற்றது.

இந்நிலையில் இந்த அலுவலகம் எமக்கு தேவையில்லை எனவும் இந்த அலுவலகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் காலை 8.30 மணி தொடக்கம் மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இவர்களின் போராட்டத்தை பார்வையிட்டவாறு மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்த காணாமல் போனோர் அலுவலக தலைவர் உள்ளிட்ட அணியினர் மீண்டும் வந்து குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த மக்களுடன் கலந்துரையாடிய காணாமல் போனோர் அலுவலக தலைவர் உள்ளிட்ட அணியினர் அவர்களை குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு அவர்களது கருத்துக்களை தெரிவிக்குமாறு கூறினர்.

இருப்பினும் உறவுகள் அதற்கு மறுப்பு தெரிவித்த நிலையில் தாங்கள் தமது கலந்துரையாடலை நிறைவு செய்து மீண்டும் போராட்டம் நடத்தும் இடத்தில் வந்து தங்களுடன் கலந்துரையாடுவதாக தெரிவித்து சென்றனர்.

இதனை தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்தனர். (2-281)

## காணாமல் போனோர் அலுவலக அமர்வு நேற்று முல்லைத்தீவில்

### சுமார் 40 இற்கு மேற்பட்டோர் கருத்துப்பகிர்வு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனோர் அலுவலகத்தின் அமர்வு நேற்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இடம்பெற்றது.

காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் மற்றும் நிமல்கா பெர்னாண்டோ, ஜெயதீபா புண்ணியமூர்த்தி, கணபதிப்பிள்ளை வேந்தன், எஸ்.லியனகே மிராக் ரகீம் மொகெனிரி பீரிஸ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு உறவுகளின் கருத்துக்களை கேட்டறிந்தனர். குறித்த சந்திப்பில் சுமார் 40 பேர்வரை கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்தனர்.

இந்நிலையில் இந்த அலுவலகம் எமக்கு தேவையில்லை எனவும் இந்த அலுவலகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சுமார் 250 இற்கும் அதிகமானவர்கள் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (2-281)

## உழவனூரில் குடும்பஸ்தர் டெங்குநோயால் உயிரிழப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் உழவனூர் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாபநபர் சிகிச்சை பலனின்றி அன்று மாலை உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

பத்து நாட்களுக்கு முன்னர் கொழும்புக்குச் சென்றிருந்த இவர் கடந்த ஐந்து நாட்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் பிரதேசத்திலுள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் சிகிச்சை பெற்றதாகவும் தெரியவருகின்றது.

அதன் பின்னரே நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட இக் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி அன்று மாலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த குடும்பஸ்தர் எலிக் காய்ச்சலினாலும் இறந்திருக்கக்கூடிய சந்தேகங்கள் இருப்பதனால் அவரது மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் இடம்பெற உரிய அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அமைப்புக்கள் ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த காலங்களில் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்ட பகுதிகளில் பரவலைத் தடுக்கும் நோக்குடன் உடனடியாகவே சுகாதாரப் பகுதியினர் புகையூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)




## மீனவர் பிரச்சினை தொடர்பில் விசேட கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

மீனவர் பிரச்சினை தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பு நேற்று பிற்பகல் 3 தொடக்கம் 4.30 மணிவரை முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அக் குழு நேற்று முன்தினம் கூடி பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளது.

இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இருப்பினும் இந்த கலந்துரையாடலுக்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கலந்துரையாடலின் இறுதியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தனர். (2-281)

## அபகரிக்கப்பட்டுள்ள காணி பிரச்சினை தொடர்பிலான விசேட கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

வனவள பாதுகாப்பு பிரிவினால் அபகரிக்கப்பட்டுள்ள காணி பிரச்சினை தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணிவரை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவள பாதுகாப்பு பிரிவினால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் மக்களின் காணிகளுக்குள் எல்லைக் கற்கள் போடப்பட்டுள்ளமை கால்நடை வளர்ப்போருக்கு மேய்ச்சல் தரவைக்கு தேவையான நிலங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலிற்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

கலந்துரையாடலின் இறுதியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு கருத்து தெரிவித்திருந்தார். (2-281)

## வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் பாண்ட் வாத்தியப்போட்டி



(குருமன்காடு)

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பாண்ட் வாத்திய போட்டி நேற்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. வவுனியா தெற்கு வலயப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற போட்டி நிகழ்வில் 21 இற்கு மேற்பட்ட பாடசாலைகளை சேர்ந்த பாண்ட் குழுக்கள் பங்குபற்றியிருந்தன. ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு மற்றும் ஆரம்ப பிரிவு என மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றன. வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட போட்டி நிகழ்விலே வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதி கல்விப் பணிப்பாளர்கள், உதவி கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-250)

வள்ளுவன் தன்னை உலகுக்கே தந்து
வான் புகழ் கொண்டது தமிழ்நாடு.
~ மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வள்ளுவர் வான் புகழ் கொள்ள அவர் எழுதிய குறளைவிட...?

திருவள்ளுவர் ஆயிரத்து 330 குறட்பாக்களை நமக்குத் தந்தார். ஒரு அதிகாரத்தில் பத்து குறள்கள் என 133 அதிகாரம் அவரால் படைக்கப்பட்டது.

வள்ளுவர் தந்த திருக்குறளால் தமிழ்நாடு வான் புகழ்கொண்டது என்ற பெருமைக்குட்பட்டது.

இதை நாம் கூறும்போது, என்ன நடந்தது இன்று திருவள்ளுவர் குருபூசையும் இல்லையே என்று நீங்கள் முணுமுணுப்பதையும் உய்த்தறிய முடிகிறது.

திருக்குறளைத் தந்த வள்ளுவர் அதற்குப் பொருளும் எழுதி வைத்திருப்பாராயினும் திருக்குறளின் பெருமை வானுயர்ந்திருக்காது என்பது தான் நம் தாழ்மையான கருத்து.

இதை நாம் கூறும்போது இஃதென்ன புதுக்கதை என்றும் நீங்கள் கூறலாம். ஆனால் உண்மை அதுதான்.

திருக்குறள் ஈரடிகளைக் கொண்டது. வள்ளுவர் வாழ்ந்த சங்கம் மருவிய காலத்தில் செய்யுள் அமைப்பே தமிழ்வடிவமாயிற்று.

ஆகையால் திருக்குறளுக்கு பொருள் எழுத வேண்டிய தேவை வள்ளுவருக்கு ஏற்பட்டிருக்க நியாயமில்லை.

ஆனால் அதுவே அவரின் வான்புகழுக்கு வழி வகுத்தது. அதாவது திருவள்ளுவர் தான் எழுதிய குறளுக்கு பொருள் தந்திருப்பாராயின் அதன்பொருளோட்டம் பல்வகைப்படாமல் ஒருமைப் பொருள் கொண்டதாகவே இருந்திருக்கும்.

நல்ல காலம் திருவள்ளுவர் திருக்குறளுக்குப் பொருள் தராமல் தவிர்த்திருந்தார்.

எனினும் தமிழ்மொழியில் வசனநடை தலைமைத்துவம் பெற்றபோது வள்ளுவரின் திருக்குறளுக்குப் பலரும் பொருள் எழுதினர்.

இப்பொருள் வள்ளுவர் நினைத்திராத பொருளையும் உன்னதமாகத் தந்தது.

இதன்காரணமாகவே திருக்குறள் உலகப் பொதுமறையாக ஆவதற்கும் வள்ளுவன் வான் புகழ் கொண்ட தமிழனாகப் போற்றப்படுவதற்கும் வழிவகுத்தது.

ஆக, திருக்குறளுக்கு பொழிப்புரை எழுதிய புண்ணியவான்கள் தத்தம் மெய் அறிவுக்கும் அறச் சிந்தனைக்கும் அமைய தங்கள் உன்னதமான விளக்கத்தை திருக்குறளுக்குக் கொடுத்தனர்.

இதன்காரணமாக திருக்குறள் கூறாத விடயம் எதுவுமில்லை என்று உலகம் போற்றுகிறது. இதைநாம் கூறும்போது இதெல்லாம் எதற்காக? என்ற சந்தேகம் உங்களிடம் ஏற்படவே செய்யும்.

இங்குதான் ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும்.

அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள், ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள் ஒரு கருத்தை அல்லது ஒரு சிந்தனையை மையப்படுத்தி தமது செயற்பாட்டை முன்வைப்பர்.

இதற்கு அரசியல் ஆய்வாளர்கள் என்றிருப்போர் முன்வைக்கின்ற கருத்துக்களையும் விமர்சனங்களையும் பார்க்கும்போது, அடடா! இப்படியா என்று பொதுமக்கள் நினைப்பர்.

ஆனால் உண்மையில் ஆய்வாளர்கள் முன்வைத்த விமர்சனத்துக்கும் குறித்த அரசியல்வாதியின் சிந்தனை நோக்குக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது.

என்ன செய்வது இல்லாததை இருப்பதாக உருவாக்கியபோதுதான் பேய்க்கதைகள் நம் மத்தியில் வந்ததாம்.

அதுபோலத்தான் தேவையில்லாத அரசியல் விமர்சனங்கள் இருக்கின்ற அரசியல் ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகிறது.

# லீசிங் நிறுவன ஊழியர்கள் தாக்கியதில் வவுனியாவில் ஒருவர் படுகாயம்

## தொலைபேசி மூலம் உயிருக்கும் அச்சுறுத்தல்

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் வவுனியா மில் வீதியிலுள்ள லீசிங் நிறுவன ஊழியர்கள் அத்துமீறி உள்நுழைந்த இருவர் வீட்டு உரிமையாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளதுடன் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த 2015ஆம் ஆண்டு லீசிங் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு மாதாந்த கட்டுப்பணம் கடந்த மூன்று மாதங்களாக கட்டுப்படவில்லை.

இதையடுத்து குறித்த மோட்டார் சைக்கிளை கையகப்படுத்துவதற்கு அவ்வீட்டிற்கு லீசிங் நிறுவனத்தின் ஊழியர்கள் இருவர் சென்றுள்ளனர்.

இதையடுத்து குறித்த வீட்டின் உரிமையாளர் பணம் கட்டுவதற்கு தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களைத் தெரிவித்து கிளை முகாமையாளருக்கு அறிவித்துள்ளேன். சில தினங்களில் பணத்தை ஏற்பாடு செய்து கட்டிவிடுவதாகவும் மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன் இழப்பீட்டுப்பணம் வரவில்லை அது வந்ததும் அனைத்துப்பணங்களையும் திரட்டிக் கட்டிவிடுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து வாகனத்தை கையகப்படுத்த வந்த இரு ஊழியர்கள் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்து தரக்குறைவாக அவ்வீட்டின் குடும்பத் தலைவியிடம் நடந்து கொண்டபோது இருபகுதியினருக்குமிடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் கடந்த 30ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் பொலிஸார், தாக்கிய லீசிங் நிறுவன ஊழியர்களைக் கைது செய்யவில்லை.

இவ்வாறு வீட்டிற்குள் அத்துமீறி உள்நுழைந்த லீசிங் நிறுவன ஊழியர்கள் மீது பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

வீடுகளுக்குள் சென்று அடாவடியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் வவுனியாவிலுள்ள லீசிங் நிறுவனத்தின் முகாமையாளரிடம் பக்கச்சார்பின்றி விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் கோரியுள்ளார்.

இதேவேளை நேற்றுக் காலை 10 மணியளவில் தொலைபேசியில் 077 257 7218 என்னும் இலக்கத்தில் அழைப்பு மேற்கொண்ட நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறும் தவறினால் உங்களை 4 ஆம் மாடிக்கு கொண்டு சென்று விசாரிப்போம் என்றும் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-281)

## ஸ்ரீலங்கா சு.கட்சியின் முக்கிய கூட்டம் இன்று

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் மிக்க மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தற்காலிக நிருவாக சபை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுத்தல் உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இன்றைய கூட்டத்துக்கு சில தரப்பினருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## தலங்கம அகுரேகொட பகுதியில் ஹெரோயினுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் பொலிஸாரால் கைது

தலங்கம, அகுரேகொட பகுதியில் ஹெரோயினுடன் பெண்ணொருவர் உட்பட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது மோட்டார் வாகனத்தில் பயணித்து கொண்டிருக்கும் போதே இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் இருந்து ஹெரோயின்15.6 கிராம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் ஹோகந்தர தெற்கு பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## மோ.சைக்கிள் லொறியுடன் மோதி விபத்து; ஒருவர் பலி

வெலிவேரிய, ஹெல்வல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று லொறி ஒன்றை முந்திச்செல்ல முற்பட்ட போது லொறியின் சக்கரத்தில் சிக்குண்டு இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கிதுல்கல, மல்வத்த பகுதியை சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் வெலிவேரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரட்டுக்களுடன் சீனப் பெண்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 200 சிகரட் பெட்டிகளை நாட்டிற்குள் கொண்டுவர முற்பட்ட சீன நாட்டு பெண்கள் இருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் சீன நாட்டிலிருந்து வந்த ஸ்ரீலங்கா விமான சேவைக்கு சொந்தமான UL 881 விமானத்தில் குறித்த பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்துள்ளனர்.

39 மற்றும் 40 வயதுடைய பெண்களே இவ்வாறு சிகரட தொகைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 40,000 சிகரட்கள் உள்ளடங்கிய 200 பெட்டிகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட சிகரட்கள் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியுடையவை என சுங்க ஊடக பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

குறித்த சிகரட் தொகை அரசுடமையாக்கப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட பெண்கள் எச்சரிக்கை விடுக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**நவபக்தி என்றால் என்ன?**

அறிவில்லாத சாதாரண மக்களை பக்தி மார்க்கத்திற்குள் வழிநடத்தும் ஒன்பது விடயங்களுண்டு. அவை நவபக்தி என்று கூறப்படுகிறது.

கேட்டறிதல், கீர்த்தனம், நினைவாற்றல், சேவை, ஆராதனை, வணங்குதல், தொண்டு செய்தல், ஒன்றுபடுதல், அர்ப்பணம் ஆகியவை நவபக்திகளாகும். அதாவது இறைவனின் நாமத்தைக் கேட்பது, பகவத் கீதையின் சுலோகங்களைப் பாடுதல், இறைவனை நினைப்பது, இறைவனுக்குச் சேவை செய்வது, ஆராதனை செய்வது, மண்டியிட்டு வணங்குதல், நான் இறைவனுக்கு அடிமை என்று நினைத்து அவனுக்குச் சேவை செய்தல், இறைவனை நமது உற்ற தோழன் என்று நினைத்து சேவை செய்தல் ஆகியவையாகும்.

*(தொடரும்)*

## டிறிபேக் கல்லூரியில் சிரமதானம் இன்று

(யாழ்ப்பாணம்)

யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மாபெரும் சிரமதானப் பணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிமுதல் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், டிறிபேக் தாரகை விளையாட்டுக் கழகம் மற்றும் முன்னாள் ஆசிரியர் கழகம் ஆகியோரால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச் சிரமதானப் பணியில் அனைத்து பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காலை 6.00 மணி முதல் பாடசாலை வளாகத்தில் அனைவரையும் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-89)

# பாடசாலைகளுக்கிடையிலான போட்டி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வெற்றி



17 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான டிவிசன் 2 கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது. அதன் அம்சமாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் நடந்த போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சயிலரூபன் 36 ஓட்ங்களையும் கோமைந்தன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி யின் இயலராசன் 4 விக் கெட்களையும் விதுசன் 3 விக்கெட்களையும் பெற்றுக்கொண்டனர். 192 ஓட்டங் களைப் பெற்று இலக்கை கைப்பற்றிக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி அங்கவன் சாருஜானின் அபார பந்து வீச்சின் மூலம் 187 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தார்.

துடுப்பாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக இந்துஜன் 61 ஓட்டங்களையும் சதுர்சன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் யாழ். இந்து கல்லூரி அணியின் அங்கவன் 5 விக்கெட்களையும் சாருஜன் 3 விக்கெட்களையும் வீழ்த்தினர். இப்போட்டியில் சாருஜனின் அபார பிடியெடுப்பே யாழ். இந்துவின் வெற்றியை உறுதி செய்தது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# தூய ஒளி வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி முடிவுகள்

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் தூயஒளி வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பாடும் மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்ட முடிவில் பாடுமீன் விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் யங்கென்றிஸ் விளையாட்டுக்கழத்தை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் மோதியது. இப் போட்டியில் 01:01 என்ற கோல் அடித்ததினால் சமநிலை தவிர்ப்பு ஆட்டம் முறையில் 04:02 என்ற கோல்கண க்கில் யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (க-06)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# முல்லை.மாவட்ட கழகங்களுக்கிடையிலான போட்டி நண்பர்கள் - உதயம் அணி இறுதியில்



இலங்கை இராணுவத்தின் 593 வது படைப்பிரிவு நடத்திவரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கழகங்களுக்கிடையிலான இருபதுக்கு இருபது போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று (03.06.2018) முல்லைத் தீவு மாவட்டச் செயலக மைதானத்தில் மதியம் ஒரு மணிக்கு நடைபெறும்.

இறுதிப்போட்டியில் உடையார்கட்டு நண்பர்கள் அணியும் முல்லைத்தீவு சந்திரன் அணியும் மோதவுள்ளன. மேலும் இத் தொடரில் 62 அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நண்பர்கள் அணி அரையிறுதி ஆட்டத்தில் முல்லைத் தீவு உதயம் அணியை 36 ஓட்டங்களாலும், சந்திரன் அணி வற்றாப்பளை அலையோசை அணியை 115 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ரூபா 50 ஆயிரமும் 2 ஆம் இடத்தை பெறும் அணிக்கு ரூபா 35 ஆயிரமும் இரண்டு அணிகளுக்கும் வெற்றிக்கேடயங்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் இறுதிப் போட்டியில் இலங்கை அணியின் முன்னாள் வீரரும் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளருமான மஹேல ஜெயவர்த்தன மற்றும் இலங்கை அணியின் வீரர்களான அஜந்த மெண்டிஸ் மற்றும் அசேல குணரத்ன ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை விசேட அம்சமாகும் (க)

# பாடசாலைகளுக்கிடையிலான துடுப்பாட்டம் யாழ்ப்பாண கல்லூரி-ஸ்கந்தா போட்டி சமநிலையில்

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு 3 இற்கான 15 வயது பிரிவினருக்கான துடுப்பாட்ட போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதய கல்லூரி அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணித்தலைவர் விஸ்னுகாந்த் முதலில் கழத்தடுப்பினை தெரிவு செய்தார். அதற்கமைய துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதய கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸ்சிற்காக 55 ஓட்டங்களை பெற்று அனைத்து இலக்கினையும் இழந்தது. அவ் அணி சார்பாக அனோஜன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக விஸ்னுகாந்த் அபாரமாக பந்து வீசி 06 இலக்கினையும் அகஸ்ரின், பிருந்தன் தலா 02 இலக்கினையும்கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸ்சினை தொடர்ந்த யாழ்ப்பாணக் கல்லூரி 63 ஓட்டங்களை பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. அவ் அணி சார்பாக அணித்தலைவர் விஸ்னுகாந்த் 35, அகஸ்ரின் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்கந்தா சார்பாக லவன் 06, கௌரி சங்கர் 03 இலக்குகளையும் கைப்பற்றினர்,

தனது இரண்டாவது இன்னிங்ஸ்ஸினை தொடர்ந்த ஸ்கந்தவரோதய அணி 116 ஓட்டங்களுக்கு 09 இலக்கினை இழந்தபோது தனது ஆட்டத்தை இடை நிறுத்தியது. அவ் அணி சார்பாக அனோஜன் 48, வினோஜன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக கௌசிகன் 05, விஸ்னுகாந்த் 02 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 109 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்பதுடன் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 11 ஓவர்களுக்கு 83 ஓட்டங்களுக்கு 3 இலக்கினை இழந்திருந்த போது நேரம் போதாமையினால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. கௌசிகன் 37, விஸ்னுகாந்த் 15, சுருதிகன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லவன் 01, கௌரிசங்கர் 01 இலக்கினை கைப்பற்றினர். ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க)

# தினேஷ் கார்த்திக் இந்திய அணியில்




ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விக்கெட் கீப்பர் சாஹா விலகிய நிலையில் தினேஷ் கார்த்திக் இந்திய அணியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணிக்கு ஐசிசி முதல் முறையாக டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்து வழங்கியுள்ள நிலையில் தனது முதல் போட்டியை இந்தியாவுக்கு எதிராக விளையாடவுள்ளது. இப்போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி பெங்களூரில்நடைபெறவுள்ளது.

இந்நிலையில் ஐபிஎல் தொடரில் இந்திய வீரர் சாஹாவுக்கு விரலில் காயம் ஏற்பட்ட நிலையில் அவர் இந்த டெஸ்தொடரிலிருந்து விலகியுள்ளார். இதையடுத்து தினேஷ் கார்த்திக் அவருக்கு பதிலாக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். சமீபத்தில் நடந்து முடிந்த ஐபிஎல் தொடரில் கலக்கிய தினேஷ் கார்த்திக் ஆப் கானிஸ்தான் தொடரிலும் அசத்துவார் என எதிர்பார்க் கப்படுகிறது. (க)

# சென்னை அணிக்கு எல்லாமே டோனிதான்! உரிமையாளர்களை விமர்சித்த கவுதம் கம்பீர்



சென்னை அணியில் டோனிக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரம் தான் அந்தணியின் வெற்றி ரகசியம் என்று கவுதம் கம்பீர கூறியுள்ளார்.

இந்தியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த ஐபிஎல் தொடரில் டெல்லி அணிக்காக கவுதம் கம்பீர் தலைவராக பதவியேற்றார்.

அதன் பின் திடீரென்று தன்னுடைய தலைவர் பதவியிலிருந்து கம்பீர விலகினார்.

அதைத் தொடர்ந்து டெல்லி அணி விளையாடிய போட்டியில் களமிறங்காமல், மற்ற வீரர்களை உற்சாகப்படுத்தி வந்தார். இந்நிலையில் கவுதம் காம்பீர், அதிக பணம் புழங்கும் தொழிலாக ஐபிஎல் மாறியுள்ளது.

வீரர்கள், ஊழியர்களை பல கோடி போட்டு வாங்கும் அணி உரிமையாளர்கள் தங்களின் தொழிலில் ஜொலித்து வருகின்றனர். தொழிலைப் போலவே ஐபிஎல் போட்டியில் வெற்றி பெற நினைக்கின்றனர்.

அதனால் அணி நிர்வாகத்தை தாண்டி மைதானத்தில் பெறும் வெற்றி, தோல்வியில் தலையிடுகின்றனர்.

ஆனால் சென்னை அணிக்கு டோனி தான் எல்லாமே, அவரின் முடிவுகளில் உரிமையாளர்கள் தலையிடுவது இல்லை.

டோனி என்ன முடிவு எடுக்கிறாரோ, அது தான் நிர்வாகத்தின் முடிவும், டோனிக்கு சென்னை அணி நிர்வாகம் கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரம் தான் அந்தணியின் வெற்றிக்கான ரகசியம் என்று கம்பீர் கூறியுள்ளார். (க)

## ஒரே இடத்தில் ஆறு மணி...

விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி புஜித விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமர்ந்திருப்பவர்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நூற்றுக்கு 48 வீதமான ஆண்களும் 94 வீதமான பெண்களும் மரணமடைவதற்கான ஆபத்தை அதிகம் கொண்டவர்களாக காணப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், எல்லா தரப்பினரும் ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்து கடமையாற்றுவதை தவிர்த்து கொள்ள வேண்டும் எனவும், ஒவ்வொரு 30 நிமிடங்களுக்குப் பின்னரும் ஒரு முறை நடக்க வேண்டும் எனவும் மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர்களும் ஒரே இடத்தில் இருந்து விளையாடுவது மற்றும் அமர்ந்திருப்பது என்பவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் வைத்திய நிபுணர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## தபால் அதிகாரிகள்...

திகதி நள்ளிரவு வரை இரண்டு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக தபால் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பில் சகல தபால் நிலையங்களிலுமுள்ள தபால் அதிபர்கள் ஆதரவு வழங்கவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் எச்.கே.காரியவசம் தெரிவித்துள்ளார். (ம)

## எட்டு மாத குழந்தை...

தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை இரவு இரண்டு மணியளவில் வீடு புகுந்து கடத்திச் செல்லப்பட்ட 8 மாத குழந்தை புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் இருப்பதாக கேப்பாப்பிலவு விமானப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்து குழந்தை மீட்கப்பட்டுள்ளது. அங்கு சென்ற பொலிஸார் குழந்தையையும் இரண்டு பெண்களையும் கைது செய்துள்ளனர்.

மாலை 4 மணியளவில் கைது செய்யப்பட்ட குழந்தை மாலை 6 மணியளவில் வவுனியாவில் இருந்து வருகைதந்த குழந்தையின் தாய் மற்றும் பொலிஸ் அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர்.(ம-281)

## தென்னிலங்கை மீனவர்...

தொழிலால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் ஆராயும் சிறப்புக் கலந்துரையாடல் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

கடலட்டை தொழிலை மேற்கொள்ள கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினரால் வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்யவேண்டும் என்றும் கடலட்டை தொழிலை அந்தப் பகுதியில் முழுமையாக தடை செய்ய வேண்டும் என்றும் உள்ளூர் மீனவர்களினால் இங்கு தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைவாக நீரியல் வளத்திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதுடன் இந்த நடவடிக்கை தொடர்ந்தால் எதிர்வரும் நாள்களில் போராட்டங்களை தாம் முன்னெடுக்கப்போவதாகவும் உள்ளூர் மீனவர்கள் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தனர்.

வடமாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம்,எஸ்.சுகிர்தன் உள்ளிட்டவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-4,64)

## பயங்கரவாத தடுப்பு...

துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சட்ட மூலத்தின் மூலம் மனித உரிமைகள் கடந்த காலத்தில் மீறப்பட்டு

# தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்கும் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமற்றது என்று வெளியான செய்தியில் உண்மையில்லை

## ஊடக மாநாட்டில் முகிழ்நிலை ஆசிரியர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்கும் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமற்றது என வெளியாகிய செய்திகளில் எந்தவித உண்மைத்தன்மையும் இல்லை என தெரிவித்துள்ள கல்வியியற்கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள், தமக்கான உணவை தாமே தெரிவு செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமற்றதாக இருப்பதாக சில விரிவுரையாளர்கள் குற்றம்சாட்டியுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. குறித்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கடந்த வியாழக்கிழமை கல்லூரியில் இடம்பெற்றது. அதன் போதே முகிழ்நிலை ஆசிரியர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

எமது கல்லூரியில் தரமற்ற உணவு வழங்கப்படுவதாக அண்மையில் பத்திரிகை ஒன்றில் வெளியாக செய்தியில் எந்தவிதமான உண்மைத்தன்மையும் இல்லை, குறித்த விடயம் தொடர்பாக கல்லூரிச் சமூகம் கவலையடைகிறது. ஆசிரிய மாணவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவகையில் தான் உணவு வழங்கப்படுகிறது. அதற்கான குழுவும் முறைப்படி இயங்கி வருகிறது.

இதில் ஆசிரிய மாணவர்களை தவிர வேறு எவருடைய தலையீடும் இல்லை. தரமற்ற உணவு வழங்கப்படுவதனால் நாம் இந்த விடயத்தை எமது பெற்றோர் ஊடாகவேனும் வெளிப்படுத்தியிருப்போம். இவ்வாறான உண்மைக்கு புறம்பான செய்தியால் எமது பெற்றோர் மற்றும் எமது கல்லூரிச்சமூகத்தினர் ஏனைய பொதுமக்கள் குழப்பத்தில் உள்ளார்கள். கல்லூரியின் நற்பெயரை அவமதிக்கும் செயற்பாடாக நாம் இதை பார்க்கிறோம். வருடாவருடம் இங்கு மாணவர்கள் கற்கைநெறிக்காக புதிதாக உள்வாங்கப்படுகிறார்கள். வெளி மாகாணம் மற்றும் மாவட்டங்களில் இருந்து வந்து இங்கு கற்கைநெறியை தொடர்கிறார்கள் இவ்வாறான செய்திகள் கல்வியை தொடரவரும் மாணவர்களுக்கு பயத்தை உண்டுபண்ணுவதாக அமையும்.

எமது உணவு விடயத்தில் சுகாதாரத்துறையினர் அடிக்கடி சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள், எமது ஆசிரிய மாணவர்களின் விருப்பப்படியும் உணவினை சுகாதாரமுறைப்படி அட்டவணைப்படுத்துகிறோம். அவ்வாறே இத்தனை காலமும் செயற்படுத்தி வருகிறோம் என மேலும் தெரிவித்தனர். (ம-9)

-----

ள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, மனித உரிமைகளுக்கு சாதகமான முறையில் அரச பாதுகாப்பு சட்டம் ஒன்றை கொண்டு வரவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ம)

## இந்த அரசு நீடித்தால்...

தூக்குக் கயிறைப் போட வேண்டிய நிலைமை ஏற்படும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் வந்தால் ஊடகவியலாளர்கள் கழுத்தில் கயிறைப் போட்டு தொங்க வேண்டி ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

மல்வத்து மகா விகாரை வளாகத்தில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்துக்கு ராஜபக்ஷாக்கள் மீது மிகுந்த பயம் காணப்படுகின்றது. இந்த அரசாங்கத்துக்கு எதனையும் செய்து கொள்ள முடியாமல் போயுள்ளது. அமைச்சர்கள் ஊடகத்தின் முன்னால் கூறும் கருத்துக்கு ஒரு பெறுமதி இல்லாமல் போயுள்ளதாகவும் அவர் அறிவித்தார். (ம)

## எம்முடன் இருப்பதே...

ளைச் சந்தித்த பிரதமர் தங்களுடனான கூட்டணியைத் தொடர்வதே ஜனாதிபதிக்கு அரசியல் ரீதியில் பாதுகாப்பான அணுகுமுறையாக அமையும் என்று கூறியதாக தெரியவருகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் இணைந்து தனது எதிர்கால அரசியலை முன்னெடுக்கும் யோசனையை கொண்டிருப்பதாக தெரிகின்றது.

ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைத்து கொள்வதிலும் ஜனாதிபதி நாட்டம் காட்டுகின்றார் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இவ்வாறு அவர் செய்வாரேயானால், அது அவருக்கு பாதகமானதாகவே இறுதியில் முடியும் என்றும் பிரதமர் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாக தெரியவருகின்றது.

கடந்தவாரம் கொழும்பு இலங்கை மன்ற கல்லூரியில் நடைபெற்ற காலஞ்சென்ற மாதுளுவாவே சோபித தேரரின் நினைவு தின வைபத்திற்கு அழைப்பில்லாது சென்று கலந்துகொண்ட ஜனாதிபதி சிறிசேன தன்னைப்பற்றியே கூடுதலாக விமர்சித்திருந்தமை குறித்து தனது விசனத்தை வெளிப்படுத்திய விக்கிரமசிங்க, அந்த விமர்சனங்களுக்கு பதிலளித்து காலத்தை வீணாக்க விரும்பவில்லை என்றும் 2020 வெற்றி இலக்கை மையப்படுத்திய 18 மாதகால திட்ட வியூகம் வகுக்கப்பட்டிருப்பதால் அதற்காக நாம் எல்லோரும் ஒன்றிணைந்து பயணிக்க

-----

வேண்டியதே இன்று முக்கியமானது என்றும் ஊடகவியலாளர்களிடம் கூறியதாக நம்பகமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. (ம)

## இறுதி யுத்தத்தில்...

காணாமல் போனோர் அலுவலகத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடுகள், முல்லைத்தீவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றன.

இதனை புறக்கணித்து மக்கள் போராடியதோடு, சரணடைந்தோரின் பெயர்ப்பட்டியலை வெளியிடுமாறும் அதன் பின்னர் தாம் சாட்சியப்பதிவிற்கு ஒத்துழைப்பதாகவும் உறவினர்கள் குறிப்பிட்டனர். அதற்கு பதிலளித்த போதே சாலிய பீரிஸ் மேற்குறித்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

காணாமல் போனோரது உறவினர்களின் உணர்வை தம்மால் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளதென குறிப்பிட்ட சாலிய பீரிஸ், காணாமல் போனோரை கண்டுபிடிக்கலாம் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

இதேவேளை கடந்த காலங்களை போலல்லாது, காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் நம்பத்தகுந்த வகையில் அமையும் என்றும், மக்கள் தம்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ம)

## காணாமல் ஆக்கப்பட்டோரின்...

தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஒரு பெரும் பிரச்சினையாகக் காணப்படுவதால் சில நாட்களுக்குள் அதற்கான தீர்வைப் பெறமுடியாது. அதற்கான தீர்வுக்கு நீண்டகாலம் தேவைப்படும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புவதாக சாலிய பீரிஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## பொன்சேகாவின்...

ள்ளது.

தனியார் நிறுவனத்தின் இந்த கட்டடத்தை 5 ஆண்டுகள் குத்தகை உடன்படிக்கையில் பிரதேச அபிவிருத்தி அமைச்சு 2016 ஜூன் 5ஆம் திகதி பெற்றுள்ளது. அதன் குத்தகைக் காலம் 2021ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி நிறைவடைகிறது.

இந்த கட்டடத்தை பிரதேச அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்த போது, சரத் பொன்சேகாவால் பெறப்பட்டுள்ளது. எனினும் கூட்டு அரசின் அண்மைய அமைச்சரவை மறுசீரமைப்பின் போது வனவிலங்குகள் அமைச்சும் பொன்சேகாவிடம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் இரண்டு அமைச்சுகளும் இணைக்கப்பட்டுள்ளதால் வனவிலங்குகள் அமைச்சு அலுவலகத்திலிருந்து ராஜகிரியவிலுள்ள தனியார் கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (ம)

## வவுனியாவில் கல்வீச்சு...

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் மைதானத்திற்கு அருகே அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட பொறுப்பாளரும் மத்திய குழு உறுப்பினருமான கிறிஸ்டி குகராஜா (குகன்) நினைவுதூபியின் மீது நேற்று மதியம் இனந்தெரியாத நபர்கள் கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அவ்விடத்தில் பரவலாக கற்கள் காணப்படுவதுடன் இக் கல்வீச்சு தாக்குதலில் நினைவுத்தூபியின் கண்ணாடி பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல் நேரமும் இந் நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## காத்திரமான நடவடிக்கை...

யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கமும் சமாதானத்தினைக் கட்டியெழுப்பலும்' எனும் நூல்வெளியீட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போனவர்கள் விடயத்தில் ஜனாதிபதி அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்பதற்காகவே அந்த அலுவலகம் தொடர்பான அமைச்சை நான் பெறவில்லை. அன்று காணாமல் போனோர் தொடர்பில் வீதியில் இறங்கி போராடியவன் என்ற வகையில் அது தொடர்பில் பேசுவதற்கு எனக்கு உரிமையுள்ளது.

அதிகாரங்கள் கட்டாயமாகப் பகிரப்பட வேண்டும் என்பதுடன், ஆரம்பகால ஆணைக்குழுக்கள் போல் அல்லாது காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு தற்போதைய அலுவலகத்தின் ஊடாக சிறந்த தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும்.

அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும், வடக்கு கிழக்கில் 70 ஆயிரம் பேர் விதவைகளாக உள்ளனர். வடக்கு கிழக்கில் ஒரு இலட்சம் வீடுகளை அமைப்பதாக எனது அரசாங்கம் கூறியது ஆனால் தற்போது மூன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும் அது நடைபெறவில்லை.

இந்தியாவும், இராணுவமும் இணைந்தே 45 ஐயாயிரம் வீடுகளை அமைத்துள்ளனர், ஆனால் அரசாங்கம் இந்த விடயத்தில் தோல்வியடைந்துள்ளது. எனவே முன்னாள் போராளிகள் உள்ளிட்ட விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்காமல் முன்னோக்கி நகர முடியாது. புதிய அரசியல் அமைப்பு தொடர்பான முன்நகர்வுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## வயோதிப தம்ப...

ட்டுச் சென்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மானிப்பாய் ஆனந்தா வீதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

கொள்ளையர்களின் தாக்குதலில் தலையில் படுகாயமடைந்த குருநாதர் இரட்ணம் (வயது69) என்ற வயோதிபப் பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், தடயவியல் பொலிஸாருடன் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

ஆரம்ப விசாரணையில் 8 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டதாக தெரியவந்திருந்ததுடன் மேலதிக விசாரணைகளின் பின்னரே கொள்ளையிடப்பட்ட பொருள்கள் தொடர்பில் சரியான தகவலை வழங்க முடியும் என்றும் பொலிஸார் கூறினர். (ம)

## எந்தவொரு தமி...

ட்டுக்கு மறுப்பு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் நினைவுப் பேருரையும் சாவகச்சேரியில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலையே ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விநாயகமூர்த்தியும் நானும் நீண்ட காலமாக ஒன்றாக இணைந்து பயணித்திருக்கின்றோம். அவருக்கும் எனக்கும் இடையில் நிறைய தொடர்புகள் இருக்கின்றன. அதில் எங்களுக்குள் இடம்பெற்ற ஒரு சம்பவம் குறித்து நான் இந்த இடத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதாவது இலங்கை இராணுவம் கடந்த 1990 ஆம் ஆண்டு இருந்ததைப் போன்று மீண்டும் முகாம்களுக்கு செல்ல வேண்டுமென அரசாங்கத்தை கோருவதற்கு தமிழ்த் தரப்புக்கள் தீர்மானிக்கின்றன. இதனை அன்று பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எனக்கு அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்த போது என் மனதில் வஞ்சகம் ஏதுமில்லாமல் அவ்வாறு நாம் கோரினால் அரச தரப்பினர் ஆனையிறவை தம்மிடமே மீள தர வேண்டுமெனக் கேட்கலாம் என்று நானர் கூறியிருந்தேன். அப்போது எனக்கருகில் இரா.சம்பந்தனும், விநாயகமூர்த்தியுமே இருந்தனர்.

அவ்வாறு நான் கூறிய கருத்து கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் என சுழன்று வந்து திரிவுபடுத்தப்பட்டு ஆனந்த சங்கரி ஆனையிறவை அரச படைகளிடம் புலிகள் ஒப்படைக்க வேண்டுமெனக் கோருவதாக செய்திகள் பரவியிருந்தது. ஆனால் அந்தக் கருத்தை நான் சொல்லவில்லை என்பதுடன் அப்போதைய அரச தரப்பினர்களிடம் ஆனையிறவை நீங்கள் இனி புலிகளிடமிருந்து பிடிப்பதென்பது பகல் கனவு என்றும் அதனை எந்தக் காலத்திலும். நீங்கள் பிடிக்க முடியாதென்றுமே குறிப்பிட்டிருந்தேன். அத்தோடு இனத்திற்காகவும் மண்ணுக்காகவும் எத்தனையோ இழப்புக்களையும் தியாகங்களையும் புலிகள் செய்திருந்ததையும் குறிப்பிட்டிருந்தேன்.

இவ்வாறான கருத்துக்களை தெரிவித்த நான் 'ஆனையிறவை கொடுக்க சொல்லி கேட்டிருப்பனோ? என்பதையும் சிந்தித்து பார்க்க வேண்டும். இருந்தும் நான் ஆனையிறவை கொடுக்க வேண்டுமெனக் கோரியதான செய்திகள் பரவி என்மீதான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இந் நிலையில் தன்னாலேயே இவ்வாறானதொரு நிலைமை வந்துவிட்டதாக கருதிய விநாயகமூர்த்தி என்னிடம் பேசுவதற்கு பலதடவைகள் முயற்சித்து ஒருதடவை என்னிடம் பேசியும் இருந்தார்.

அதன்போது தான் இவ்வாறு எந்தக் கருத்தையும் எவருக்கும் சொல்லவில்லை என்று என்னிடம் கூறிய போது அதனை நானும் ஏற்றுக் கொண்டு அதனை நீங்கள் கூறவில்லை என்றும் எவ்வாறு அது திரிபுபடுத்தப் பட்டது என்று எனக்குத் தெரியும் என்றும் நான் விநாயகமூர்த்தியிடம் கூறியிருந்தேன்.

இவ்வாறானதொரு நிலையில் தம்பி பிரபாகரனுக்கும் இந்த விடயம் தெரிய வந்த போதும் அவரும் இதனை இலகுவில் நம்பவில்லை. அவ்வாறு அவர் எந்தச் சம்பவம் என்றாலும் அதனை ஆராய்ந்தே முடிவுகளை எடுக்கின்ற பண்பு அவரிடம் இருந்தது. அவ்வாறு அவருக்கு இருக்கின்ற பண்புகளோ பெருந்தன்மைகளோ இன்றிருக்க கூடிய எந்தவொரு அரசியல் தலைமைகளுக்கும் கிடையாது.

ஆனாலும் அன்று முதல் மலை உச்சியிலிருந்து உருட்டி விடப்பட்ட நான் இன்று வரைக்கும் எழுந்திருக்கவே இல்லை. அதற்கு விநாயகமூர்த்தி தான் காரணமென பலரும் நினைத்தனர். ஆனால் உண்மையில் அவர் காரணமல்ல.

எவர் அதனை இவ்வாறு சொன்னவர் யார் என்று எனக்கு தெரியும். அதன் விளைவு தான் இன்று நடக்கிறது என்றார். இதேவேளை தமிழ்க் கட்சிகள் பலவும் இன்றைக்கு தேசியம் பேசுகின்றன. அதில் தேசியம் பேசுகின்ற அல்லது அந்த கொள்கையுடன் பயணிக்கின்ற கட்சிகள் எவை என்பதையும் பார்க்க வேண்டும். இன்றைக்கு கூட்டமைப்பில் இருக்கின்ற ரெலோ, புளொட் போன்ற கட்சிகள் அரசுடன் இருந்த அரச கட்சிகளாகவே பார்க்கப்பட்டன. அவர்களுடன் இன்று பலரும் தேசியம் பேசுகின்றவர்களாக இருக்கின்றனர்.

இதற்கு மேலதிகமாக தற்போதும் தேசியம் பேசுகின்ற கூட்டமைப்பினர் ஈ.பி.டி.பியுடனேயே ஒன்றாக சேர்ந்து செயற்படும் நிலைக்கு வந்துள்ளீர்கள். ஆக இப்ப என்றாலும் உங்களுக்கு கொஞ்சமாவது தேசியம் இருக்கிறதா என்று எண்ண வேண்டும். ஈ.பி.டி.பியுடனே சேர்ந்து செயற்படும் கூட்டமைப்பினரின் தேசியம் என்ற கொள்கை, கௌரவம் எல்லாம் எங்கே சென்று விட்டது. தமிழ்த் தேசியத்திற்காக உயிரிழந்த பொன்னம்பலம், சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் கட்டிக்காத்து வளர்த்த கௌரவம் எங்கே? இதுவா இன்று நீங்கள் அவர்களுக்கு கொடுக்கும் கௌரவம்? என்றும் கேள்வி எழுப்பினார்.

ஆகவே தற்போது எல்லோரையும் ஏமாற்றி வருகின்ற நீங்கள் எல்லோரையும் மீண்டும் கண்ணீர் விட்டு அழும் நிலைக்கு கொண்டு செல்லாதீர்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு நான் கூறுவது எல்லாம் என்னுடைய வேதனையல்ல. அவை ஒவ்வொன்றும் இந்த மக்களின் வேதனைகள் தான்.

மேலும் எமது இளைய தலைமுறையினர் வரலாறுகளையும் உண்மைகளையும் அறிந்து கொள்ள வேண்டும். மக்களுக்காக செயற்பட முன்வந்தவர்கள் பணம் சேர்ப்பதும் பட்டம் பதவிகளைப் பெறுவதையுமே நோக்கமாகக் கொண்டிருக்காது மக்களுக்காக நீதியாகவும் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்ற வேண்டும் என ஆனந்தசங்கரி தெரிவித்தார். (ம-4)


CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
(சி-2759)

விற்பனைக்கு

* மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை
தொடர்புகளுக்கு 077 357 3055
(4229)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3 - 5 DAYS
0768226240
V2 TRAVELs
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-2758)

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5666 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை
(C-2780)

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
V. ஜெகன் (Trained in France- 2007)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas.
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 09.06.18 சனி காலை 10 மணி.
81, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973 ஆரம்பம் : 11.06.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-2782)

எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டற் நிறுவனங்களின் இணை நிறுவனம்.
அருள்
சாவகச்சேரி
இல. 01 NDB வங்கிக் கட்டடம், நுணாவில் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
நெல்லியடி
இல. 01 பெற்றோல் செற் லேன், நெல்லியடி 076 440 1576
கிளிநொச்சி
இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்) 076 443 1576
(சி-2757)

மணமகள் தேவை
1978ல் பிறந்த பூச நட்சத்திரமுடைய அரச உத்தியோகத்தருக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை.
077 5935758, 077 8449890
(4230)

ஆடம்பர வசதியுடன் கூடிய
வீடு வாடகைக்கு உண்டு
யாழ்.நகரில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. சுபகாரியங்கள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சகல வசதிகளும் உண்டு. A/C, Non A/C தளபாட வசதிகள். இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் என அனைத்து வசதிகளும் உண்டு.
தொடர்பு:- 077 311 0015
(4175)


வேலைவாய்ப்பு
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல சேவை நிறுவனம் ஒன்றிற்கு கிளை உதவியாளர் (ஆண்) தேவை.
தகைமைகள்
● A/L சித்தி
● ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
● வயது எல்லை 18-30 வரை.
● கிளிநொச்சி நகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
T.P.
076 690 8976, 076 690 8963

வேலைவாய்ப்பு
எவறெஸ்ட் (Everest) நிறுவனமானது தனது புதிய கிளையினை கிளிநொச்சியில் ஆரம்பித்துள்ளது. மேலும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கிளைகளை நிறுவவுள்ளது. இக் கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் பின்வருமாறு:
* விற்பனைப் பிரதிநிதிகள் * முகாமையாளர்கள்
* மேற்பார்வையாளர்கள் * வரவேற்பாளர்கள்
* உதவி முகாமையாளர்கள்
தகைமை
O/L, A/L படித்தவர்கள் மற்றும் Diploma உடன் தொடர்பு கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு 077 9856671, 077 1717278
(சி-2793)

Parcel.lk FTV Express
மகாராஜா பொதிகள் சேவை
* கடலுணவு, எண்ணெய் வகை, பழவகை, பால்மா என்பன வற்றை வேறு எந்த விதமான மேலதிக கட்டணம் இன்றி சாதாரண சேவை கட்டணத்துடனே அனுப்பிக் கொள்ளமுடியும்.
* ஆகாய மற்றும் கடல் மார்க்க பொதிகளை மிகக் குறைந்த கட்டணத்தில் நம்பிக்கையுடன் அனுப்பிக் கொள்ளலாம்.
* உள்நாட்டு பொதிகள் சேவை.
30 வருடத்திற்கு மேலதிகமாக வாடிக்கையாளர் நன்மதிப்பை பெற்ற ஒரே நிறுவனம்

| 11 Kg க்கு மேல் 01 Kg க்கான கட்டணம் | | | | |
|---|---|---|---|---|
| லண்டன் | ஜேர்மனி | அவுஸ்திரேலியா | சுவிஸ் | கனடா |
| Rs.600/- | Rs.600/- | Rs.800/- | Rs.900/- | Rs.900/- |

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 81, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. | 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, யாழ்.சாலை கிளிநொச்சி. |
| 021 2224338 021 4925024 | 021 4930039 | 024 4930200 076 6908961 | 021 4930330 |


(C-2797)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 168

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 03.06.2018 தொலைபேசி : 021 222 3378



## குளிரில்



## கொதிப்பில்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## ஆசனம் பெருத்தும் போசனம் சிறுத்தும் இருக்க வேணும்

**ப**ண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. வாத்தியார் வைத்திலிங்கத்தைத் தவிர, ஏனைய மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் இறைவணக்கம் முடிந்து அனைவரும் அமர, வாத்தியார் வைத்திலிங்கமும் அந்நேரம் அங்கு வந்து சேர்ந்தார். என்ன வாத்தியார் இண்டைக்குக் கொஞ்சம் பிந்திப் போச்சுது. என்ன நடந்தது? சாத்திரியார் சதாசிவம் வினவினார்.

அதைப்பிறகு சொல்லுறன். இப்ப ஆலடியில இரண்டு நிமிட மௌன அஞ்சலியைத் செலுத்துவம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்தனர். சிறந்த எழுத்தாளரும் மிகச் சிறந்த பேச்சாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியையுமான செல்வி. புஸ்பா செல்வநாயகம் அவர்களின் மறைவுக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம இளைப்பாறலுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம்.

வாத்தியாரின் இந்த அறிவித்தலோடு ஆலடி அமைதியுற்றது.

மௌன அஞ்சலி முடிந்து அனைவரும் மீண்டும் அமர்ந்து கொண்டனர்.

**வாத்தியார்:** மாநாட்டிற்கு வருவதற்கு சற்றுப் பிந்திப் போயிற்றுது. செல்வச்சந்நிதி முருகனிட்ட ஒருக்காப் போய் வந்தனான். அதுதான் கால தாமதமாயிற்றுது.

**சாத்திரியார்:** சந்நிதியான் எப்படி இருக்கிறார்.

**வாத்தியார்:** அவருக்கென்ன. அன்று போல தான் இன்றும். சந்நிதியான்ர துணையோட, துணையில்லாதவர்கள் வாழுகினம்.

**கங்காணி:** அன்னதானக் கந்தனல்லோ. அவனிட்ட போயிருந்தால் நிம்மதி தன்பாட்டில வரும்.

**வாத்தியார்:** அதெண்டால் உண்மைதான் ஆனால்...

**விதானையார்:** என்ன வாத்தியார் ஆனால் எண்டு இழுக்கிறியள்.

**வாத்தியார்:** எல்லாம் சரி, செல்வச்சந்நிதியான்ர ஆலயத்தில அன்னதானம் வழங்குகினம். எனினும் அன்னதானத்தைப் பரிமாறுகிறவர்களிட்ட பக்குவம் குறைவா இருக்கிறதைக் கண்டன்.

**சாத்தியார்:** ஒவ்வொரு நாளும் அன்னதானம் வழங்கும்போது ஒரு அலுப்புத்தனம் ஏற்படத்தான் செய்யும்.

**வாத்தியார்:** சாத்திரியார் நீங்கள் சொல்லுறதில நியாயம் இருக்குத்தான். ஆனால் அந்த வெறுப்பு அன்னதானத்தில மட்டும் ஏற்படக் கூடாது. அன்னதானத்தைப் பரிமாறுகிறவர்களும் அன்னதானத்தில சமையல் பணியில ஈடுபடுகிறவர்களும் ஒரே ஆட்களாக இருக்கலாம். ஆனால் சாப்பிடுகிறவர்கள் புதியவர்கள். எனவே அன்னதானத்தை முகமலர்ச்சியோடதான் வழங்க வேணும்.

**பண்டிதர்:** அதெண்டால் உண்மைதான். நானும் அவதானித்தனான். சந்நிதி ஆலயத்தில சாப்பாட்டுக்குப் போடுற வாழை இலை மிகச் சிறிதாக இருக்கும். உண்மையில ஆசனம் பெருத்தும் போசனம் சிறுத்தும் இருக்க வேணும் என்பது தமிழில இருக்கிற முதுமொழி. ஆனால் சந்நிதி ஆலயத்தில ஆசனம் சிறுத்து இருப்பது கவலைதான்.

**மூப்பர்:** என்ன இருந்தாலும் ஒவ்வொரு நாளும் அன்னதானம் வழங்கிறது என்பது சாதாரணமான பணியல்ல.

**வாத்தியார்:** செல்வச்சந்நிதி ஆலயத்தில மட்டுமல்ல சந்நிதியான் ஆச்சிரமத்தில மோகன்சுவாமி மிக நேர்த்தியாக அன்னதானம் வழங்குகிறார். அங்கு ஒரு நிர்வாக ஒழுங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. அது போல சந்நிதி ஆலயத்திலும் அன்னதானம் வழங்குகிறபோது பொறுப்பாக சிலர் நின்று அவதானித்து அன்னதானத்தை வழங்கினால் அது பெரும் புண்ணியம் என்பதை சொல்ல வந்தனானே தவிர, யாரையும் குறை சொல்லவோ அவர்களின்ர மிகச்சிறந்த பணியை குறைத்து மதிப்பிடவோ நான் வரல்ல.

**பண்டிதர்:** செல்வச்சந்நிதியான்ர ஆலயத்தில வழங்கப்படுகின்ற அன்னதானம் சிறப்பாக அமைய வேணும். ஆலய நிர்வாகம் இது தொடர்பில கவனம் செலுத்தும் என நம்புவம். மற்றும்படி அன்னதானம் வழங்குகின்ற தவப்பணியை நாங்கள் பாராட்டுகிறம். மாநாட்டுத் தலைவர் பண்டிதரின் மேற்போந்த கருத்துடன் அந்த விடயம் முடிவுக்கு வந்தது.

அதுசரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில ஐஸ்கிறீம் குடிச்சவராம். கங்காணியார் கார்த்திகேயன் வினாத் தொடுத்தார். கங்காணியார் கேள்வி தொடுக்கும் வரை அமைதியாக இருந்த விதானையார் விசுவலிங்கம், கங்காணியாரின் கேள்வியோடு கதைக்கத் தொடங்கினார்.

**விதானையார்:** யாழ்ப்பாணத்திற்கு வந்து பிரதமர் ரணில் ஐஸ்கிறீம் குடித்தார் எண்டால், யாழ்ப்பாணம் இப்ப நிம்மதியா இருக்குது. யாழ்ப்பாணத்தில எல்லாரும் ஐஸ்கிறீம் குடிக்கினம். ஒரு கவலையும் இல்லை. ஐஸ்கிறீம் குடிக்காத கவலையைத் தவிர... என்று உலக நாடுகளுக்குக் காட்டுறதுதான் நோக்கம்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். ஐஸ்கிறீம் குடித்த பிரதமர் காணாமல் போனவர்களின் உறவுகளை; நிலமீட்புக்காகப் போராடுகிற மக்களைப் போய்ச் சந்தித்திருந்தால் மனம் ஆறியிருக்கும்.

**சாத்திரியார்:** அதுமட்டுமோ ஐஸ்கிறீம் குடித்த கடையில இருந்து ஒரு கூப்பிடு தூரத்தில எங்கட முதல்வர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர வாசஸ்தலம் இருக்கு. இதில வந்த பிரதமர் ஒருக்கா முதலமைச்சரிட்டப் போய் அவரைச் சந்தித்திருந்தால், சனங்களும் பிரதமர் ரணில் பரவாயில்லை எண்டல்லோ சொல்லியிருப்பினம்.

**வாத்தியார்:** உண்மைதான். ஒருக்கா தந்தி ரீவிக்கு பேட்டி கொடுத்த பிரதமர் ரணில், நான் முதலமைச்சர் விக்னேஸ்வரனோட கதைக்கமாட்டன். அவரோட ஒருக்காலும் கதைக்கவும் இல்லை எண்டு சொன்னவரல்லோ. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய விக்னேஸ்வரன் ஐயாவை பிரதமர் ரணில் சந்தித்திருக்கலாம்.

**பண்டிதர்:** அவரை இவர் சந்தித்தால் அவையளுக்குக் கோபமல்லோ வரும்.

**சாத்திரியார்:** பண்டிதர் ஐயா பழந்தமிழில சொல்லாமல் புதுத்தமிழில சொல்லுங்கோ.

**பண்டிதர்:** பிரதமர் ரணில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவைச் சந்தித்தால், சம்பந்தர் ஐயா மற்றும் சுமந்திரன், மாவை ஆகியோருக்கு கோபமல்லோ வரும்.

**கங்காணி:** அதெண்டால் நூறு வீதம் உண்மை. தங்களைத் தவிர வேறு எந்தத் தமிழர்களையும் முதன்மைப்படுத்தக்கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக உறுதியாக இருக்குது.

**மூப்பர்:** ஓமோம் பிரதி சபாநாயகராக அங்கஜன் இராமநாதனை நியமிக்கக்கூடாதெண்டல்லோ கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருக்குது.

**கங்காணி:** தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக வாறது எண்டாலும் கூட்டமைப்பு விடாது.

**பண்டிதர்:** விமல் வீரவன்சவை பிரதி சபாநாயகராக நியமித்தாலும் கூட்டமைப்பு மகிழ்ச்சியடையும். ஆனால் அங்கஜன் இராமநாதனை பிரதி சபாநாயகராக நியமிக்கிறதை கூட்டமைப்பு எப்பாடு பட்டும் தடுக்கும். இதைச் செய்வதற்காக தமிழ்மக்களின்ர காணிகளை படையினர் வைத்திருக்கலாம் எண்டு சொல்லுறதுக்கும் கூட்டமைப்பு தயங்காது.

**வாத்தியார்:** என்ன செய்வம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எங்கட சனங்கள் வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க, அவர்கள் தமிழினத்தை ஏலத்தில் விற்கினம்.

ஏதோ கடவுள்தான் இதற்கொரு வழி செய்ய வேணும். இப்படி வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# பிரதமர் ரணில் மீது ஜனாதிபதி கொண்ட கோபம்

## அவரை நம்பி இவரைக் கைவிட்ட அவலத்தில் கூட்டமைப்பு

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமக்கே தர வேண்டுமென மகிந்த ராஜ பக்ஷ தரப்பினர் சபாநாய கரிடம் விண்ணப்பம் செய் கின்றனர். இந்த விண்ண ப்பம் 56 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெ ழுத்துடன் சபாநாயகரிடம் வழங்கப்படுகிறது.

எனினும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா. சம்பந்தரு க்கே வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி கிடைப்பதற் கான ஜனநாயக உரிமைகள் எதுவும் இல்லை எனும் நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசு எதிர்க்கட்சித் தலைவர் பத வியை இரா. சம்பந்தருக்கு வழங்க முன்வ ருகிறது எனும் போது அது பற்றி தமிழ்மக்கள் மிகத் தீவிரமாக ஆராய்ந்திருக்க வேண்டும்.

உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி போக வேண்டிய இடம் வேறாக இருக்க, அந்தப் பதவி சம்பந்தருக்கு வழங்கப் படுகிறது எனும் போது இதைத்தவிர வேறு எதனை யும் உங்களுக்கு வழங்கக் கூடாது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான அரசு மறை முகமாக வெளிப்படுத்தி யது என்று பொருள் கொள் வதே பொருத்துடையது.

தவிர, இரா.சம்பந்தருக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப் படுகிறது எனும் போது அதனை மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் கடு மையாக எதிர்த்திருக்க வேண்டும். ஆனால் அவர் களும் அதனைச் செய்ய வில்லை. தமிழர்களுக்கு எது கிடைத்தாலும் அத னைக் கடுமையாக எதிர்க் கின்ற சிங்களப் பேரின வாதம் எதிர்க்கட்சித் தலை வர் பதவி கிடைத்த போது அதுபற்றி அலட்டிக் கொள் ளாமல் இருந்தது ஏன்? என்பது பற்றியேனும் நாம் சிந்தித் திருக்க வேண்டும்.

ஆக, எதிர்க்கட்சித் தலை வர் பதவியை இரா.சம்பந்த ருக்கு வழங்கு வதன்மூலம் இலங்கையில் தமிழ் மக்களு க்கு இருக்கக்கூடிய அரசியல் அந்தஸ்து உறுதி செய்யப் படுவதுடன் சர்வதேச போர்க்குற்ற விசாரணை களுக்கு அழுத்தம் கொடுக் காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைதி கொள் வதற்காகவும் இரா. சம்பந்த ருக்கு எதிர்க்கட்சித் தலை வர் பதவியை வழங்க வேண் டும் என்ற கருத்தியலை மகிந்த ராஜ பக்ஷ தரப்பும் ஏற்றுக்கொண்டதன் அடிப் படையிலேயே சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இன்றுவரை நிலை





த்திருக்கிறார்.

ஆக, பல்லாயிரக்கணக் கான தமிழ்மக்களின் உயிரி ழப்பு, விடுதலைப் போராட் டத்தில் நம் தமிழ் இளை ஞர்கள் செய்த தியாகம் என் பவற்றுக்குக் கிடைத்த பரிசு எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது இரா. சம்பந் தரதும் அவரோடு கூடி நிற்பவர்களினதும் நிலைப் பாடாக உள்ளது.

எதுவாயினும் இலங்கை அரசாங்கத்திற்கு அவர்களு டன் இருப்பவர் களைவிட எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான் மிகப் பெரிய நட்பும் உதவி என்பதாகவும் நிலைமை உள்ளது.

இதுதவிர, எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஆசைப் பட்ட கூட்டமைப்பு பிரதமர் ரணிலுக்கு வேண்டிய அத் தனை உதவிகளையும் செய்த துடன் அரசின் விலையேற்ற நடவடிக்கைகளைக் கூட கூட்டமைப்பு எதிர்க்க விரு ம்பவில்லை. சுருங்கக் கூறின் இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் அரசுடன் இணை ந்து கொண்டு அரசின் முழு வேலைகளுக்கும் தனது முழு ஆதரவை வழங்குகின்ற ஒரே எதிர்க்கட்சி யாக தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பே உள்ளது. இதன் காரணமாக தமிழ்மக்களின்



பிரச்சினைகளைச் சரிவர எடுத்துரைக்க கூட்டமைப்பு தயங்குகிறது என்பது தவிர் க்க முடியாத உண்மை.

கூட்டமைப்பின் இத்த கைய போக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக் குக் கடும் கோபத்தைக் கொடுத்துள்ளது.

மத்திய வங்கியின் பிணை முறி குறித்த விவகாரமும் முன்மொழிந்த போது பிரத மர் ரணில் மீதும் அவ ரது பாராளுமன்ற அரசு மீதும் ஜனா திபதி மைத்திரிக்குக் கடும் கோபம் ஏற்பட்டது.

இந்தக் கோபத்திற்கு மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான ஜனா திபதி மைத்திரியின் கோபம் இரண்டு மடங்கு எனக் கூறலாம். அந்தளவிற்குக் கூட்டமைப் பைக் கண்ணில் காட்ட முடியாது என்றள விலேயே ஜனாதிபதி மைத் திரி- கூட்டமைப்பு உறவு இருக்கிறது.

அரசு மீது கொண்டுள்ள கோப த்தை அண்மையில் ஜனாதிபதி மைத்திரி வெளிப் படையாகவே கூறியுள்ளார்.

காலஞ்சென்ற சோபித தேரரின் நினைவுதினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

கூடவே நூறுநாள் வேலைத் திட்டத்தை ஒரு முட்டாள் தனமான செயல் என்றும் அவர் சாடியிருந்தார்.

சோபித தேரரின் நினைவு தினக் கூட்டத்தில் பௌத்த மத பீடங்களும் பௌத்த தேரர் களும் கணிசமாகக் கூடியிரு ந்தபோதே ஜனாதிபதி அரசு மீதான தனது கோபத்தைக் காட்டியிருந்தார்.

எனினும் இது குறித்து எந்தக் கருத்தையும் வெளி யிட வேண்டாமென ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்க ளிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிக இறுக் கமாகக் கூறியுள்ளார் என்ப தும் இங்கு முக்கியமானது.

ஆக, அடுத்துவரும் அரசி யல் காலம் என்பது ஜனா திபதி மைத்திரிக்கும் பிர தமர் ரணில் விக்கிரமசிங்க வுக்குமான பனிப்போராக இருக்குமென நம்பலாம்.

இவ்வாறு ஜனாதிபதியின் ஆத் திரமும் கோபமும் அரசு மீதும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு மீதும் உச்சமடைய புதிய அரசிய லமைப்புச் சீர்திருத்தம் என்பது கிடப்பில் போட ப்படும் என்பது சர்வ நிச்சயமாகி விடும்.

ஒட்டுமொத்தத்தில் ஜனாதி பதியுடனும் பிரதமருடனும் சமமானதும் சமச்சீரானது மான உறவைப் பேண வேண் டிய கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரியைக் கண்டு கொள் ளாமல் பிரதமருடனேயே உறவு பேணிக் கொண்டதால் நடக்கும் என எதிர்பார் க்கப்பட்டதும் நடக்காமல் போகும் என்பதே உண்மை.

விதுரன்

# தப்புக்கணக்கு வெற்றிக்கணக்கானது

வரவே செய்தன.


அணியின் வேகப்பந்துவீச்சு மிகவும் சுமாராக இருக்கிறது. அது சென்னை அணிக்கு மிகப்பெரிய பலவீனம்' என்று தொடர் தொடங்

பதே பெரும்பாக்கியம் என நினைத்தார்கள். ஆனால், சென்னை யிடம் சன்ரைசர்ஸின் பருப்பு வேகவே யில்லை. அதுவும் நான்கு போட்டிகளிலும்...

## சென்னையின் எழுச்சி

எத்தனை முறை மோதினாலும் சன்ரைஸர்ஸை நசுக்கி "நான் ராஜா!' என்று கெத்தாக கொலரைத் தூக்கி நடந்தது சிஎஸ்கே. அதுவும் இறுதிப் போட்டியில் கொஞ்சம்கூடப் பார





மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்று "இந்தா வந்துட்டோம்ல!' என கெத்து கூட்டியிருக்கிறது டோனி அண்ட் கோ!

சூதாட்டம் செய்தவர்கள்', அதிகாரத்தைப் பயன்படுத்தி வென்றவர்கள்' என இரண்டு ஆண்டுகளில் எத்தனையோ பழிப்பேச்சுகள். அப்படிப்பட்ட நிலையில் சி.எஸ்.கேவின் இந்த வெற்றிக் கணக்கு அவ்வளவு எளிதாக இல்லை.

ஆப்கானிஸ்தான், நேபாளம் நாடுகளைச் சேர்ந்த வீரர்கள், இந்தியாவின் அண்டர்-19 வீரர்கள் என மற்ற அணிகள் போட்டி போட்டுக்கொண்டு ஏலத்தில் இளம் வீரர்களாக வாங்கிக் குவித்தனர். சென்னை அணியோ ஷேன் வாட்சன், இம்ரான் தாஹிர், ஹர்பஜன் சிங் என 30+ வீரர்களாக வாங்கிக் கொண்டிருந்தது. "அங்கிள்களின் அணி' என ஸ்லீப்பர் செல்கள் மீம்களாகப் போட, சுப்பர் கிங்ஸ் ரசிகர்களுமே கொஞ்சம் பயந்துதான் போயிருந்தார்கள். டேர் டெவில்ஸ், கிங்ஸ் லெவன், சன்ரைஸர்ஸ் போன்ற அணிகள் எல்லாம் முன்பைவிட பலமான டீமை உருவாக்கியதால் சென்னை மீதான நம்பிக்கை, தொடர் ஆரம்பிக்கும் முன்பே சரிந்திருந்தது.

சந்தேகம் எல்லாம் தொடர் தொடங்கி ஒரு நாள்கூட நீடிக்கவில்லை. மும்பை இந்தியன்ஸை அதன் சொந்த மண்ணில் போட்டுத்தள்ளி, வெற்றிக் கணக்கைத் தொடங்கியது சி. எஸ்.கே. அதற்குப் பிறகு 'அங்கிள்களின் அணி'யை யாராலும் தடுத்து நிறுத்தமுடியவில்லை. இளம் அணிகளை எல்லாம் ஓடவிட்டு அடித்தனர்.

போராட்டங்களால் சென்னையிலிருந்து போட்டிகள் புனேவுக்கு மாறின. பல முக்கிய வீரர்கள் எல்லாம் காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகினர். அடுத்தடுத்து சவால்கள்

கும் முன் பலரும் விமர்சித்திருந்தார்கள். அதற்கு ஏற்ப மார்க்வுட், டேவிட் வில்லி போன்றோரும் சொதப்ப, இரண்டு முறை "பர்ப்பிள் கப்' வென்றவரான பிராவோ ரொம்பவே தடுமாறினார்.

டெத் ஓவர்களில் அதிகமாக ரன் விட்டுக்கொடுத்தார்கள். அதற்கும் விரைவில் பதில் கண்டுபிடித்தார் கப்டன் கூல். தீபக் சஹாரைத் தன் ஆஸ்தான பவர்பிளே பௌலர் ஆக்கினார். துணைக்கண்ட ஆடுகளங்களில் ஆடிப் பழக்கமில்லாத இங்கிடிக்கு வாய்ப்புகள் வழங்க, பிராவோவின் இடத்தை நிரப்பினார் அந்த இளம் தென்னாபிரிக்க வீரர். குவாலிஃபயர், ஃபைனல் என இரண்டு போட்டிகளிலும் சன்ரைஸர்ஸ் அணியைப் பதம்பார்த்தது இந்த சவுத் ஆபிரிக்கன் ஸ்னைப்பர்!

இந்த தொடரில் டோனியின் மீள்வருகைதான் மிகப்பெரிய ஆச்சர்யம். பழைய டோனியாக எதிரணிப் பந்துவீச்சை தன் ஹெலிகாப்டர் ஷொட்களால் மிரளவைத்தது ரசிகர்களுக்கு செம விருந்து!

தொடர் முழுக்க மற்ற அணிகளெல்லாம் சன்ரைஸர்ஸ் அணியின் பந்துவீச்சைக் கண்டு அலறின. லீக் சுற்றில் ரஷீத், கௌல், புவி, பசில் தம்பி ஆகியோர் பட்டையைக் கிளப்ப, அவர்களுக்கு எதிராக 150 ரன் எடுப்

பட்சம் இல்லாமல் சன்ரைஸர்ஸ் பந்துவீச்சைப் பந்தாடினார் 35 வயது சீனியர் சிட்டிசன் வாட்சன்! சொல்லப்போனால், இந்த ஐ.பி. எல் தொடரில் மற்ற ஏழு அணிகளையும் வீழ்த்திய ஒரே அணி.



சுப்பர் கிங்ஸ் மட்டும்தான்.

அவர்களை ஏமாற்றுக்காரர்கள் என்ற போது அவர்கள் அமைதியாக இருந்தனர். அவர்களை வயதானவர்கள் என்று கேலி செய்தபோது மௌனம் காத்தனர். எல்லா விமர்சனங்களுக்கும் அவர்களுடைய பதில் எளிதாக இருந்தது. அவர்கள் கோப்பையை வென்றானர்!






# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532




## இலங்கை கிரிக்கெட் தரவரிசை பற்றி

**குமார் — சுழிபுரம்**

**இனவாதம் பேசி மக்களை படுகுழியில் தள்ளுபவர்களை தமிழ் மக்கள் இனம் கண்டுகொள்வரா?**

அங்கு தலையையும் இங்கு வாலையும் காட்டும் கயவர்களை இனம்கண்டு கொள்ளாத தமிழ்மக்கள் இனவாதம் பேசுபவர்களையா இனங்கண்டுவிடப் போகிறார்கள்.

**தமிழ் — மந்துவில்**

**தலைவிதி என்கிறார்களே அப்படியென்றால் என்ன?**

கோழிக்கடைக்கு இறைச்சி வாங்கப்போன அனுபவம் உண்டா? ஒரு கூட்டில் பத்துக் கோழிகள் நிற்கும். கடைக்காரர் கூண்டில் கைவிட்டு ஒரு கோழியைப் பிடிக்க முயற்சிப்பார். 10 கோழிகளும் பறந்தடித்து ஓடும். இருந்தாலும் பத்தில் ஒன்று அவரின் கையில் பிடிபடும் அது எமது வீட்டுச் சட்டியில் சமைபடும். விதிக்கு இதைவிட வேறு உதாரணம் காட்ட முடியாது.

**கரன் — சுழிபுரம்**

**நல்லாட்சியின் நிலை எப்படி இருக்கிறது?**

அரசைக் கலைப்பதற்கு நினைத்தேன். ஆனாலும் பிரதமரின் 100 நாள் வேலைத்திட்டத்திற்காக பொறுமை காத்தேன். அந்த 100 நாள் வேலைத்திட்டத்தில் எந்தப் பயனும் இல்லை என்கிறார் ஜனாதிபதி மைத்திரி.

ஜனாதிபதியின் கூற்றுக்கு யாரும் எதிர்க்கருத்துக் கூறக்கூடாது எனக் கட்சி உறுப்பினர்களுக்கு பூட்டுப் போட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்த இரண்டு செய்திகளையும் வாசித்துவிட்டு நீங்களே முடிவெடுங்கள் நல்லாட்சி எப்படி இருக்கிறது என.

**சயன் — யாழ்ப்பாணம்**

**வியாசரே நீங்கள் வாயை மூடிக்கொண்டிருக்க இரண்டு கோடி தருகிறேன் இருப்பீர்களா?**

இந்தக் கதையெல்லாம் இங்கு விடாதே அப்பனே. அந்த இரண்டு கோடியை வாங்கியவர்களையும் வாய் மூடிக்கொண்டிருந்தவர்களையும் போய்க் கேளும்.

என் வாய் மூட இரண்டு கோடி என்றால் என் வாய் மூடும் உடைவாள் பேசும்.

எங்களுடன் வயலுக்கு வந்தாயா நாற்று நட்டாயா அங்கே கொஞ்சி விளையாடும் என் குலப் பெண்களுக்கு மஞ்சளரைத்துப் பணிபுரிந்தாயா மாமனா மச்சானா... ச்சா மானம் கெட்டவனே.

## வியாசரே நீங்கள் வாயை மூடிக் கொண்டிருக்க இரண்டு கோடி...

**தீனா — கரவெட்டி**

**மரண பயம் எப்படி இருக்கும்?**

மனைவி முன் இருக்கும் போது றோங் கோல் வரும்போதும் மனைவியின் கையில் போன் இருக்கும் போது மிஸ் கோல் வரும் போதும் வருமே பார் ஒரு பயம். அது தான்டா மரண பயம். அதை உணர்ந்து கொண்டவனுக்குப் புரியும்.




**சாரங்கன் — யாழ்ப்பாணம்**

**மனிதனுக்கு கௌரவம் எப்படிப்பட்டது?**

ஒரு தந்தை தன் மகள் தனக்குப் பிடிக்காத ஒருவனை காதலித்துத் திருமணம் செய்து விட்டாள் என்பதற்காக தான் இறக்கும் வரை மகளின் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்காததும் தான் அவளுடன் பேசாமல் விட்டாலும் தன் மகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அத்தனையும் நிறைவேற்றி ஒரு தந்தையாய் நிமிர்ந்து நிற்பதும் கௌரவம். இப்போது பலருக்கு அது பாம்புச் செட்டை போல தேவையில்லை என்றால் கழற்றி எறிந்து விடலாம்.

**தூன் — இணுவில்**

**அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறதே?**

அத்தியாவசியம் என்கின்ற சொல்லையே புரிந்துகொள்ளாமல் மக்கள் தலையில் சுமையை ஏற்றிவிட்டு நாட்டை முன்னேற்றுகிறோம் என்று சொல்வதில் எந்தப் பயனும் வரப் போவதில்லை.

தெரியாத தேவதையை விட தெரிந்த பேய் மேல் என்று மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் சொன்னதை மனதில் நினைப்போமாக.

## அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறதே?

**செல்வம் — மயிலங்காடு**

**எமது அடிமை வாழ்வு தொடருமா?**

தமிழருக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டுவிட இனி தமிழரை காக்க யாரும் இல்லை என்ற எண்ணம் மேலோங்கியது. அந்த நேரத்தில் தான் தாம் இருக்கிறோம் என்று எழுந்து வந்தது தமிழ் அரசியல் தலைமை.

நல்லாட்சி என்கின்ற மாயாஜாலத்துக்குள் புகுந்து தமிழ் மக்களுக்கு வித்தை காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

காட்டட்டும். பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடிய கதையாய் துள்ளுங்கள் ஒருநாள் சாயம் வெளுக்கும். அப்போது நரியாய் முழிப்பீர் தமிழர் முன்நின்று.

**சிவா — மாதகல்**

**இலங்கை கிரிக்கெட் தரவரிசை பற்றி?**

இலங்கை கிரிக்கெட்டுக்குள் அரசியல் புகுந்ததால் அதிலிருந்து அணியை மீள முடியவில்லை என அண்மையில் மஹேல ஜெயவர்த்தன கடுமையாக சாடியிருந்தார். விளையாட்டுக்குள் அரசியல் புகுவதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒருவேளை அப்படிப் புகுந்தால் அது அணிக்கு ஆரோக்கியமானதுமல்ல.

சங்கக்கார, மஹேல, முத்தையா முரளிதரன் எனப் பல ஜாம்பவான்கள் விளையாடிய ஒரு அணி வீழ்ச்சியடைவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே எமது கருத்து.

**தயாளன் — மயிலங்காடு**

**அரசியல் சீர்திருத்தம் பற்றி?**

அதை முதலில் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். 13 ஆவது திருத்தம், 20 ஆவது திருத்தம், 13 இற்கு அப்பால் செய்த திருத்தம் இப்படிச் சொல்கிறார்கள். முதலில் 13 இல், 20 இல் என்னென்ன அம்சங்கள் அடங்கி இருக்கிறது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். தெரியாத ஒன்றை மக்கள் எப்படி ஏற்றுக்கொள்வர்.

**கனிஸ்ரா — தெல்லிப்பழை**

**வடக்கின் அடுத்த முதல்வர் யார்?**

ஆளாளுக்கு அவர் இவர் என்று கத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மக்கள் மனதில் நிறைந்த ஒரே முதல்வர் அது விக்னேஸ்வரன் ஐயா மட்டுமே. அடுத்த முறையும் அவர்தான் முதல்வராக வர வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்

# கவிதைக் கலசம்




## முள்ளிவாய்க்கால்

முள்ளிவாய்க்கால்
மண்ணில் புதைந்த
எம் மக்களை
பேரினவாத அரசு
பார்த்ததுமில்லை
ஐ.நா. அமைப்பு
கேட்டதுமில்லை
அழுது புலம்புகிறார்
எம் இனமக்கள்

இலங்கை நாட்டில்
இரு தேசம் உண்டு
முள்ளிவாய்க்கால் அழிவுதான்
அதன் வரலாறு
கொத்துக்கொத்தாய்
குண்டுவீசி
குவித்துப் போட்ட
பிணக்குவியல்கள்

தமிழனை அழித்தால்
தனிநாடு பௌத்தம்
தம்பட்டம் அடிக்கும்
பேரினவாதம்
தன்மானம் கொண்டவன்
தமிழன் என்பது
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்
நினைவுபடுத்தும்

ஆழப்புதைந்த
விடுதலை உணர்வு
அடியில் சிதைந்த
ஈழக்கனவு
முள்ளிவாய்க்கால் அழிவு
தீர்வை தருமென்று
ஈழத்தமிழன்
அழுது புலம்புகிறான்

முரண்டுபிடிக்கும் சிங்கள அரசு
மிரட்ட தவறும் தமிழர் தரப்பு
தமிழனுக்கு என்றொரு
தீர்வு இல்லை
அழிவுதான் மிச்சம்
முள்ளிவாய்க்கால்
நினைவுதான் எச்சம்

அராலியூர் ப.தர்மகுமாரன்

## காத்திருப்பு

என்னவனே!
சோகமான என் வாழ்க்கைக்கு
சொர்க்கமாக நீ வந்தாய்
சோதனையாக வாழ்ந்த போது
தென்றலாய் வாசம் வீசினாய்
தாயை இழந்து தவித்த போது
அன்னையாக அரவணைத்தாய்
முள்ளிவாய்க்கால் போரிலே
என் ஆருயிர் கணவனை இழந்து
ஏங்கிக் காத்திருக்கின்றேன்
என்னவனின் வருகைக்காய்
கல்லறையின் அருகில்

திருமதி இ.றம்மி
பாரதிபுரம், திருநெல்வேலி

## மனிதனும்

மனிதனும் புனிதனாகலாம்
மனதுக்குள் மாயை நீங்கினால்
உயரங்கள் துயரம் இல்லையே
உனக்குள்ளே தடைகள் நீங்கினால்
வாழ்க்கையை வாழ விரும்பினால்
வாழ்வதில் அர்த்தம் வேண்டுமே
மனிதனும் புனிதனாகலாம்
மனதுக்குள்ளே மாயை நீங்கினால்
பூமியும் சுழல்வதுண்மையே
புயல்மழை பெய்வதுண்மையே
பொய்களும் வாழ்வதுண்மையே
மெய்களும் சாவதுண்மையே
உண்மைகள் வாழ விரும்பினால்
உறக்கங்கள் ஒதுங்க வேண்டுமே
உனக்குள்ளே உண்மை உண்டெனில்
உண்மையும் வெறுமை இல்லையே
மனிதனும் புனிதனாகலாம்
மனதுக்குள் மாயை நீங்கினால்

இளவரசு, ஒட்டுசுட்டான்

## பண்புள்ள மனிதர் நாம்

ஞாயிறோன் கிழக்கில் கிளர்ந்தெழ
நிதமும் பற்பல கனவுகளுடன்
நல்லெண்ணங்கள் மனதினில் குடிகொள்ள
துயில் எழ அனைவரும் வாரீர் தோழர்களே!
பத்துத் திங்கள் தாயவள் வயிற்றினுள் பத்திரமாய்
பதினெண் வருடங்கள் பள்ளியறையில் சித்திரமாய்
பயணம் செய்வோம் பக்குவமாய் இங்கு
புதிதாய் படைப்புக்கள் படைத்திடுவோம் சரித்திரமாய்!
பாலாடை போல் வெண்மேகம்
பட்டுப்பூச்சியை போல் மென் குணமும்
பள்ளி அன்னையின் கருவறைக்குள்
பக்குவமாய் வளரும் பண்புள்ள மாணவர்கள் நாமே!
உடல் ஊனம் கண்ட போதிலும்
மனவுலகில் உயர்ந்திடுவோம் மாண்புமிகு மாணவராய்
ஊழ்வினை உலகில் சூழ்ச்சி காண அஞ்சோம்
மன திடம் கொண்டே கைகோர்த்து உயர்வோம்!

ஜெ.ஜஸ்னியா, கிளி/ இராமநாதபுரம் ம.வி.

## ஆரா அழுதே!

வேகம் கொண்ட எம் இனத்தின்
வீழ்ச்சியதன் காரணம்தான் என்ன?
சிந்தித்ததுண்டா...

விளக்கொளியில் படித்தபோது
வியப்பில் இருந்த கல்வி
மின்சாரம் வந்தது - எல்லாம்
கைமீறிப் போனது

பட்டை, பொட்டு வைத்து
பள்ளி வந்த பிள்ளை
கட்டைக் கை சட்டை போட்டு
சந்தியில் நிற்கிறது

மாவாப் பாக்கு வந்து
எம் மாணவரை
மாவாய்ப் பிசைந்தெடுக்க
ஆவா! ஆவா! என்று அதன்
தாதாவாய் தறுதலையாய்
திரியலானான்

பூவாய் வளர்த்த மகன்
வாள்வெட்டில் தொடர்பு எனும்
செய்தி காதில்விழ
நாராய் நசுங்கினர் பெற்றோர்

ஆரா அமுதே நீ
ஆளாகி வளர்ந்து வந்து
மக்கள் சேவை செய்வாய் எனும்
கற்பனைக் கோட்டைக்கு
கல்லால் எறிந்தாயோ!
பொல்லா வினையைத் தன்
பெருவாழ்வில் விட்டுவிட்டு
சொல்லாக் கிடக்கிறான்
செல்லாத செல்லுக்குள்ளே!

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 401



## வீறு கொண்டெழு

வீதியிலே விரட்டி விரட்டி
வீணர்கள் அடித்தாலும்
அடியும் உதையும்
எமக்கு புதிதல்ல
அழுது துடிக்கும்
இனம் நாமல்ல
பட்ட அடியும்
சுட்ட சொல்லும்
நாம் பெற்ற பாடங்கள்
வலியின் துயரில்
வாடித் துடித்தாலும்
என் உயிரோடு கலந்த
வார்த்தைகள் ரகசியம்
வீரம் அற்று
விவேகம் இழந்தோமா
வீறு கொண்டெழுந்து
வீர சுதந்திரம் வேண்டிடவா

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி.

## துயில் எழுவாய்

நியாயங்களின்
நெருடலில்
உதயமான
உரிமைகள் கேட்டதனால்
அடக்கு முறையின்
அணி வகுப்பில்
போதனை புரியா
தேசம் தந்த
ரணங்களிலிருந்து
வெளிக்கிளம்பிய
உண்மைகள்
உயிர் பெற்றபோதும்
கண்களை மூடி
பாசாங்கு செய்கிறதே
பாவியர் உலகம்
நீதியின் தேவதையே
நீயும் கூடவா
நித்திரை.

தேன்நிலா
நல்லூர்

## தமிழனின் முனகல்

தூத்துக்குடி பிரதேசத்திலே
காவல்துறையின் கொடூரத்தால்
துப்பாக்கித் தோட்டாக்கள்
உடலில் துளைக்க
வருந்திடும் தமிழனே!
வாதிட்டு சொல் இங்கே
ஆயிரம் பேர்
சேர்ந்து அடக்கினாலும்
அசையாது மீண்டும் எழுவோம்
எம் இனம் அழியப் பிறந்ததல்ல
எக்காலமும் ஆளப்பிறந்த மகுடம்

பீ.மேரிசிந்துஜா
மிருசுவில்

## துன்பியல்

பட்டப் பகலில்
நட்ட நடு வீதியில்
சுட்டெரிக்கும்
சூரிய வெளிச்சத்தில்
பலரும் பார்த்திருக்க
படப்பிடிப்பில்
பாம்பையடிப்பதுபோல்
படைத்தரப்பு
மக்களின் வரிப்பணமும்
பக்கபல ஆயுதமாக
திறந்த வெளியிங்கு
நீதிமன்றமானது
தூத்துக்குடி துயரமும்
இங்கு ஞாபகத்தில் வரும்

க.நாகராசா, நுணாவில்

## போராடும் தமிழ்!

தமிழா!
நான் எனக்கு மட்டுமல்ல
உனக்காகவும்
தானடா போராடுகிறேன்
உனக்கது புரியவில்லையா?
அடிப்பவனும் தமிழன்
அடிவாங்குபவனும் தமிழன்
தமிழினம் மரித்துப் போய்விட்டதா?
அடிகூட வலிக்கவில்லை
அடிப்பவன்கூட அநீதியை நம்புகிறானே?
அதன் வலிதான் கொடுமை
உயிர்கள் இங்கு மாயும் போது
உணர்வுகள்கூடக் கசக்கின்றது

அ.நிருஷினி
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

## தட்டிக் கேட்க யார் வருவார்?

வீர இளைஞரே!
அநீதிக்கு எதிராக- உன்னோடு
சேர்ந்து போராடியவர்கள் எங்கே?
வீரனே! வேண்டாம் விபரீதம்
நாமும் மக்களுடன்
மக்களாய் வாழ்ந்திட்டு
போவோம் இல்லையேல்
காரணம் இல்லாது
அடிவேண்டத்தான் வேண்டும்


அ.அகிலன்
கரவெட்டி

## ஒத்தைக்கு ஒத்தை

செத்தவனை அடித்தவனே!
செதிலுடைத்து மீனை
நீரிலே விட்டவனே!
செந்தமிழன் என்றவுடன்
இளகிய இரும்பென்று
ஓங்கி அடித்தவனே!
உம் வீரம் வெளிக்காட்ட
எம் இனமா பகடைக்காய்
நாடற்றவனை நாயிலும்
கேவலமாய்ப் பார்த்தவனே!
நாகரிகம் தெரிந்தால்
தனித்தனியே வந்திருக்கலாம்

மாவையூர் கவி
வடலியடைப்பு

# மௌனத்தின் தேடல் -402



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.06.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

சிறுகதை



# தாய் உள்ளம்

மார்கழித் திங்கள் மழை மேகம் கூடி நிற்க மெல்லிய காற்று மேனியை வருடிச் சென்று கொண் டிருந்தது. பேருந்திற்காக காத்திருந் தான் கண்ணன். மாதகல் -யாழ்ப் பாண வழி தனியார் பேருந்து ஒன்று மெல்ல மெல்ல யாழ்ப்பா ணம் நோக்கி நகர்ந்து கொண்டி ருந்தது. "இவங்கள் இப்படித்தான் சீரான வேகத்தில் பயணிக்க மாட் டாங்கள். இப்ப மெதுவாக ஓட்டு பிறகு நேரக் கட்டுப் பாட்டுக்காக விரைவாக ஓடி விபத்துக்களை ஏற்படுத்துவாங்கள்" என்று எண் ணியவாறு சித் தன்கேணிச் சந்தி யில் பேருந்தில் ஏறினான்... பேரு ந்தில் பெரிசாக சனக்கூட்டம் இல்லை. ஒரு எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு மூதாட்டியும் வேறு ஒரு சில ரும் தான் இருந்தனர். பேருந்தில் ஏறிய கண்ணனை நன்கு உற்றுப் பார்த்த அந்த மூதாட்டி "நீ கந்தன் தானே நீ கந்தனேதான்" எனக் கண்ணனை வினவினாள். கண் ணனுக்கு ஒரே குழப்பமாக இரு ந்தது "இல்லை அம்மா நான் கந் தன் அல்ல கண்ணன்" நீங்கள்வேறு யாரோ என் று எண் ணி என் னு டன் கதைக்கிறீங்கள் என்றான்.

அதுற்கு உடனே அந்த மூதாட்டி "இல்லை பெற் ற எனக் குத் தெரியாத உன்னை நீகந்தன் தான் என்று" அழுதவாறு தனது கதையைத் தொடர்ந்தாள்... 1974 ஆம் ஆண்டு எனக்குத் திருமணமானது. திரும ணம் ஆகிப் பல வருடங்களாகக் குழந்தைப் பேறு இல்லாமல் பெரும் அவதியுற்றோம். மலடி என்று பட்டம் சூட்டப்பட்டு சுப சந்தியிலி ருந்து ஒதுக்கி வைக்கப்பட்டோம். யார் நல்லமனதைப் பார்ப்பது? எல்லோரும் பணம், பதவி பிள்ளைப்பேறு போன்றவற் றையே பெரிதாக மதிக்கிறார்கள். நாங்களும் செய்யாத வைத்தியம் இல்லை. நாங்கள் ஊரிலேயே பெரிய பணக்காரராக இருந்ததால் இந்தியா வரை சென்று சிகிச்சை செய்தோம். பயனளிக்கவில்லை. கடைசியாக எனது நண்பி சொன்னாள் செல்வச்சந்நிதி வேல வனுக்கு விரதம் இரு உனக்குக் குழந்தைப் பேறு கிடைக்கும் என்று. முருகன் கருணை யால் கருவுற்று தவமாய் தவம் கிடந்து பெற்றெடுத்த செல்வம் தான் நீ ! எனக் கூறி விட்டு மீண்டும் ஓவென அழுதாள் மூதாட்டி.

அம்மா ...அம்மா.. அழாதையு ங்கோ தொடர்ந்து சொல்லுங்கோ என்றான் கண்ணன். நீ பிறந்த பிறகுதான் சாந்தி, சுதா, முரளி எல்லோரும் எமக்குப் பிறந்தார்கள். உனக்கு ஞாபகம் இருக்கிறதா? "இல்லை அம்மா? இல்லை" நீங்கள் சொல்லு ங்கோ...ஞாபகம் வருகிறதா? என்று பார்ப்பம் என்றான் கண்ணன். மூதாட்டி தொடர்ந்தார். நீ எண்பதில் பிறந்தாய் 1995 வரை எமது வாழ்க்கை நல்ல மகிழ்ச்சி யாகப் போய்க் கொண்டிருந்தது. அப்பாவுக்கும் வேலையில் பதவியு யர்வுகளும் கிடைத்தது. கைநிறை யச் சம்பளம் மனம் நிறைந்த வாழ்வு என வாழ்ந்து கொண்டிருந்தோம். அந்தநேரம் பார்த்து யுத்த அரக்கன் தன் கோரத் தாண்ட வத்தை ஆட நாங்கள் யாழ்ப்பாணத்திலி ருந்து வன்னி நிலப்பரப்புக்கு இடம் பெயர்ந் தோம். அங்கு பல இன்னல்களைத் சந்தித்தோம். உன் தந்தையை ஷெல் கொண்டு போக என் வாழ்க்கையில் முதலிடி விழுந்தது. அன்றுதான் நான் உன்னைத் தொலைத்தேன். புரு ஷனை இழந்தது ஒருபுறம், பிள் ளையைப் பிரிந்தது ஒருபுறம் என என் வாழ்க்கை முற்றுமுழுதாகத் திசைமாறியது. அதன் பின் தேடாத இடம் இல்லை, போகாத கோவில் இல்லை. என்றோ ஒருநாள் உன் னைச் சந்திப்பேன் என்ற நம்பிக்கையில் என் உயிரைப் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். போராட்டம் உச்சமாக நடை பெற்றதால் நீ போராட்டத்தில் ஒரு போரா ளியாக மாறி விட்டாய் என்று சிலரும் நீயும் ஷெல்லுக்கு இரையாகியிருப் பாய் என்று சிலரும் ஆமி முன்னேறியபோது ஆமியிடம் பிடிபட் டிருப்பாய் என்று சிலரும் கூறினர். எது எப்படி இருப்பினும் உன்னைச் சந்திப்பேன் என்ற நம்பிக்கை மட்டும் இரு ந்தது. 1997 இல் தொலைத்த உன்னை 2017 இல் காணக் கூடியதாக இருந்ததே பெரும் பாக்கியம் தான். என்னைப் போல் எத்தனை தாய்மார் யுத்தத்தால் பிள்ளைகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றனர். காணாமல் போனோர் ஒருபக்கம், காவு கொண் டோர் இன்னொரு பக்கமுமாக எவ்வளவு மனச் சுமைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின் றனர். உன்னை எதிர்பார்த்து உன் சகோ தரர்கள் நீண்டகாலமாக இருக்கி றார்கள். மூத்தவளுக்கு கல்யாண மாகி இரண்டு குழந்தைகள். மற்ற வளுக்கு திருமணமாகி ஒரு குழ ந்தை. கடந்தவாரம் தான் முரளி க்குத் திருமணமானது. என்னதான் கல் யாணங்கள் நடந்து பேரன் பேத்திகள் பெற்றாலும் என் பிள்ளை இல்லை என்ற மனக்குறை நெஞ் சில் வேல் பாய்ச்சுக் கொண்டிருக் கிறது எனத்தன் சுமைகளை என்னில் இறக்கி வைக்க சுமை தாங்கியானேன் கந்தன்.

கண்ணனின் மனதிலும் ஒரு சலனம் தொட்டது தான் உண்மை யில் கந்தன் தானே என்று. அந்த நேரம் பார்த்து பேருந்து நடத்து நரின் குரல் கண்ணனை நிஜ உலகிற்கு கொண்டு வந்தது "மருதடி, மருதடிப் பிள் ளையாரில் இறங்கிற ஆட்கள் இறங்குங்கள்". மீண்டும் மூதாட்டியின் புலம்பல் அப்பனே விநாயகனே வினைகள் தீர்ப்பவனே என் பிள்ளையை என்னிடம் ஒப்படையப்பா அவன் உயிருடன் இருந்தால் போதும் அவன் நலமாக வாழ வேண்டும் இந்தப்பையன் என் கந்தன் போலவே இருக்கிறான். என்னை ஏன் இவன் அடையாளம் காண வில்லை. கடவுளே என்று அழுதாள் வேதனைகளின் மத்தியில் வாழும் இந்த மூதாட்டி உண்மை யில் என் தாயோ?, நான் யார்? உண்மையில் கந்தனா? இல்லா விட்டால் கண்ணனா? ஒரே குழப் பத்தில் இருந்தான் கண்ணன். எதற்கும் என் மனைவியிடம் கேட் டுப் பார்ப்போம் என எண்ணியவன் தொலை பேசியை எடுத்து மனைவி தாட்சாயிணி க்கு அழைப்பினை தொடுத்தான். அவளுக்கும் எதுவும் தெரியாது என்று கூறவே ஒரே குழப்பத்தில் இருந்தான் கண்ணன்.

இவ்வாறு பயணித்துக் கொண் டிருந்த பேருந்து ஆறுகால்மடத்தை அண்மித்தது. அம்மா நான் ஓட்டு மடச் சந்தியில் இறங்கப் போகின் றேன் எனக்கும் அம்மா அப்பா இல்லை. நான் கருணை இல்லத்தில் தான் வளர்ந்தவன். என்னை நீங்கள் உங்கள் பிள்ளையாய் ஏற்கலாம். எனக்கும் அம்மா வாக நீங்கள் இருப்பீங்கள். பாசத்திற்காக ஏங்கும் எங்களைப் போன்றவர்களுக்கு இது நல்ல ஒரு சந்தர்ப்பமாக அமையும். அம்மா இந்தாங்கோ என்னுடைய தொலைபேசி இலக்கம். நான் சங்கானையில் உள்ள வங்கி ஒன்றில் முகாமையாளராகப் பணிபுரிகின் றேன். இன்று சித்தன் கேணிப் பிள்ளை யாரைத் தரிசித்து விட்டு வீட்டபோகலாம் என்று வந் தன் நீங்கள் எனக்குக் கிடைத்தீர கள். எனக்குத் திருமணமாகி மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்.


மனைவியும் ஆசிரியராகச் சேவை புரிகின்றார். கார் பணம் என்று இருந்தாலும் அம்மா அப்பா குழந்தைகளுக்கு அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா உறவுகள் என்று எவரும் இல்லை. எனவே நீங்கள் எங்களுக்கு ஒரு சொந்த உறவாக எங்க ளுடன் பழகலாம் என்றதும் மூதாட்டி எது எப்படியிருப் பினும் "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" எனக்கு என் மகன் கந்தன் தான் வேண்டும். அவனுக்காக என் உயி ரையும் கொடுப்பேன்.

அவன் எங்கிருந்தாலும் என் உடல் கட்டை யில் வேகமுன் அவன் வரவேண்டும் எனக்குக் கொள்ளி அவன் கையால் போட்டால் தான் இந்த ஆத்மா சாந்தியடையும். நீ என் மகன் மாதிரி அச்சு உரித்தால் போல் இருக்கிறாய். உன் னையும் என் மகனாக ஏற்கின்றேன் இருந் தாலும் என் கந்தனுக்காக காத்தி ருப்பேன் என்றாள். பேருந்து ஓட்டு மடச் சந்தியை அடைந்ததும் மூதாட் டியிடம் இருந்து விடைபெற்றான் கண்ணன். இறங்கியவன் பேருந் தையே உற்று நோக்கினான். அவன் மனம் முழுக்க முழுக்க சுமையால் நிறைந்திருந்தது. அவனுக்குப் புரியவில்லை. அந்தத் தாயுள்ளத்திற்குப் புரிந்த உண்மை.

தென்மராட்சி யிலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த போது பெற்றோரைப் பிரிந்த இவன் ஒரு போராளியா னான். வன்னி நிலப்பரப்பில் இறு திக்கட்ட யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது முள்ளி வாய் க்காலில் உயிரைக் கையில் பிடித்த படி ஷெல் மழைக்குள்ளும் பல்கு ழல் பீரங்கிகளுக்கும் மத்தியில் எங்கள் உறவு கள் எல்லாம் செத்துச் செத்து மடிந்து கொண் டிருக்கும் போது மக்களைப் பாது காக் கும் பணியில் இருந்த இவனுக்கு தூரத்திலிருந்து வந்த சன்னம் இவன் மண்டையோட்டுப் பகுதியில் துளை த்துச் சென்றதால் பழையவற்றை எல்லாம் மறந்து கந்தன் தான் இன்று கண்ணனாக வாழ்கின் றான் என்பது கூடத் தெரியாது வாழ்ந்து கொண்டிருக்கின்றான்...



அரியாலையூர், யசிதரன்



# மனிதன் எங்கே வாழ்வது?

உலகம் முழுவதும் இந்த நிமிடத்தில் 41 பேர் தங்களது இருப்பிடத்தைத்தொலைத்து விட்டு மறுவாழ்வு தேடி இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டுரையை நீங்கள் வாசித்து முடிப்பதற்குள் அந்த எண்ணிக்கை நூற்றைத் தாண்டி விடும். இரண்டு நாடுகளுக்கிடையில் நடக்கும் போரினாலோ, ஒரே நாட்டுக்குள் நடக்கும் இனக்கலவரத்தாலோ இவர்கள் அகதிகள் ஆகவில்லை. இவர்கள் சூழலியல் அகதிகள். இதில் உலகிலிருக்கும் எல்லோருக்கும் பங்கிருக்கிறது.

வெள்ளம், புயல், அனல் காற்று, பூமி வறண்டு ஏற்படும் பஞ்சம் ஆகிய பல்வேறு காரணிகளால் உலகம் முழுவதிலும் நிமிடத்திற்கு 41 பேர் என்ற விகிதத்தில் தனது இருப்பிடத்தைத் தொலைத்து இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் விரும்பிச் செல்வதில்லை. தள்ளப்படுகிறார்கள். மோசமான சூழலியல் விளைவுகளால் தங்களது வாழிடத்தைத் தொலைத்து, இருக்க இடம்தேடி வாழப் பிழைப்பு தேடி, தாங்கள் வாழ்ந்த வீடுகளை விட்டு வேறு இடங்களுக்குப் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் நாட்டிற்குள்ளேயோ, அண்டை நாடுகளையோ நாடிச்செல்லும் அவர்கள்தாம் சூழலியல் அகதிகள்.

"சூழலியல் அகதிகள்" என்ற சொல் கடந்த பத்து ஆண்டுகளாகப் பல சுற்றுச் சூழல் ஆர்வலர்களால் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அது சர்வதேச சட்டங்களால் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. அதை ஒரு மிகைப்படுத்தப்பட்ட சொல்லாகவே கருதுகிறார்கள். இடம் பெயர்பவர்களுக்கான சர்வதேச அமைப்பு ஒன்று அந்தக் கூற்றுக்கான விளக்கத்தை வரையறுத்துள்ளது.

"சுற்றுச்சூழலிலும் பருவநிலையிலும் ஏற்படும் திடீர் மாற்றங்களாலும், படிப்படியான மாற்றங்களாலும் தனது வாழ்வுக்கும் வாழ்வாதாரத்துக்கும் ஏற்படும் பாதிப்புகளால், தனிநபராகவோ, குழுவாகவோ தாங்கள் வாழும் பகுதிகளை விட்டுத் தங்கள் நாட்டிற்குள்ளேயே வேறு பகுதிகளுக்கோ, வெளிநாட்டிற்கோ இடம்பெயர வேண்டிய சூழ்நிலைக்குத் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ தள்ளப்பட்டால் அவர்களே சூழலியல் அகதிகள்."

2008ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டிற்குள் மட்டும் 6.32 கோடி மக்கள் சூழலியல் அகதிகளாக மாறியுள்ளனர். இதுவே 2050இல் 20 கோடியாக மாறும் என்கிறது ஐ.நா.

2010ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாகிஸ்தானில் இதுவரை ஒரு கோடி மக்களும் பிலிப்பைன்ஸில் 2013ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியால் 40 இலட்சம் மக்களும் இடம்பெயர்ந்தார்கள். அதில் பிலிப்பைன்ஸில் மட்டும் 19 இலட்சம் பேர் வீடற்றுத் தெருவோரங்களில் வாழ வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டார்கள். கடந்த சில ஆண்டுகளாகக் கடல் மட்டம் உயர்வதாலும், வெள்ளங்களாலும் பாதிக்கப்படும் வங்கதேசத்தின் கடலோர கிராம மக்கள், நமது கண்முன்நாம்பார்த்துக்கொண்டிருக்கும் சூழலியல் அகதிகள். கடந்த சில ஆண்டுகளாக அந்நாட்டின் தலைநகரமான டாக்காவை (Dhaka) நோக்கிக் குறைந்தபட்சம் 50,000 மக்கள் பருவநிலை மாற்றங்களின் விளைவு களால் ஏற்படும் பாதிப்புகளுக்குள்ளாகிச் சூழலியல் அகதிகளாக இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றுவரையிலும் இத்தகைய சூழலியல் பிரச்சினைகளின் காரணமாகப் பல ஆயிரம் மக்கள் இந்தியா வின் கதவைத் தட்டிக் கொண்டிருக்கி றார்கள்.

ஆசியாவிலேயே இந்தியா, இந்தோனேஷியா, வங்கதேசம் ஆகிய நாடுகளில்தான் பருவநிலை மாற்றங்களின் விளைவுகளுக்கு ஆளாகும் நிலையில் அழிவின் விளிம்பில் வாழும் மக்கள் அதிகம் வாழுகின்றனர். இந்தியாவிலேயே 2015ஆம் ஆண்டில் மட்டும் பல்வேறு காரணங்களுக்காக ஒரு கோடியே 90 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளார்கள். அதில் 90 சதவிகிதம் பேர் இயற்கைப் பேரிடர்களாலும் வறட்சி, பஞ்சம் போன்றவற்றாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்கிறது சர்வதேச இடம் பெயர்வு கண்காணிப்பு மையம். பிரம்மபுத்திரா நதியில் ஏற்பட்ட மண் சரிவுகளாலும் வெள்ளப் பேரிடர்களாலும் மட்டுமே கடந்த சில ஆண்டுகளில் 1.3 கோடி பேர் தங்கள் வாழிடங்களை இழந்துள்ளனர். அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கடலின் மட்டம் அறிஞர்கள் நினைத்ததைவிட இருமடங்கு அதிகமாக உயர்வதால் அந்த டெல்டா பகுதி முழுவதும் அடுத்த இருபது ஆண் டுகளில் கடல்சூழ் பகுதியாக மாறினாலும் ஆச்சரிய மில்லை.

தற்போதைய நிலையை வைத்துக் கணிக்கும் போது 2100 க்குள் இந்தியா மற்றும் வங்கதேசத்தில் மட்டும் 12 கோடி மக்கள் சூழலியல்அகதிகளாக மாறுவார்கள் என்கிறது கிரீன் பீஸ் என்ற சுற்றுச் சூழல் அமைப்பின் ஓர் ஆய்வு. பொருளாதார ரீதியிலும் இந்தியா கடந்த சில ஆண்டுகளில் பெரும் இழப்புகளைச்சுற்றுச்சூழல் சீர்கேடுகளால் சந்தித்துள்ளது. வருடத்திற்குக் குறைந்தபட்சம் 10 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு. இந்தியா விற்கு இயற்கைப் பேரிடர்களால் ஏற்படு கிறது. அதில் வெள்ளப்பெருக்கால் மட்டுமே 7 பில்லியன் டொலர்.

நாம் சூழலியல் அகதிகளுக்கான காலத்தில் தற்போது இருக் கிறோம். ஆனால், இந்தியா உட்பட உலக நாடுகள் எதுவுமே பொருளாதார ரீதியாக அதற்குத் தயாராகவில்லை. அப்படிச் சூழலியல் அகதிகளாக மாறிக்கொண்டிருக்கும் மக்களின் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்புகளுக்கெனத் தனிச்சட்டங்களும் இதுவரை இயற்றப்படவில்லை. நாம் இந்தப் பிரச்சினைகளைச் சமாளிக்கத் தாயாராகும்போது நிலைமை இன்னும் எல்லைமீறிச்செல்ல வாய்ப்புகள் உள்ளன. உலக மக்கள் தொகையில் 10 சதவிகிதம் பேர் கடல்மட்ட உயர்வால் பாதிக்கப்படும் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அத்தோடு வளரும் நாடுகளில் பருவநிலை மாற்றங்களின் விளைவை அதிகமாகச் சந்திக்கிறார்கள். அந்நாடுகளில் விளிம்பு நிலையில் வாழும் ஏழை மக்களே இத்தகைய சீர்கேடுகளினால் முதலில் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆம், உலகம் வெப்பமடைந்து கொண்டிருக்கிறது. நிலைகுலைந்து குழம்பிக் கிடக்கிறாள் பூமாதேவி. அதன் விளைவால் ஏற்படுகின்றன பருவநிலை மாற்றங்கள். ஆனால், அதற்கான உலக நாடுகளின் பங்கில், அடித்தட்டில் வாழுகின்ற ஏழை மக்களின் பங்கு ஒரு சதவிகிதம் மட்டுமே. வெப்பமயமாதலால் ஏற்படும் பருவநிலை மாற்றங்களின் விளைவுகளை எதிர்கொள்வதிலும் வாழிட இழப்பில் தொடங்கிப் பொருட்சேதம், உயிர்ச்சேதம் வரை அனைத்தையும் 99வீதம் அனுபவிப்பதும் அதே ஏழைமக்கள்தாம்.

சர்வதேச அமைப்புகள் மாசு வெளியேற்றங்களைக் குறைப்பதிலும் பருவநிலை மாற்றத்தின் வீரியத்தைக் குறைப்பதிலும் முனைந்துகொண்டிருக்கின்றன. அது ஒருபுறம் இருந்தாலும் தற்போது நாம் எதிர்கொள்ளும் சவால்களையும் விளைவுகளையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். அதன் முதல்படியாகச் சூழலியல் அகதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்து அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முனையவேண்டும். நேர்மையான கட்டமைப்பை உருவாக்கி அவர்களுக்கான சட்டங்களை வகுக்கவேண்டும். அது சூழலியல் காரணங்களால் இடம்பெயரும் மக்களுக்கு உயிர்காக்கும் படகாக விளங்க வேண்டும்.

**ஜூனியர் விகடன்**

### 2008-2015 ஆம் ஆண்டுக்குள் தெற்காசிய நாடுகளில் இடம்பெயர்ந்த சூழலியல் அகதிகள் எண்ணிக்கை...

| | |
|---|---|
| இந்தியா | 29,564,261 |
| பிலிப்பைன்ஸ் | 2,50,22,512 |
| பாகிஸ்தான் | 1,45,68,073 |
| பங்களாதேஷ் | 41,26,474 |
| இந்தோனேசியா | 29,66,231 |
| தாய்லாந்து | 29,63,348 |
| மியன்மார் | 27,49,538 |
| இலங்கை | 23,19,719 |
| வியட்நாம் | 20,88,417 |

# 95 ஐ தொடுகிறார் கலைஞர்



ஜூன் 3 இல் 95 வயதைத் தொடுகிறார் கருணாநிதி. பெரியாரின் ஆயுள் காலத்தைத் தொடுகிறது அவரது வயது. 14 வயதில் 'ஓடி வந்த இந்திப் பெண்ணே நீ நாடி வந்த இடம் இது வல்ல" என்று இந்தித் திணிப்புக்கு எதிராகக் கொடி பிடித்ததைத் தன் அரசியல் வாழ்வின் தொடக்கமாகச் சொல்வார் அவர். ஆக, கருணா நிதியின் அரசியல் வாழ்க்கைக்கு வயது 81.

90 ஆம்ஆண்டு பிறந்தநாளை விமர்சையாகக் கொண்டாடிய கருணாநிதி, 95 ஆவது பிறந்தநாளில் குழந்தை நிலையில் இருக்கிறார். கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாக வீட்டுக்குள்ளேயேதான் அவர் வாழ்க்கை. அதற்குமுன்பு வரை தமிழக அரசியலின் அச்சு அவர்தான். அவரைப் பாராட்டியும் விமர்சித்துமே அரசியல்களம் அவ்வப் போது சூடானது. இப்போது தமிழக அரசியல் களத்தின் குவிமையம் அவரை விட்டு சற்று விலகியிருந்தாலும் இப்போதும், "கருணாநிதி இருந்திருந்தால் இந்த ஆட்சி நீடித்திருக்காது" மூன்றாவது அணி முயற்சியில் கருணாநிதி என்ன நிலைப்பாடு எடுத்தி ருப்பார்?", இந்த விஷயம் குறித்து சாமர்த்தியமும் நகைச் சுவையும் ததும்ப எப்படி அவர் பதிலளித்திருப்பார்?" என்ற கேள்விகள் அவ்வப் போது எழத்தான் செய்கின்றன.

கலை, இலக்கியம், அரசி யல் என்று கால் பதித்த தளங்க ளில் எல்லாம் தடம் பதித்தவர் கருணாநிதி. அவரது எழுத் துகளில் அலங்காரம் மின்னினாலும் நவீனச் சிந்தனைகளும் நிறைந்திருந் தன என்பதற்கு அவரது 'குறளோவியம்" சிறந்த எடுத்துக்காட்டு.

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்னும் திருக்குறளுக்கு, 'தெய் வத்தைக்கூட தொழாமல் கனவனைத் தொழுபவள், பெய் என்று சொன்னால் மழை பெய்யும்" என்று தான் எஸ்லா உரையாசிரியர்களும் உரை எழுதினார்கள்.

ஆனால் கருணாநிதி 'குறளோவியத்தில்" எழுதிய உரை இது. 'கணவன் வாக் கினைக் கடவுள் வாக்கினைவிட மேலான தாகக் கருதி அவனையே தொழுதிடும் மனைவி, பெய் என ஆணையிட்டவு டன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போல தன்னை அடிமையாக எண்ணிக் கொள்பவளாவாள்."

மழை என்பது தன்னிச்சையாய்ப் பெய்வது. யாராவது "பெய்" என்று கட்டளையிட்டவுடன் மழை பெய்தால், அது இயற்கையின் தன்மை கொண்ட இயல்பான மழை அல்ல. அது அடிமை மழை. கணவனைத் தொழும் மனைவியும் அப்படிப்பட்ட அடிமைதான் என்கின்ற கருணாநிதியின் உரை, நவீன சிந்தனைக்கான அடையாளம்.

கலைத்தளங்களிலும் கருணாநிதி பல நவீன சிந்தனைகளை முன் வைத்திருக்கிறார். மூடநம் பிக்கைகளை விமர்சிக்கும் 'பீகே" திரைப்படம் எடுக்க பாலிவுட்டுக்கு 2014 ஆம் ஆண்டு ஆனது. அதுவும் அந்த மூட நம்பிக்கைகளை விம ர்சிக்கவும் வேற்றுக்கிரகத்திலிருந்து ஓர் ஏலியன் வரவேண்டியிருந்தது. ஆனால் அதற்கு 62 ஆண்டுகளுக்கு முன்பே, பராசக்தியில் புரோகிதர் எதிர்ப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு, திராவிட அரசியல் ஆகியவற்றை முன்வைத்தவர் கருணாநிதி. 'என் சுயநலத்தில் பொதுநலமும் கலந் திருக்கிறது. ஆகாரத்திற்காக அழுக் கைச் சாப்பிட்டுத் தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன். அதைப்போல என்ற அவரது வசன வரிகளின் கவித்துவ உயரம் மகத்தானது. நினைவாற்றலுக்கு அடையாள மான கருணாநிதிக்கு, அவரின் கடந்த காலத்தையே இன்று நினைவூட்ட வேண்டியிருப்பது நிச்சயமாக வரலாற்றுத்துயரம்தான்.

வரலாற்றில் எல்லாக் குரல்களும் வசீகரமானவை அல்ல. ஆனால், அவரது கரகரத்த குரலின் காந்தத் தன்மை எத்தனையோ தலைமுறையைக் கட்டி இழுத்தது. பொதுக் கூட்டத்தில் மற்றவர்களெல்லாம் பேசி முடித்ததும் ஒலி பெருக்கிக்கு முன் வரும் கருணாநிதி. "இந்தக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கும்..." என்று பேச்சை ஆரம்பிக்கும் போதே, திருவிழாக் கொண்டாட்டத்துக்கான மனநிலை தொடங்கி விடும். அவரும் நிறுத்தி நிதானமாக, தலைமை தாங்குபவர், முன்னிலை வகிப்பவர்கள், மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள் என வரிசையா கப் பெயர்களை விளிப்பார். இறுதியில் பரபரப்பும் பரவசமும் நிறைந்த அந்தக் கணம் வரும். "என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே..." என்று அந்தக் குரல் ஒலிக்கும்போது திருவிழா உச்சத்தை அடையும். அந்தக் கணத்துக்காகத் தான் காத்திருப்பார்கள் உடன்பிறப்புகள்.

"உயிரினும் மேலான..." என்று ஒலிக் கும் அந்தக் கரகரத்த குரல்தான் எத்தனையோ தோல்விகளை எதிர் கொள்ளும் மனவுறுதியை அவர்களுக்குத் தந்தது. போராடி சிறைநிரப்பச் செய்தது, தீக்குளித்துத் தியாகம் செய்ய வைத்தது. எந்தப் பதவியும் கிடைக்கா விட்டாலும் ஊரே ஏசினாலும் தலைவருக்காக மீண்டும் மீண்டும் தன்னை அர்ப்பணிக்க வைத்தது. எத்தனை முறை கட்சி உடைந்தாலும் கரை வேட்டியின் வண்ணத்தை மாற்றாமல் கறுப்பு-சிவப்பை இரத்தத்தின் நிறமாக மாற்றியது.

அந்தக் குரலை ஒன்றரை ஆண்டுகளாகக் கேட்காமல் தொய்வடைந்து போயிருக்கும் உடன்பிறப்புகள் அவ்வப் போது தலைவரின் அசைவுகள் குறித்து வெளியாகும் வீடியோக்களை ஆர்வத் துடன் கவனித்துவருகிறார்கள். மீண் டும் ஒருமுறையாவது "அன்பு உடன் பிறப்புகளே" என்று அழைக்க மாட்டாரா என்று தவமிருக்கிறார்கள்.

இன்னும் ஐந்தாண்டுகளில் நூறாண்டைத் தொடப்போகிறார் கருணாநிதி.

அதற்குள்... அதற்குள்... அந்தக் கரகரத்த குரல் தழுதழுத்த தொனியிலாவது கேட் குமா? குறளோவியத்தின் குரல் கேட்குமா?

ஜூனியர் விகடன்



"மனிதச் சங்கிலி போராட்டம் பண்றப்பகூட தலைவரோட புத்தி மாறலை!"
"என்ன செய்தாரு?"
"அதையும் அறுத்துட்டு ஓடறாரு



"தலைவரே நீங்க போட்டிருக்கிற மோதிரத்தில உள்ள ராசிக்கல்லு வித்தியாசமா இருக்கே...அதை எங்கே வாங்கினீங்க?"
"என்னோட முதல் பொதுக்கூட்ட மேடையில வந்து விழுந்ததுதான்..."



"உங்க பையன் கல்யாணத்துக்கு பொண்ணு வீட்லே என்ன போட்டாங்க?"
"சண்டை."



"சாமியார், பொலிஸை பார்த்தா ஏன் கண்ணை மூடிக்கறார்?"
"அது சூழ்நிலைதியானம்.

# இது நம்ம கதைகள்...

## இலங்கையும், அம்புலியும்


மிகப் பெரும் செலவில் இலங்கை ஒரு விண்வெளியோடத்தைத் தயாரித்து, அதில் சிங்கள,தமிழ்,பறங்கி இன விண்வெளி வீரர்கள் மூவரை சந்திரனுக்கு அனுப்பியது. விண்வெளியோடம் வெற்றிகரமாகப் பயணித்து சந்திரனில் தரையிறங்கியது. ஆனால் அடுத்த கணமே அதனுடனான தொலைத்தொடர்பு அற்றுப் போனது. எவ்வளவு முயற்சித்தும் விண்வெளி வீரர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

நிமிடங்கள் மணித்தியாலமாகி, மணித்தியாலங்கள் நாட்களாகி, நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதமாகியது. விண்வெளியோடம் தயாரிப்பதிலே பெரும் மோசடி நடந்துள்ளது என்றும் விண்வெளி வீரர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதென்றும் அவர்களைத் தேடாது அரசு மெத்தனமாகவிருக்கிறது என்றும் எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தத் தொடங்கின.

போராட்டங்கள் கிளர்ச்சிகளாகி அரசு கவிழும் நிலை தோன்றியது. தொடர்ந்தும் தாமதித்தால் நிலைமை மோசமாகும் என்பதால் பெரும் செலவில் இன்னுமொரு விண்வெளியோடம் தயாரிக்கப்பட்டு தேடுதல் குழு சந்திரனுக்கு அனுப்பப்பட்டது.

தேடுதல் குழு சந்திரனில் தரையிறங்கியது. அவர்கள் தரையிறங்கிய இடத்திற்கருகில் முன்னைய விண்வெளி யோடமும் பாதுகாப்பாக தரையிறங்கியிருந்ததை தேடுதல் குழுவினர் கண்டனர். அது எந்த சேதத்திற்கும் உள்ளாகியிருக்கவில்லை. ஆச்சரியமடைந்த தேடுதல் குழுவினர் அதைப் பரிசோதித்தனர்.

அதில் தொடர்பாடல் கருவியில் சிறிய பழுது ஏற்பட்டிருந்தது. பழுது நொடிப் பொழுதில் சீர்செய்யப்பட்டது. இதனை அந்த ஓடத்தில் வந்தவர்களே சீர்செய்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்யாமல் அவர்கள் எங்கே போனார்கள் எனத் தேடுதல் குழு அவர்களைத் தேடியது.



சிறிது தூரம் சென்றதும் கப்றிஞ்சா இசை சத்தமாக ஒலிப்பது கேட்டது. அந்தத் திசையில் நகர்ந்த போது பறங்கியின விண்வெளி வீரர் மது மயக்கத்தில் கிடந்தார். அவரைத் தட்டியெழுப்பினர். அவரால் எழுந்திருக்கமுடியாதளவு அவர் போதையிலிருந்தார். சரி, மற்ற வர்கள் என்னவானார்கள் என்று தேடுதல் குழு தொடர்ந்து தேடியது.

ஒரு இடத்தில் பெரிய பள்ளம் காணப்பட்டது. அதை எட்டிப் பார்த்தார்கள். அதனுள் தமிழர் மண்வெட்டியுடன் நின்று கொண்டிருந்தார். நீ என்னப்பா செய்கிறாய் என்று தேடுதல் குழுவினர் அவரிடம் கேட்டனர். அவர் சொன்னார், கொஞ்சம் போயிலைக் கன்று கொண்டு வந்தேன். அதை நட்டு பயிர் செய்ய தண்ணீருக்கு துரவு எடுக்கிறேன். ஆனால் இவ்வளவு ஆழமாய் கிண்டியும் தண்ணீர் வருகுதில்லை என்றார். பொறுப்பற்ற அவருடனும் மினக்கெட்டு பயனில்லையென்று கண்டு கொண்ட தேடுதல் குழு, இந்தக் குழுவினரின் தலைவரான சிங்களவரைத் தேடியது.

அவர் ஒரு அரச மரத்தின் கீழ் கண்களை மூடித் தியானத்திலிருந்தார். அவரை தட்டி "என்ன மனுஷரப்பா நீங்கள் உங்களைக் காணவில்லை என்னாச்சு என்று இலங்கையில் பெரிய பிரளயமே நடக்குது. தொலைத்தொடர்பு சாதனம் பழுதானதும் அதை உடனே திருத்தி தொடர்பு கொண்டிருந்தால் இவ்வளவு செலவு செய்து நாங்கள் இப்படி வந்திருக்கத் தேவையில்லையே. ஒருவன் குடித்து விட்டுக்கிடக்கிறான். மற்றவர் தோட்டம் செய்ய நிலம் தேடுறான். சரி அவர்களை விடு. நீ தானே தலைவன். உனக்காவது பொறுப்புணர்வு வேண்டாமா" என்று கடிந்து கொண்டனர்.

அதற்கு அவன் அமைதியாச் சொன்னான். நான் என்னப்பா செய்கிறது. அங்க இலங்கையில் மாதத்திற்கு ஒரு போயா நாள் (பூரணை) தான் வரும் ஆனால் இங்க அம்புலியில் எல்லா நாளும் போயா நாளாக அல்லவா இருக்கு. போயா நாள் லீவு நாள். வேலை செய்யக் கூடாதென்று சட்டமிருக்கு. அப்ப நான் எப்படி பழுதைத் திருத்திறது. அதைக் கேட்டதும் தேடுதல் குழுவினருக்கு கொலைவெறி தலைக்கேறியது......

அம்புலியில் மட்டுமில்லை நம்மூர் அலுவலகங்கள் சிலவற்றிலும் எல்லா நாளும் போயா நாள் தான் பாருங்கோ.

எப்.எக்ஸ்.அன்ரன்

# யார் அந்த வி.ஐ.பி.?




கனடாவைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரர் பெர்ஸி வில்லியம்ஸ். அவருக்கு ஒலிம்பிக்ஸில் கலந்துகொள்ள வேண்டுமென்ற கனவு இருந்தது. 1928இல் ஒலிம்பிக் போட்டிகள் ஆம்ஸ்டெர்டாம் நகரத்தில் நடைபெறவிருந்தன. அதற்காக ஹோட்டலில் சர்வராகவும், பாத்திரங்கள் கழுவியும் பணம் சேர்த்த பெர்ஸி, ஒலிம்பிக் போட்டிகளுக்குக் கிளம்பிச் சென்றார்.

100மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 10.6 விநாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். அது அப்போதைய உலக சாதனை. 'உலகின் வேகமான மனிதர்' என்ற சிறப்பு பெர்ஸிக்குக் கிடைத்தது. பரிச ளிப்பெல்லாம் முடிந்து ஹோட்டலுக்குத் திரும் பினார். மாலை வேளையில் பெர்ஸியைப் பார்க்க ஏகப்பட்ட ரசிகர்கள் ஹோட்டல் முன் குவிந்து விட்டனர். அவருக்காகக் காத்திருந்தனர். நீண்ட நேரமாகியும் அவர் வரவில்லை. ஏன்? காரணம், 'யாரோ ஒரு பெரிய மனிதரைக் காண எல்லோரும் காத்திருக்கிறார்கள். நாமும் காத்திருப்போம்' என்று பெர்ஸியும் அந்தக் கூட்டத் தில்தான் அப்பாவியாக, அமைதியாக நின்று கொண்டிருந்தார்.

சாப்ளின் மாதிரி!

சார்லி சாப்ளின் புகழின் உச்சத்தில் இருந்த சமயம். அவரது படங்கள் ஓஹோவென மக்களால் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. அப்போது அவரைப் போலவே நடை, உடை, பாவனையுடன் பலரும் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தனர். அமெரிக்காவில் ஒரு கண்காட்சியில் 'சார்லி சாப்ளின் வாக்' என்றொரு போட்டி அப்போது அறிவிக்கப்பட்டது. அதில் சார்லி சாப்ளின் போலவே தத்ரூபமாக உடையணிந்து, நடந்து, நடனமாடிக் காட்டும் ஒருவருக்குப் பரிசு என்று அறிவிக்கப்பட்டது. குட்டையாகவும் நெட்டையாகவும், சராசரி உயரத்துடனும் பலரும் அந்தப் போட்டியில் கலந்து கொண்டு சாப்ளின் போலவே நடந்தும் நடித்தும் காட்டினர். அதில் அசத்திய ஒருவருக்கு முதல் பரிசு வழங்கப்பட்டதாகச் செய்தி உண்டு.

அதே போட்டியில் நிஜ சார்லி சாப்ளினே வேறொரு பெயரில் கலந்து கொண்டார் என்று பின்பு பல பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன. தனது




ஸ்டைல் மீசை இன்றியும், தனது பாணியிலான ஷூ அணியாமலும், போட்டியில் ரகசியமாகக் கலந்து கொண்டு நடந்தும் நடித்தும் காட்டிய உண்மையான சாப்ளின் அதில் தோற்றுப் போனார். அவருக்கு இருபதாவது இடமே கிடைத்தது.

ஆஹா தக்காளி!

ராபர்ட் கிப்பன் ஜாக்சன் என்பவர் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவின் நியு ஜெர்ஸி மாகாணத்தில் வாழ்ந்தவர். விவசாயி, தோட்டக் கலை நிபுணர், வரலாற்றாளர், நிதீபதி யும்கூட. அப்போதுவரை அந்தப் பகுதியில் தக்காளி அறிமுகமாகவில்லை. தோட்டக்கலை நிபுணரான ராபர்ட்தான், தக்காளியை அங்கே இறக்குமதி செய்து, தன் தோட்டத்தில் விளைவிக்கவும் செய்தார். பின் தக்காளியைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனைக்கும் வைத்தார்.

பளபள தக்காளியைக் கண்டு ஒருவர்கூட விரும்பி வாங்கவில்லை. என்னடா இது! இப்படிச்



சிவப்பாக இருக்கிறதே! அய்யோ, இது விஷம். இந்தப் பழத்தைத் தின்றால் செத்துப் போய்விடுவோம்! ஒவ்வொருவருமே பயந்தார்கள். அதுவரை தக்காளி குறித்து அப்படிப்பட்ட கட்டுக்கதைகளையே அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் ராபர்ட் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். 'மக்கள் முன்னிலையில் நான் தக்காளிப் பழங்களை உண்ணப் போகிறேன்.' என அறிவித் தார்.

பரபரப்பு பற்றிக் கொண்டது. குறிப்பிட்ட தினத்தில் அந்த சாலம் (Salem) நகரத்தின் மையப்பகுதியில் சுமார் இரண்டாயிரம் மக்கள் நெருக்கி அடித்துக் கொண்டு நின்றனர். அவர்கள் முன்பு கறுப்பு கோட் அணிந்த ராபர்ட் தோன்றினார். கூட்டம் ஆர்ப்பரித்தது. தன் முன் வைக்கப்பட்டிருந்த கூடையில் இருந்து ஒரு தக்காளியை எடுத்தார். கையை உயர்த்தி அதைக் கூட்டத்தை நோக்கிக் காண்பித்தார்.

'இந்தப் பழத்துக்கு எவ்வளவு பெரிய வரலாறு உண்டு தெரியுமா?' என்று கேட்டபடி, தக்காளியின் சரித்திரத்தை உரத்த குரலில் சொல்ல ஆரம்பித் தார் 'இதோ உங்கள்முன்பு நான்இதை உண்ணப்போகி றேன். இது குறித்த கட்டுக்கதைகள் அனைத் தையும் உடைக்கப் போகிறேன்' என்றபடி தக்காளி யைத் தன் வாயருகே கொண்டு சென்றார். கூட்டம் அமைதியானது. எல்லோரும் கண் இமைக்காமல் அவரையே கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ராபர்ட், தக்காளியைத் தன் பற்களால் ஒரு கடி கடித்தார். கூட்டத்திலிருந்த ஒரு பெண், பயந்து அலறி முகத்தை மூடிக் கொண்டாள். அடுத்த கடி கடித்தார். இன்னொரு கையிலும் தக்காளியை எடுத்துக் கடித்து விழுங்க ஆரம்பித்தார். மளமளவென ஏழெட்டுத் தக்காளிகளை உள்ளே தள்ளினார். 'ஹே... உண்மையாவே சாப்பிடுறாரு... அவருக்கு ஒண்ணுமே ஆகல! உயிரோடதான் இருக்காரு!' கூட்டத்தினர் ஆச்சர்யப்பட்டனர். ராபர்ட். தொடர்ந்து தக்காளிகளை உண்ண உண்ண உற்சாகத்தில் ஆர்ப்பரித்தனர்.

இப்படியாகத்தான், ராபர்ட் என்பவர் தக்காளியை அமெரிக்கர்கள் மத்தியில் பிரபலமாக்கினார். பின்புதான் தக்காளி அமெரிக்கர்கள் தினசரி உண்ணும் பொருளானது.

# கடவுள் எங்கிருக்கிறார்

ஒரு செல்வந்தர் இருந்தார். ஒரு நாள் அவர் தன் தோட்டத்தில் விளைந்த வாழைக்குலை ஒன்றை பணியாளிடம் கொடுத்துக் கோவிலில் கொடுக்கச் சொன்னார்.

ஏழைப் பணியாள் எடுத்துச் செல்லும் வழியில் அவனுக்கு அதிக பசியெடுக்கவே, அக்குலை யிலிருந்து இரண்டு பழங்களைப் பிய்த்துச் சாப்பிட்டு விட்டான்..

மீதிப் பழங்களை கோவிலில் கொடுத்தான். அன்றிரவு செல்வந்தர் ஒரு கனவு கண்டார். கனவில் இறைவன் வந்து "நீ எனக்குக் கொடுத்த இரண்டு பழங்களை நான் சாப்பிட்டேன் ருசியாக இருந்தது" என்றான்.

செல்வந்தனுக்கு மிகக் கோபம் வந்தது. ஒரு குலை பழம் கொடுத்திருக்க இரண்டு மட்டுமே இறை வனுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. மீதி என்ன வாயிற்று எனக் கோபப்பட்டான். மறு நாள் காலை அந்தப் பணியாளைக் கூப்பிட்டு விசாரித்தான்.

அவன் இரண்டு பழங்களைப் பசியினால், தான் சாப்பிட்டதை ஒப்புக் கொண்டு, மீதிக் குலையைக் கோவிலில் கொடுத்து விட்டதைச் சொன்னான். செல்வந்தனுக்குப் புரிந்தது . அந்த ஏழை சாப்பிட்ட பழங்கள் மட்டுமே இறைவனைச் சென்று அடைந்திருக்கிறது என்று.




**ஹாய் குட்டீஸ்!**
**எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.**

# விடுகதைகள்

**1)**கீழே வரும் ஆனால் மேலே போகாது. அது என்ன?

**2)**அடிப்பாதை இருக்கும் கால் இருக்காது. அது என்ன?

**3)**இளமையில் உயரம் முதுமையில் கட்டை. அது என்ன?

4) பச்சைபெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள். அது என்ன?

**5)**உலகம் முழுதும் சுற்றும். ஆனால் ஒரே இடத்திலேயே இருக்கும், அது என்ன?

6)கைகள் இருக்கும். ஆனால் கைதட்ட முடியாது. அது என்ன?

**7)**இறக்கையை விட மென்மையானது, ஆனால் உலகின் பலமிக்க மனிதராலும் சில நிமிடங்கள் பிடித்து வைத்திருக்க முடியாது. அது என்ன?

**8)**சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கும், அதை வாசித்தால் அதன் அர்த்தம் முறிந்துவிடும். அது என்ன?

**9)**கண் உண்டு, ஆனால் பார்க்க முடியாது. அது என்ன?

**10.**ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல். அது என்ன?

**விடைகள்**

1)மழை 2)நத்தை 3)மெழுகுவர்த்தி
4)வெண்டக்காய் 5)முத்திரை 6)கடிகாரம்
7)மூச்சு 8)அமைதி 9)ஊசி
10)மூக்கு

# பொது அறிவு

1)தொண்டி யாருடைய துறைமுகம்-**சேர அரசர்கள்**

2)முசிறி யாருடைய துறைமுகம் - **சேர அரசர்கள்**

3)சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளின் அண்ணன்-**செங்குட்டுவன்**

4)இமயம் வரை சென்று கல் எடுத்து கண்ணகிக்கு நினைவுச் சின்னம் எழுப்பிய மன்னர்-**செங்குட்டுவன்**

5)சங்க காலத்தை அறிய உதவும் சான்றுகள்-**அசோகரது கல்வெட்டுகள், உத்திரமேரூர் கல்வெட்டுகள், ஆதிச்ச நல்லூர் கல்வெட்டுகள்**

6)சங்க காலத்தில் தமிழ்நாட்டின் வடக்கு எல்லை-**வேங்கடம்**


7)இரண்டாம் சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழின் அடிப்படை நூல் - **தொல்காப்பியம்**

8)சங்க காலம் எனப்படுவது - **கி.பி. 300 முதல் கி.மு. 300 வரை**

9)நிலிந்தரு. குருவிற்பாண்டியன் காலத்தில் அரங்கேற்றப்பட்ட நூல் - **தொல்காப்பியம்**

10)வஞ்சி யாருடைய தலைநகரம்- **சேர அரசர்கள்**

# நரியும் கொக்கும்



அது ஒரு அடர்ந்த காடு. அங்கு பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு எப்போதும் யாரையாவது ஏமாற்றி அவர்கள் ஏமாறுவதைக் கண்டு மனம் மகிழ்வதை பொழுது போக்காகக் கொண்டது.

அதே காட்டில் அறிவு மிக்க கொக்கு ஒன்றும் இருந்தது. அந்தக் கொக்கு அனைத்து மிருகங்களிடமும் நன் மதிப்பை பெற்று இருந்தது. இதைப் பொறுக்க முடியாத நயவஞ்சக நரி அந்தக் கொக்கை எப்படியாவது ஏமாற்ற வேண்டும் என்று நினைத்தது.

ஒரு நாள் கொக்கு, நரியின் குகை இருக்கும் வழியில் வந்துகொண்டிருந்தது.

நரி அந்தக் கொக்கைப் பார்த்து "நண்பனே! உன்னுடைய அறிவைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். நான் நாளை உனக்கு விருந்து வைக்க விரும்புகிறேன். உன்னால் வர முடியுமா?" என்று கேட்டது.

கொக்கும் சரி வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றது.

அடுத்த நாள், நரி சுவை மிக்க சூப்பை தயாரித்தது.

அன்று மாலை கொக்கு நரியின் இடத்திற்கு சென்றது.

நரியோ திட்டமிட்டபடி,



சூப்பை அகன்ற இரு தட்டில் ஊற்றியது. ஒன்றை கொக்கிடம் கொடுத்தது.

கொக்கினால் வாய் அகன்ற தட்டில் உள்ள சூப்பை குடிக்க முடியவில்லை.

நரியோ நக்கி நக்கி அந்த சூப்பை குடித்துவிட்டு, "நண்பனே! இந்த சூப்பை உனக்காக செய்தேன். எப்படி இருந்தது?' என்று சிரித்துக் கொண்டே கேட்டது.

கொக்கு தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது. நரியிடம், "நண்பனே சூப் மிகவும் ருசியாக இருந்தது" என்று கூறியது.

கொக்கு நரியிடம், "இரவு நேரம் ஆகப் போகிறது நான் செல்ல வேண்டும்" என்று கூறியது.

செல்லும் முன் "இன்று நீ எனக்கு விருந்து வைத்தாய்! பதிலுக்கு நான் நாளை உனக்கு விருந்து வைக்கலாம் என்று நினைக்கிறேன். உன்னால் வர முடியுமா?" என்று கேட்டது.

நரியும் வர சம்மதம் தெரிவித்தது.

நரியோ கொக்கை ஏமாற்றி விட்டேன் என்ற கர்வத்துடன் சந்தோசமாக உறங்கச் சென்றது. கொக்கு பசியுடனும், வருத்தத்துடனும் பறந்து சென்றது.

அடுத்தநாள் கொக்கு நரிக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்தது.

பல இறைச்சிகளை போட்டு சுவை மிக்க சூப்பை தயா



ரித்தது. அதன் வாசனை அந்த காடு முழுவதும் பரவியது.

அன்று மாலை நரி, கொக்கின் வீட்டுக்கு சென்றது. கொக்கு, நரி வந்தவுடன், அந்த சுவை மிக்க சூப்பை சிறிய துளை கொண்ட இரண்டு குவளைகளில் ஊற்றியது. அந்த சூப்பின் வாசனையை முகர்ந்தவுடன் நரிக்கு வாயில் எச்சில் ஊறியது. இன்றைக்கு நல்ல வேட்டை என்று நரி நினைத்தது.

கொக்கு ஒரு குவளையை நரியிடம் கொடுத்தது. கொக்கு தன் வாயை மறு குவளையில் நுழைத்து சூப்பை ருசித்தது. நரியினால் குவளையின் துளை சிறியதாய் இருப்பதனால் குடிக்க முடியவில்லை.

குவளையின் ஓரங்களில் சிதறி இருந்த சிறு துளிகளை மட்டுமே நக்கி சாப்பிட முடிந்தது.

கொக்கு "நரியைப், பார்த்து, சூப் எப்படி இருந்தது என்று கேட்டது?" நரியும், "மிகவும் அருமை. இது போன்ற ஒரு சூப்பை நான் குடித்ததே இல்லை" என்று பொய் சொல்லியது.

நரி, தான் ஏமாற்றப் பட்டதை உணர்ந்தது.

நரி, கொக்கிடம் விருந்துக்கு நன்றி என்று கூறி விட்டுவருத்தத்துடன்சென்றது.

அப்போதுதான்நரி "நாம் மற்றவர்களை ஏமாற்றும் போது அவர்கள் எவ்வாறு வருத்தப்பட்டு இருப்பார்கள்" என்று உணர்ந்தது.

அன்று முதல் திருந்திய நரி, பின் யாரையும் ஏமாற்றுவதில்லை.



இதில் இருக்கும் வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மாலையிட்ட மங்கை
இசை : எம்.எஸ். விஸ்வநாதன், டி.கே. ராமமூர்த்தி
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : டி.ஆர்.மகாலிங்கம்




சில்லென்று பூத்த சிறு நெருஞ்சி காட்டினிலே
நில்லென்று கூறி நிறுத்தி வழி போனாளே
நின்றாது போல் நின்றாள் நெடுந்தூரம் பறந்தாள்
நிற்குமோ ஆவி நிலைக்குமோ நெஞ்சம்
மணம் பெறுமோ வாழ்வே...ஆ...ஆ...ஆ...ஆ...ஆ...

செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

காற்றினில் பிறந்தவளோ புதிதாய்
கற்பனை வடித்தவளோ
சேற்றினில் மலர்ந்த செந்தாமரையோ
செவ்வந்திப் பூச்சரமோ

அவள் செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

கண்களில் நீலம் விளைத்தவளோ
அதைக் கடலினில் கொண்டு கரைத்தவளோ
பெண்ணுக்கு பெண்ணே பேராசை கொள்ளும்
பேரழகெல்லாம் படைத்தவளோ...

அவள் செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

# சமூகக் கட்டுப்பாடு

அன்பான சங்குநாத நேயர்களே! உங்கள் அனைவருக்கும் இனிய ஞாயிறு வணக்கம்.

அம்மாளாச்சி... நல்ல வேளை நான்... அது தான்... ஜிம்மிக்குட்டி...ஓமோம் நான் ஒரு நாய்க்குட்டியா பிறந்திட்டன். கடவுளே மனிதராப் பிறந்து கஷ்டப்படாமல் என்னளவிலை நான் சந்தோசமா நல்ல படிச்ச பண்பான மனிசருக்குக் காவல் நாயாப் பிறந்திருக்கிறன். இதுபோதும் எனக்கு. நான் என்ன சந்திர மண்டலத்துக்குப் போகவே ஆசைப்படுறன். பெரியவர் அடிக்கடி சொல்லுவார் பெரிய ஆலவிருட்சமா வரவேண்டும் என்பதை விட புல்லிலை சிறந்த புல்லா இரு எண்டு. எங்கடை "லைக்கா" எல்லாம் விண்வெளிக்குப் போனதுதான். எனக்கு விண் வெளியும் இந்தப் பூமியும் என்ரை பெரியவரின்ரை வீடும் அவரின்ரை குடும்பமும் தான். என்ன சிரிக்கிறியள். மனத் திருப்தியைப் போல சிறந்த சந்தோசம் இந்த உலகத் திலை எதுவுமே இல்லைப் பாருங்கோ...சாக்கிலை படுத்தாலும் சந்தோசமாப் படுத்து நித்திரை கொள்ளுறன்...

ம்...ஏதோ பெரிய படிப்புப் படிக்கிற பெரிய பிள்ளைகள் ஏதோ ஆய்வு செய்ய வேணும் எண்டு வாறன் எண்டவை. அதுதான் வாசல்லை ஒரு கண்ணும் வீட்டுக்கை ஒரு கண்ணுமா இருக்கிறன். ம்..ம்.. கேற் துறக்குது. நான் ஒருக்கா எழும்பிப் போட்டு வடிவா ஒரு பக்கமாக இருக்கிறன். பெரியவரைப் படம் எடுத்தாலும் எடுப்பினம். அதுதான் அவரின்ரை காலடியிலை இருக்கிறன். என்ரை நிறத்துக்கு சிவப்புக் கழுத்துப் பட்டி நல்ல வடிவா இருக்கும்...

இரண்டு பெண் பிள்ளைகளும் இரண்டு ஆண் பிள்ளைகளும் வருகினம். நல்ல மரியாதையா துளசி மாடத்துக்குத் தள்ளி செருப்பு, சப்பாத்தையெல்லாம் கழட்டி வைச்சிட்டு "வணக்கம் சேர்" எண்டு கைசேர்த்துக் கும்பிட்டுப் பெரியவரின்ரை காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கினம். வடிவான, நல்ல பிள்ளைகளாக கிடக்கு. பெரியவர் கதிரைகளைக் காட்டிப் போட்டுத் தானும் இருக்கிறார். ம்...விசயம் ஆரம்பமாகுது. ம்...ம்...நல்ல மென்மையாக் கதைக்கினம்.

"ம்...சொல்லுங்கோ பிள்ளைகள்..." பெரியவர் தொடக்கி வைக்கிறார். ஒவ்வொருத்தராக் கதைக்கினம்...

"சேர்...சமூகம் ஒழுங்கா இருக்க வேணுமெண்டால் சமூகக் கட்டுப்பாடு அவசியம் தானே". "சமூகக் கட்டுப்பாடு சரி வரச் செயற்படாவிட்டால் சமூக ஒழுங்கு சீர்குலையும் தானே"

"சமூக ஒழுங்கு சீர்குலைந்தால் சமூகத்திலை நெறி பிறழ்வுகள் ஏற்படும் தானே".

"சேர்! பண்பாட்டுப் பயன் மதிப்புக்கள், விழுமியங்கள் சீர்குலையும் இடங்களில் சமூகக் கட்டுப்பாடும் சீர்குலைந்து எங்கடை இளையோர், சிறுவர்கள் குற்றங்கள் செய்யும் நிலைமை அதிகரிக்குது..."

நாலு பேரும் தங்கடை தங்கடை கருத்துக்களை நல்ல தெளிவா, உறுதியா, பணிவா எடுத்துச் சொல்லுகினம். பெரியவர் ஒரு புன்னகையோடு தலையாட்டி ஏற்றுக் கொள்கிறார். முதல் தொடங்கின பிள்ளை திரும்பவும்...

"இத்தனை விடயங்களும் எங்கள் மத்தியில் ஏன் அண்மைக் காலத்தில அதிகரிக்குது. கற்றல் வழிகாட்டல்கள் எந்த இடத்திலை பல வீனப்பட்டு செயலிழந்து... இது நடக்குது சேர்?"

பெரியவர் ஆரம்பிக்கிறார்; "அருமையான கருத்துக்களம் ஒன்றை முன்வைத்திருக்கிறியள். கேட்க சந்தோசமா இருக்கு. பல்கலைக்கழக கற்றல் காலங்களில் இத்தகைய விழிப்புணர்வுத் தேடல்களும் ஆராய்வுகளும் நிறைந்து தெளிவு ஏற்பட்டுப் பட்டம் பெற்று வெளியேறிய புத்திஜீவிகள்தான் இந்த சமூகத்தை மேல் தளத்திலிருந்து வழிநடத்துகிறார்கள். பொதுவாகவே குடும்பம் என்ற அடித்தளம் தான் ஒரு பிள்ளையை தன்னளவில் தயார்ப்படுத்தி நல்ல சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தி பாடசாலைக்கு அனுப்ப பிள்ளை சமூகத்திற்கு அறிமுகமாகின்றான். பாடசாலை மனிதனை அறிவுடையோராக்குவதோடு பண்புடையோராகவும் ஆக்கி உண்மையை உணரும் அறிவையும் உணர்வுகளைச் செழுமைப்படுத்தும் கலைத்துவத்தையும் வழங்கி சமநிலை ஆளுமையுடன் பிள்ளையை வளர்க்க எத்தனிக்கிறது. ஆன்மீகத்தின் செல்வாக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு முன்பு சற்றுக்கீழ் நிலை அடைகிற போது சடங்குகள், விழாக்கள் போன்றவை வாழ்க்கைக் கல்வியை வழங்குகின்றன. குற்றங்கள் இழைத்தபின் தடுப்பதற்கு முன் இழைக்காமல் காக்கும் ஆலோசனைகள், பரிந்துரைகள் வழங்கப்படுவதிலும் தப்பு என்பது செய்யப்படுவது குறித்து சரிவர அமைதியாக ஆய்வு செய்த பின்பே அது குறித்த முடிவுகளோ சர்ச்சைகளோ சமூகத்திற்கு முன்மொழிய வேண்டும். இவை யாவுமே சமூக ஒழுங்கை சீர்குலைத்து விடவல்ல பயங்கர விளைவுகளை ஏற்படுத்தி விடும். முதற் புள்ளியில் சீர்செய்ய வேண்டிய ஓவியம் முழுமையடையும் போது சீர்செய்ய முடியாத ஏற்பட்டு விடும். சரி-தவறு என்பதற்கப்பால் உணர்வு நிலைகளை மிக அவதானமாகக் கையாளுவது மிகமிக அவசியம். சரி அது அறிமுகத்திற்கு போதுமானது. அடுத்த ஞாயிறு அத்தியாயங்களைப் பற்றி பேச வாருங்கள். "ம்... கேட்டியளோ...இது அறிவுடையோர் செயல். அருமை அருமை...சாப்பிட்டிட்டு வாறன்.

**பாரதி கணேஷ்**
**சுன்னாகம்**

# கோலத்தின் மகத்துவம்

"கோலம்" என்ற சொல் அழகு எனும் பொருளைத் தரும். ஆம்! இக்கோலத்தை போடுவதில் இக் கோலம் பண்டைய காலம் தொட்டு தமிழ் மக்களிடையே பண்பட்டு வருகின்ற ஓர் கலையாகும். கோலம் போடுவதில் எத்தனையோ நன்மைகள் மட்டுமல்லாது மனதிற்கு மன மகிழ்வையும் தருகின்றது.

கலைகள் வளர்த்த, வாழ்ந்த இடம் இந்தியா. இவ் இந்தியாவிலிருந்து தான் கோலம் எம் தாய்த் திருநாட்டிற்கு கலையாக மாறியது.

இன்று கோலம் எம் இலங்கையில் தமிழர் செறிந்து வாழும் இடமாகிய யாழ்ப்பாண த்தில் போடப்படுகி ன்ற அழகுமிகு கலையாகும். திருமண வீடாகினும் திருவிழாவாகினும் பாராட்டு நிகழ்வாகிலும் வந்தாரை வரவேற்பது வாசலில் போடும் அலங்காரக் கோலமாகும். இக் கோலத்தைப் பார்த்து மயங்காதவர்கள் யாருளர்?



கோலம்போடுவதனால் பெண்களுக்கு உடற் பயிற்சி மூலம் கிடைக்கின்ற பயன்கள் கிடைக்கின்றன.

இது மட்டுமல்லாது சிலர் வீடுகளில் பண்டிகைக் காலம் வந்து விட்டால் மாவினால் கோலம் போட்டு மனைகளை அழகுக் கூடமாக்கி விடுகின்றார்கள். மேலும் பெண்கள் கற்கும் கலைகளில் கோலத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

தீபாவளித் திருநாளில் அழகிய வண்ணக் கோலங்கள் போட்டு அதில் தீபங்கள் ஏற்றி வீட்டையே கோல தீபங்களால் அழகுபடுத்தி விடுவார்கள். கோலம் போடுவதற்கு பண்டைய காலத்தில் அரிசிமா, மஞ்சள்மா, குங்குமம் ஆகியவைகளை பயன்படுத்தினார்கள். காலப் போக்கில் இக்கோலம் போடுவதற்கு வர்ணங்கள் கலந்த மா பயன்படுத்தப்படுகின்றது. இல்லங்களுக்கு எது என்னவோ நீங்களும் உங்கள் அழகுமிகு கோலங்களை போட்டு உங்கள் இல்லத்தை அழகுக் கூடமாக்குங்கள்.

**உமா வேல்முருகன்**

# ரஜினிக்கு அம்மான்னா வேணாம்னு சொன்னேன்!

சினிமாவில் நான் நல்ல நடிகையா வரனும்னு என்னை விட எங்க அம்மாதான் அதிகம் ஆசைப்பட்டாங்க. அவங்க ஆசைப் பட்ட மாதிரி எல்லாம் நடந்துட்டு வருது என்கிறார் ஈஸ்வரி ராவ்.

**காலாவின் மனைவி.**



இப்பவே நான் கறுப்புதான். சின்ன வயசுல இன்னும் கறுப்பா இருப்பேன். பாட்டி வீட்டுலதான் வளர்ந்தேன். அப்பவே, நிறைய இயக்குநர்கள் என்னைப் பார்த்து நடிக்கக் ஆசை இருந்துக்கிட்டே இருந்துச்சு. அது, பாலுமகேந்திரா சார் கையால எப்படியாவது ஒரு போட்டோவாவது எடுத்துக்கனும்ங்கிறதுதான். ஏன்னா, நிறைய சினிமா பேட்டிகளைப் படிக்கும் போது பலரும், 'பாலுமகேந்திரா சார் கையால நாம ஒரு போட்டோ எடுத்துக்கிறதே வரம்னு சொல்லியிருந்தாங்க.

அவர்கிட்ட ஒரு போட்டோ எடுத்துக்கனும்னு சொல்லி, அவரை மீட் பண்ண ஆசைப்பட்டேன். பமிலி ப்ரெண்ட் ஒருத்தர் மூலமா பாலு மகேந்திரா சார்கிட்ட அறிமுகம் ஆனேன்.

ஒரு போட்டோ எடுக்கனும்னு ஆசைப்பட்ட எனக்கு, அவர் தொடர்ந்து ரெண்டு வருடம் போட்டோ எடுத்தார்.

ஆமா, 'ராமன் அப்துல்லா' படத்துல நடிக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருச்சு.



கூப்பிடுவாங்க.

எனக்கு ஆச்சர்யமா இருக்கும். 'என்னடா.. நாம இவ்ளோ கறுப்பா இருக்கோம். நம்மளைத் தேடிவந்து நடிக்கக் கூப்பிடுறாங்களேனு இருக்கும். ஆனா, பார்க்கிறவங்க, 'பொண்ணு களையா இருக்கு', 'பல்லு எடுப்பா இருக்கு', 'சிரிச்சா கே.ஆர்.விஜயா மாதிரியே இருக்குனு எல்லாம் சொல்வாங்க. இதெல்லாத்தையும் கேட்டுத்தான் எங்க அம்மாவுக்கு என்னை சினிமாவுல நடிக்க வைக்கனும்னு ஆசை வந்துச்சோ, என்னமோ...

'கவிதை பாடும் அலைகள்' தான் என் முதல் படம். அடுத்து, 'நாளைய தீர்ப்பு'. இது விஜய்க்கு முதல் படம். அப்பல்லாம் நாங்க கத்துக்குட்டி. எங்களுக்கு அப்போ சரியா நடிக்கத் தெரியாது.

ஷூட்டிங்ல ஒரு ஓரமா நின்னு மத்த நடிகர்களோட நடிப்பைப் பார்த்துக்கிட்டு நிற்போம். எங்களைச் சுத்தி எல்லோரும் பரபரப்பா இயங்கிட்டிருப்பாங்க. ஷூட்டிங் ஸ்பாட்ல எஸ்.ஏ.சந்திரசேகர் சார் உள்ளே வந்தாலே நான், விஜய் சார், கீர்த்தனா எல்லோரும் பயப்படுவோம். அந்த நாட்களையெல்லாம் இப்போ நினைச்சுப் பார்த்தாகூட அவ்ளோ சந்தோஷமா இருக்கு.

சினிமாவுக்கு நடிக்க வந்ததுக்குப் பிறகு, எனக்குள்ள ஒரு போட்டோ எடுக்க ஆசைப்பட்ட எனக்கு, அவர் இயக்கத்துலேயே நடிச்சது, பெரிய வரம்தான்!

'காலா' படத்தோட வாய்ப்புகூட பாலு சார் படத்துல நடிச்சதால தான் அமைஞ்சது. இயக்குநர் ரஞ்சித் சார், அவர் படத்துல நடிக்கிறதுக்காக, பாலுமகேந்திரா சாரோட படங்கள்ல வர்ற ஹீரோயின் சாயல்ல ஒரு பெண்ணைத் தேடிக்கிட்டு இருந்திருக்கார். அப்போதான், அவர் மைண்ட்ல நான் வந்திருக்கேன். 'பிஸிக்கலா இப்போ எப்படி இருக்கீங்கனு பார்க்கனும், வீட்டுக்கு வரலாமான்னு ரஞ்சித் சாரோட உதவி இயக்குநர் ஜென்னி கேட்டாங்க.

வேற யாருக்காவது பண்ண வேண்டிய போன்கால் நமக்குப் பண்ணிட்டாங்களோ'னு எனக்கு ஒரு குழப்பம். ஏன்னா, சினிமாவுக்கு நான் பிரேக் விட்டு கிட்டத்தட்ட பத்து வருடத்துக்கு மேலே ஆச்சு. அப்பப்போ டிவி சீரியல்ல நடிக்கிறதையும் விட்டுட்டேன். அதனாலதான், ரஞ்சித் சார் ஆபீஸ்ல இருந்து எனக்கு அழைப்பு வந்ததும், ஆச்சர்யம்.

வீட்டுக்கு வந்து என்னை போட்டோ, வீடியோ எடுத்துட்டுப் போனாங்க. பத்து நாள் ஆச்சு, எந்தப் பதிலும் இல்லை. ஆபீஸ்க்குப் போய் ரஞ்சித் சாரைப் பார்த்தேன். 'கொஞ்சம் வெயிட் போடனும், ஹேர் கலர் எதுவும் யூஸ் பண்ணாதீங்க'னு பல ஆலோசனைகள் சொன்னார். ஆனா, எனக்கு என்ன ரோல்னு அவர் சொல்லவே இல்லை.

கொஞ்சநாள் கழிச்சு, ஜென்னியும், வசனகர்த்தா மகிழ்நன் சாரும் வீட்டுக்கு வந்து வசனங்கள் கொடுத்துப் பேசச் சொன்னாங்க. வசனங்கள் திருநெல்வேலித் தமிழில் இருந்ததுனால, எப்படிப் பேசனும்னு பிராக்டிஸ் பண்ணிக்கிட்டேன்.

அப்பதான் அது ரஜினி படம்னு தெரிஞ்சது. அவ்ளோ சந்தோஷம் எனக்கு. வீட்டுல பசங்க, வீட்டுக்காரர் எல்லோரும், 'நிச்சயம் ரஜினிக்கு அம்மா கரக்டராதான் இருக்கும்னு கலாய்ச்சுக்கிட்டு இருந்தாங்க.

கொஞ்சநாள் கழிச்சு ரஞ்சித் சார் போன் பண்ணி, 'நீங்கதான் ரஜினிக்கு ஜோடி. இன்னொரு ஜோடியும் அவருக்கு இருக்கு. ஆனா, நீங்கதான் அவரோட மனைவினு இன்னொரு அதிர்ச்சியைக் கொடுத்தார்.

சாப்பிட்டுக்கிட்ட இருந்த எனக்கு, அதுக்குப் பிறகு சோறே இறங்கலை. உடனே என் கணவருக்கு போன் பண்ணினேன். அவரும் கேஷுவலா, 'என்ன... அம்மா கரக்டர்தானே?'னு கேட்டார். 'ஹலோ... ரஜினி சாருக்கு நான்தான் ஜோடி'னு சொன்னதும், அவருக்கும் சந்தோஷம் தாங்கலை.





சினிமாவுல நான் ரீ-என்ட்ரி கொடுக்கனும்னு ஆசைப்பட்டதே என் பசங்கதான். ஏன்னா, நான் நடிச்ச எந்தப் படத்தையும் அவங்க பார்த்ததில்லை. இப்போ, 'காலா' படத்துல நான் நடிச்சது என்னை விட பசங்களுக்குத்தான் செம ஹேப்பி. இந்தப் படம் எனக்கு ரொம்ப ஸ்பெஷல். ஆமாம்.

'காலா' படத்துக்குத்தான் முதல் முறையா நானே டப்பிங் பேசியிருக்கேன். காலா'வைப் பற்றிப் பேசும் போது முகமெங்கும் அத்தனை பூரிப்புடன் பேசிய அவரிடம், இதற்கு முன் தமிழில் அவரது மறக்க முடியாத அனுபவங்களைக் கேட்டேன்.

என் வாழ்க்கையிலே பெரிய இயக்குநர்களோட படங்கள்ல நிறைய வேர்க் பண்ணியிருக்கேன். கன்னத்தில் முத்தமிட்டால் படத்துல ஒரு காட்சியில நடிச்சிருப்பேன். மணி சார்தான், 'நீங்க பார்க்கிறதுக்கு நந்திதா தாஸ் மாதிரியே இருக்கீங்க'னு சொல்லி, அந்தக் காட்சியில் நடிக்க வெச்சார். பாரதிராஜா சார் படத்துல நடிக்கலைனாலும், அவர்கிட்ட நான் நடிச்சுக் காட்டியிருக்கேன்.

அவர் படத்துல நடிக்க ஸ்கிரீன் டெஸ்ட் எல்லாம் நடந்து, கடைசியில நடிக்கமுடியாமப் போயிடுச்சு. சிவாஜி சார் தயாரிச்ச ஒரு நாடகத்துல நடிச்சிருக்கேன். அப்போ சிவாஜி சார், 'நீ சிரிச்சா கே.ஆர். விஜயா மாதிரி இருக்குனு சொல்றாங்களே, எங்கே சிரி பார்ப்போம்னு கேட்க, உடனே எனக்கு சிரிப்பு வந்திடுச்சு. 'அட, ஆமா... அப்படித்தான் இருக்குனு சொன்னார், சிவாஜி சார். இப்படிப்பல மறக்க முடியாத நினைவுகள் இருக்கு.

கடவுள் எனக்கு நல்ல குடும்பத்தை கொடுத்திருக்கார், இப்போ நல்ல வாய்ப்பைக் கொடுத்திருக்கார்.

தமிழில் எனக்கு ஒரு மாஸ் ரீ-என்ட்ரி கிடைக்கப்போற சந்தோஷம், ரஜினி சார்கூட எனக்கு ஒரு பாட்டும் படத்துல இருக்கேன்னு இன்னொரு சந்தோஷம்... கடவுளுக்கு நன்றி! புன்னகையுடன் முடிக்கிறார், ஈஸ்வரி ராவ்.

# காஷ்மீரில் அமைதி திரும்பட்டும்!

காஷ்மீரில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடரும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு சமீபத்தில் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை. காஷ்மீரில் அமைதி நீடிக்க அனைத்துக் கட்சி ஹுரியத் மாநாடு, பாகிஸ்தான் ஆகியவற்றுடனும் பேச தயார் என்று அறிவித்திருக்கிறார் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங். பயங்கரவாதச் செயல்கள் முடிவுக்கு வர வேண்டும் என்ற நிபந்தனையோடு, பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்த ஒரு வாரத்துக்குப் பிறகு தனது 'மென்மையான காஷ்மீர் கொள்கை'யை அரசு வெளிக்காட்டியிருக்கிறது.

தாக்குதல் நிறுத்த நடவடிக்கைகளை மேலும் நீடிக்கலாம் என்று தரைப் படையின் தலைமை தளபதி விபின் ராவத் அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்கது. 'ஒபரேஷன் ஓல்-அவுட்' என்ற பெயரில் அவர் எடுத்த நடவடிக்கையால் 200-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஆனால், 230-க்கும் மேற்பட்ட காஷ்மீர இளைஞர்கள் தீவிரவாதிகளின் படைகளில் புதிதாகச் சேர்ந்தனர் என்பது கவனத்துக்குரியது.

சில மாதங்களுக்கு முன்னால் காஷ்மீர் மாநில நிலைமையைப் பரிசீலித்த மோடி அரசு, தனது கொள்கையில் பெரும் மாறுதலைச் செய்துபார்க்க முடிவெடுத்தது. காஷ்மீரத்தின் அனைத்துத் தரப்பு மக்களுடனும் சமரசம் பேசவும் அவர்களுடைய எண்ணம் எதுவென்று அறியவும் தினேஷ்வர் சர்மா, மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார். அவருடைய ஆலோசனைப்படி, பாதுகாப்புப் படை வீரர்கள் மீது கல் வீசிய இளைஞர்களுக்கும் சிறார்களுக்கும் 'பொது மன்னிப்பு' வழங்கப்பட்டது. தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையைப் பாதுகாப்புப் படைகள் நிறுத்தின. அடுத்த கட்டமாக காஷ்மீருக்கு வந்த பிரதமர் சில வளர்ச்சித் திட்ட நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தார். இது போன்ற நடவடிக்கைகள் தொடர்வது பலனளிக்கும்.

காஷ்மீர மக்களுடைய அன்றாட வாழ்க்கையை முடக்கும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாடுகளை மத்திய அரசு விலக்கிக்கொள்ள வேண்டும். இணையத்தள சேவைகளைத் தாற்காலிகமாக நிறுத்திவைப்பதைக் கைவிட வேண்டும். தீவிரவாதிகளுடன் மட்டுமின்றி பாகிஸ்தானுடனும் போர் நிறுத்தம் வலுப்பட வேண்டும். எல்லைக்கு அப்பாலிருக்கும் பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளுடன் இது தொடர்பாகப் பேச வேண்டும். போர் நிறுத்த காலத்தில் விஷமிகள் எல்லைக்கு அருகில் ஆயுதங்களுடன் வந்து குவிவதற்கோ, தாக்குவதற்கோ இடம்தராமல் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

காஷ்மீரில் அமைதி திரும்பவும், தாங்கள் தனித்து விடப்படுகிறோம் என்ற எண்ணம் காஷ்மீரிகளுக்குத் தோன்றாமல் இருக்கவும் அவர்களை முழுமையாக அரவணைக்கும் செயல்களில் அரசு கவனம் செலுத்த வேண்டும். இப்போதைக்கு சமாதானத்துக்கான சாளரம்தான் திறக்கப்பட்டிருக்கிறது. தலைவாசலே திறந்து காஷ்மீரில் முழுமையான அமைதி திரும்புவதற்கு, அரசு மேலும் உறுதியுடன் செயற்பட வேண்டும்!



# யுத்தம் பாதித்த மண்ணில் உருவான மற்றொரு சிக்கல்

வடக்கு, கிழக்கில் முப்பது வருட காலமாக நீடித்த யுத்தத்தினால் சீரழிந்து போன தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வை இன்று நாசம் செய்கின்ற காரணிகளில் ஒன்றாக நுண்கடன் திட்டம் உருவாகியிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் வன்னிப் பிரதேசத்திலும் கிழக்கிலுமே நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் ஆதிக்கம் பெரிதாக வியாபித்திருக்கின்றது.

கடந்த கால யுத்தப் பாதிப்புகளின் விளைவாகப் பாதிக்கப்பட்ட மக்கள் எங்கெங்கு வாழ்கின்றனரோ அங்கெல்லாம் நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களும் தங்களது கால்களைப் பதித்திருக்கின்றன.

நுண்கடன் திட்டங்களால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பாக பல்வேறு ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல்கள், தற்கொலைகள் போன்றவற்றுக்கெல்லாம் நுண்கடன் திட்டங்கள் வழிவகுப்பதாகவும் ஊடகங்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

ஆனாலும் இதனால் உண்டாகின்ற, சமூக சீர்கேட்டை இன்னுமே தடுத்து நிறுத்த முடியாதிருக்கின்றது. சிறு தொகையிலான கடன் வழங்குவதே இந்நிறுவனங்களின் நோக்கமாக இருக்கின்றது.

இதற்காக வடக்கு, கிழக்கின் பிரதான நகரங்களிலும் உப நகரங்களிலும் இந்த நிதி நிறுவனங்கள் தமது அலுவலகங்களைத் திறந்து வைத்துள்ளன.

எங்கெல்லாம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழை மக்கள் வசிக்கின்றனரோ அவர்களை இந்நிறுவனங்கள் இலகுவாகவே இலக்கு வைத்து வளைத்துப் பிடித்து விடுகின்றன.

கோழி வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், ஆடு வளர்ப்பு என்றெல்லாம் சுயதொழில் முயற்சிகளின் பேரில் வறியவர்களுக்கு இந்நிறுவனங்கள் நுண்கடன் (சிறிய தொகைக் கடன்) வழங்குகின்றன.

வடக்கு, கிழக்கிலுள்ள வறிய மக்களைப் பொறுத்தவரை அவர்கள் யுத்தத்தின் விளைவாக அனைத்தையும் இழந்த கையறு நிலையிலேயே உள்ளனர்.

கடலில் தத்தளிப்பவனுக்கு சிறு மரக்கலம் கிடைத்தது போன்று, எந்தவொரு உதவியையும் தட்டிக் கழிக்கின்ற மனோ நிலையில் அவர்கள் இப்போதைக்கு இல்லை.

எந்தவொரு உதவி கிடைத்தாலும் அதனைப் பயன்படுத்திக் கொள்கின்ற வறிய நிலையிலேயே அம்மக்கள் உள்ளனர். இம்மக்களின் பலவீனத்தை நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றன.

கடனாளிகளைத் தேடிப் பிடிப்பதற்காக கிராமங்கள் தோறும் இந்நிறுவனங்கள் முகவர்களை வைத்திருக்கின்றன. நுண்கடன் வலையில் விழுந்து விடும் ஒரு வறிய குடும்பம் பின்னர் மீண்டெழுவதற்கே வழியே இல்லை.

கடன்நடைமுறைகளைஏற்றுக்கொண்டு, பழகங்களில் அத்தாட்சிக் கையெழுத்து இட்டு பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் தவணை முறையில் அதனை மீளச் செலுத்தியே ஆக வேண்டும்.

அவ்வாறு செலுத்தத் தவறுகின்ற போது தான் பிரச்சினைகளும் ஆரம்பமாகின்றன.

நுண்கடன் பெற்றுக் கொண்டவர்களில் கூடுதலானோர் கடனை மீளச் செலுத்தத் தவறுகின்றனர். அவர்களிடம் அதற்கான பணமோ, வருமானமோ இல்லாத நிலையில் கடனை மீளச் செலுத்துவது எவ்வாறு?

ஓரிரு மாதங்கள் மாத்திரம் நிதி நிறுவனங்களை ஏமாற்றி காலத்தைக் கடத்த முடியும். அதன் பிறகு நிறுவனத்தை ஏமாற்றுவது சாத்தியமில்லை.

நிதி நிறுவன ஊழியர்கள் வீடு தேடி வருவதற்கு ஆரம்பித்து விடுவார்கள். முதலில் அறிவித்தல் விடுத்துப் போவார்கள். பின்னர் வந்து மிரட்டுவார்கள். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகப் பயமுறுத்துவர்.

கடனைப் பெற்றுக்கொண்டவர் வட்டியுடன் சேர்த்து பெரும் தொகையொன்றை மீளச் செலுத்த வேண்டியிருக்கும். அதற்காக தனது காணியையோ அல்லது வேறேதும் உடைமையையோ விற்க வேண்டியுமிருக்கும்.

எதுவுமே முடியாத பட்சத்தில் சிலர் தற்கொலை முடிவுக்கும் சென்றிருக்கின்றனர். சுயதொழில் முயற்சிக்காக நுண்கடன் பெற்றுக் கொண்ட பெண்கள் சிலரிடம் பாலியல் ரீதியான அத்துமீறலில் ஈடுபடுவதற்கும் நுண்கடன் நிதி நிறுவன ஊழியர்கள் சிலர் முயற்சிப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

வறுமையைப் பயன்படுத்தி பெண்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் சீர்கேடான நிலைமைக்கு நுண்கடன் திட்டங்கள் வழியேற்படுத்திக் கொடுப்பது தெளிவாகத் தெரிகின்றது.

"நுண்கடன் பெற்றுக் கொண்ட குடும்பங்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது. கடன் செலுத்த முடியாததாலும், நெருக்குதல்களாலும் அக்குடும்பத்தினர் உளரீதியில் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

யுத்தம் பாதித்த மண்ணில் இன்று இதுவொரு பாரிய பிரச்சினை என்கிறார் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிண்ணையடி கிராமத்தில் இயங்கும் விவசாய அமைப்பின் தலைவர் இரத்தினசிங்கம் யோகேஸ்வரன்.

அக்கிராமத்தின் வேறு சில சமூகநல அமைப்புகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார் அவர். ஆலய நிர்வாகங்கள், சமூகநல நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகளெல்லாம் ஒன்றிணைந்து கிராமங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வர வேண்டும் என யோகேஸ்வரன் கூறுகின்றார்.

வறிய மக்கள் சுயதொழில் ஊடாக வருமானத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம் தான். ஆனால் அம்மக்களுக்கு வலிந்து கடனை வழங்கி அவர்களை கடனாளிகளாக்கி, மன உளைச்சலை ஏற்படுத்துவது முறையல்ல.

கடனை மீளச் செலுத்துவதற்கான திராணி அம்மக்களிடம் உள்ளதா என்பதையிட்டு நிதி நிறுவனங்கள் முதலில் முடிவுக்கு வர வேண்டும். அதன் பின்னரே அக்குடும்பங்களுக்கு கடன் வழங்க வேண்டும்.

# facebook குற்ற உணர்ச்சி



(சென்றவார தொடர்ச்சி)

தற்பொழுது இவருக்கு அளிக்கும் ஊதியத்தில் இவரை விட தரமான பணியாளர் இருவர் எடுத்து விடலாம் என்று இவன் கணக்கு போட்டான்.

இரண்டு மூன்று நாட்களாக சாமிநாதனை காணவில்லை. விடுமுறை என்று முன்னறிவிப்பும் செய்யவில்லை. மூன்று நாட்கள் ஆகியும் காணாத நிலையில் கண்ணனை

அழைத்து சாமிநாதன் மூன்று நாளா வரலை, யாரை யாவது ஆளை அனுப்பி என்னாச்சுன்னு பாத்துட்டு வா. சொன்னவரை வியப்புடன் பார்த்தான் கண்ணன். ஒரு தொழிலாளிக்கு ஏன் இவ்வளவு பரிந்து போகிறார். அதுவும் எந்த அறிவிப்புமில்லாமல் விடுமுறை எடுத்ததற்கு கோப படாமல், பதற்றப்படுகிறார் என்று புரியவில்லை, என்றாலும், அப்பா சொன்னபடி ஒரு ஆளை அனுப்பி என்ன விடயம் என்று கேட்டு வர சொல்கிறான்.

வந்து சொன்ன செய்தி உண்மையிலேயே இவனுக்கு வருத்தமடைய செய்தது. அவருடைய மனைவி இறந்து விட்டார்களாம். அதுவும் நீண்ட நாட்களாக மன நிலை சரியில்லாமல் இருந்து நேற்று இறந்து விட்டதாகவும், சாமிநாதன் மறுபடி பணிக்கு வருவது சந்தேகமே என்றும் அந்த பணியாள் சொன்னான். கண்ணனுக்கு மனசு கனத்து போயிற்று.

தனக்கே இப்படி என்றால் அப்பாவுக்கு எப்படி இருக்கும்? மனசுக்குள் நினைத்து பார்த்தவன் மெல்ல சென்று அவர் மனசு அதிச்சியடையா வண்ணம் இந்த செய்தியை சொன்னான்.

அதைக்கேட்ட அப்பா அப்படியே உறைந்து விட்டது போல கண்ணை மூடி சிறிது நேரம் உட்கார்ந்திருந்தவரின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் தான் அப்படி இருந்தார்.

சட்டென விழித்து கண்களை துடைத்துக்கொண்டு, இனி அவன் வேலைக்கு வர மாட்டான் என்று முணு முணுத்தார். கண்ணனுக்கு வியப்போ வியப்பு, சாமிநாதனின் முடிவை பற்றி இவர் எவ்வளவு உறுதியாக சொல்கிறார்.

சரி வா போய் பார்த்து விட்டு வந்து விடலாம் என்று கண்ணனை அழைத்துக் கொண்டு அப்பா சாமிநாதன் வீட்டுக்கு செல்கிறார். அங்கு சாமிநாதன் இவரை கண்டவுடன் மெல்ல எழ முயற்சிக்க வேண்டாம் எழுந்திருக்காதே, என்று சொல்லி விட்டு இவர் அவனருகில் உட்கார்ந்து அவன் தோளை பற்றிக்கொள்கிறார்.

இருவரின் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடுகிறது. இவன் எதுவும் பேசாமல் அங்கிருந்த ஒரு நாற்காலியில் மௌனமாய் உட்கார்ந்திருக்கிறான்.

குடிப்பதற்கு பானம் கொண்டு வந்தவர் சாமிநாதனின் மகனாய் இருக்க வேண்டும். இவன் ஒன்றும் வேண்டாம் என்று சைகையிலேயே சொல்கிறான்.

அப்பாவுக்கு சைகையிலேயே கேட்டவருக்கு அவருக்கும் ஒன்றும் வேண்டாம் சைகையிலேயே சொன்னான்.

அரை மணி நேரம் கழித்து காரில் திரும்பி கொண்டிருந்த கண்ணனிடம் அவன் அப்பா சொல்லிக்கொண்டு வந்தார். இப்ப நீ உயிரோட இருக்கற துக்கு காரணமே அவன் தான்,

அதே மாதிரி அவன் வாழ்க்கை பாழானதுக்கு காரணமும் நீதான். சொல்லிவிட்டு அவன் முகத்தை பார்க்க, கண்ணன் அதிர்ந்து போனான். புரியலேப்பா, சொன்ன கண்ணனிடம் இந்த கம்பனி ஆரம்பிக்கறதுக்கு முன்னால, நானும் சாமிநாதனும் ஒண்ணாத்தான் ஒரு கம்பனியில வேலை செஞ்சுட்டு இருந்தோம். நான் எப்படியாவது முன்னுக்கு வரணும்னு துடிச்சுகிட்டு இருந்த நேரம். நாங்க ஒரு நாள் ஊட்டிக்கு பிக்னிக் கிளம்பி போனோம், அங்கிருக்கற போட் ஹவுசுல தான், கைக் குழந்தயா இருந்த நீ, உன் அம்மா, மூணு பேரும், இன்னொரு படகுல சாமிநாதன், அவன் சம்சாரம், இவங்க இரண்டு பேரும் இருந்தாங்க. நல்ல வேலையா அவனோட குழந்தைங்க இரண்டு பேரும், அப்ப அவங்க ஊர்ல திருவிழான்னு சொல்லி ஊருக்கு போயிருந்தாங்க.

நாம போயிட்டிருந்த படகு திடீருன்னு ஒரு சுழல் காத்துல சுத்தி உங்கம்மா கையில இருந்த நீ தண்ணிக்குள்ள விழுந்திட்டே. அதே மாதிரி சாமிநாதன் போன படகும் சுழலுல மாட்டி சுத்திட்டு இருந்தப்ப இவன் எங்க படகுல இருந்து குழந்தை விழுகிறத பாத்துட்டு உடனே தண்ணிக்குள்ள பாஞ்சு வந்து உன்னை எப்படியோ தூக்கி படகுல போட்டுட்டான்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1431

Search for people, places and things | Nagendram Home

### கிருபவன்

பணம் இருப்பவர்கள் புதுவித உணவுக்கு ஆசைப்படுகின்றனர்...



பணம் இல்லாத ஏழைகள் ஒருவேளை உணவுக்கு கஷ்டப்படுகின்றனர்...

### ஆதி

கோபம் மனதில் இருக்கக்கூடாது வார்த்தையில்தான் இருக்க வேண்டும்



அன்பு வார்த்தையில் மட்டும் இருக்கக்கூடாது மனதிலும் இருக்கவேண்டும்...!


### பிரணவன்

இழப்புக்கள் எப்படி வாழவேண்டும் என்று கற்றுக் கொடுக்கும்...



இழந்தவை நமக்கு நினைவுபடுத்தும் இழப்பின் வலி என்னவென்பதை...!

### அபிரா



மை சிந்தாத பேனாவாலும் வியர்வை சிந்தாத மனிதனாலும் எதையும் சாதிக்க முடியாது...!

### சிலோஜினி

தள்ளாடும் வயது வரும் முன்பு உனக்கென சேர்த்துக் கொள்



தனித்து வாழாவிட்டாலும் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழலாம்...!

### கார்த்திகா



ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல... உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே- டாக்டர் அப்துல் கலாம்.


நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 134

## முரண்பாடுகளை தவிர்க்க...





ஒருவரை விமர்சித்து மதிப்பிட்டு அவருடன் முரண்பட்டு தோபமுற்று போட்டியிட்டு அவரின் நடத்தைகளை மாற்ற முயன்று வாதிட்டு எமது மன அமைதியையும் நேரத்தையும் மனமகிழ்வையும் விரயமாக்குவது ஆரோக்கியம் ஆகாது.


அதற்குப் பதிலாக அவரை அவரது தனித்துவங்களுடனும் குணாதிசயங்களுடனும் ஏற்றுக் கொள்ளக்கூடிய. சேர்த்துக்கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்வது பயன்தரும்.

வாதிட்டுப் பேசும் வார்த்தைகளிலும் பார்க்க மௌனங்கள் பலமானவை. பல அர்த்தங்கள் பொசிந்தவை. மௌனங்களும் மன்னிப்புகளும் பலரை சிந்திக்க வைத்து நல்வழிப்படுத்தும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்



## தாய்ப்பாலூட்டும் தாய்மார் கவனத்திற்கொள்ள வேண்டியவை



### தாய்ப்பால்

- தாய்ப்பாலானது குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான சகல ஊட்டச்சத்துக்களும் சரிவிகித அளவில் நிரம்பிய ஆகாரமாகும்.
- தாய்ப்பாலானது நோயெதிர்ப்பு சக்தி மிக்கது. ஆரம்பத்தில் சுரக்கும்சீம்பால் (Colostrum) பல வகையான நோய்த்தாக்கங்களிலிருந்து குழந்தைக்கு பாதுகாப்பளிக்கும்
- தாய்ப்பாலானது இலகுவில் சமிபாடடையக்கூடிய பதார்த்தங்கள் நிரம்பியது.
- இலவசமாகக் கிடைக்கக் கூடிய பணச்செலவற்ற ஒன்றாகும்.

### தாய்ப்பாலூட்டும் கால அளவு

- குழந்தை பிறந்து அரை மணித்தியாலத்திற்குள் தாய்ப்பாலூட்ட ஆரம்பிக்க வேண்டும்.
- குழந்தை பிறந்ததிலிருந்து ஆறுமாத காலம் வரை தனித்தாய்ப்பால் மட்டுமே ஊட்ட வேண்டும்.
- தாய்ப்பால் தவிர்ந்த வேறு எந்த ஆகாரமும் (நீர், கற்கண்டு, நீர், கொத்தமல்லி நீர் போன்றன) குழந்தையின் முதல் ஆறுமாத காலப் பகுதிக்குள் கொடுக்கக் கூடாது.
- தாய்ப்பாலூட்டலை குழந்தையின் இரண்டு வயது வரை தொடரலாம்.
- குழந்தை பிறந்து 06 மாத காலப்பகுதிக்குப் பின் உபஉணவு ஊட்ட ஆரம்பிக்க வேண்டும்.
- குழந்தைக்கு தாய்ப்பாலூட்டும் போது ஒரு மார்பகத்தால் 20 தொடக்கம் 30 நிமிடங்கள் வரை கொடுக்க வேண்டும்.
- இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை தாய்ப்பாலூட்ட வேண்டும். குறிப்பாக நாள் ஒன்றிற்கு 08 தொடக்கம் 12 தடவைகள் தாய்ப்பாலூட்ட வேண்டும்.
- ஒரு தடவை ஒரு மார்பகத்தால் தாய்ப்பால் ஊட்ட வேண்டும். அடுத்த தடவை மற்றைய மார்பகத்தால் தாய்ப்பாலூட்ட வேண்டும்.
- ஒரு தடவை தாய்ப்பால் ஊட்டும் போது இரண்டு மார்பகங்களாலும் மாற்றி மாற்றி தாய்ப்பாலூட்டல் பயனற்றது. ஏனெனில் பாலூட்டும் போது ஆரம்பத்தில் நீர்த்தன்மையான பால் சிறிது நேரத்திற்கு வரும் பின்னர்தான் கொழுப்பு நிறைந்த பால் வரும்.

இரண்டு மார்பகங்களினாலும் மாற்றி மாற்றி கொடுக்கையில் நீர்த்தன்மை மிக்க பால் மட்டுமே குழந்தைக்கு கிடைக்கும். மாறாக கொழுப்புச்சத்து செறிந்த பால் கிடைக்காது. கொழுப்புச் செறிந்த பால் தான் குழந்தையின் வளர்ச்சிக்கும் நிறை அதிகரிப்புக்கும் காரணமாகும்.

### தாய்ப்பாலூட்ட முன் தாய் கவனிக்க வேண்டியவை

- தாய் சுத்தமான பாலூட்டக் கூடிய சௌகரியமான ஆடை அணிந்திருத்தல் வேண்டும்.
- மார்பகங்கள், கமக்கட்டுப் பகுதியை ஒவ்வொரு தடவை பாலூட்ட முன்பும் சுத்தமாகக் கழுவி வியர்வை மணமற்று வைத்திருத்தல் வேண்டும்.
- பாலூட்டும்தாய் போசாக்கு மிக்க உணவு உள்ளெடுத்தல் வேண்டும்.
- போதியளவு நீராகாரம் தாய் உள்ளெடுத்தல் வேண்டும்.
- அமைதியான தனிமையான சூழலை தெரிவு செய்தல் சௌகரியமான தாயப் பாலுட்டலுக்கு வழிவகுக்கும்.



- தமது வசதிக்கேற்ற ஓர் சௌகரியமான பாலூட்டும் நிலையை (உட்கார்ந்து / படுத்திருந்து) தாய் தெரிவு செய்தல் வேண்டும்

### தாய்ப்பாலூட்டும் போது கவனிக்க வேண்டியவை

- தாயும் சேயும் சௌகரியமான நிலையில் இருத்தல்.
- தேவை ஏற்படின் தலையணையின் உதவியுடன் சௌகரியத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்.
- குழந்தையின் வாய் அகலத்திறந்திருத்தல் வேண்டும்.
- குழந்தையின் வாய் மார்பகத்துடன் தொடுகையில் இருக்கையில் குழந்தையின் கீழ் உதடு வெளி நோக்கித் திரும்பி இருத்தல் வேண்டும்.
- குழந்தையின் நாடி தாயின் மார்பகத்தை அழுத்திய வண்ணம் இருத்தல் வேண்டும்.
- முலைக்காம்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள கருமை நிறமான பகுதியின் (ஏரியோலா) பெரும்பகுதி குழந்தையின் வாயினுள் இருத்தல் வேண்டும்.
- மேற்கூறிய நிலையில் பாலூட்டுவதனூடாக குழந்தை சௌகரியமாகத் தாய்ப்பாலை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் தாயின் மார்பகத்தில் வலி.வெடிப்பு போன்றவை ஏற்படாது.

### தாய்ப்பால் போதியளவு குழந்தைக்கு கிடைக்கிறது என்பதை எவ்வாறு உறுதிப் படுத்திக் கொள்ளலாம்

- குழந்தை தாய்ப்பால் அருந்திய பின் அழுகையை நிறுத்தல்.
- தாயாரின் மார்பில் காணப்பட்ட கனத்த தன்மை குழந்தைக்குப் பாலூட்டியபின் அற்றுப் போதல். (பாரமற்றது போல் உணரல்)
- ஒரு நாளைக்கு குழந்தை குறைந்தது 06 தடவைகளாவது சிறுநீர் கழித்தல்.
- மாதாந்தம் குழந்தையின் நிறையை அளவிடுகையில் சீரான நிறை அதிகரிப்புக் காணப்படுதல்.

திருமதி.குயிலினி சுரேஷ்
தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்